T. 2853

# சாசனச் செய்யுள் மஞ்சரி

தொகுத்து வெளியிட்டவர்

**மயிலை - சீனி. வேங்கடசாமி**
அவர்கள்

சாகித்திய அக்கடமி
உதவியுடன் வெளியிடப்பட்டது

முதற் பதிப்பு : மார்ச்சு, 1959

விலை ரூபா மூன்று

கிடைக்குமிடம் :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை - 1

மங்கை அச்சகம்

25, மாவடி விநாயகர் கோயில் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 14

# முகவுரை

பழைய சாசன வெளியீடுகளைப் படித்துக்கொண்டிருந்த போது அவற்றின் இடையிடையே சில சாசனங்கள் செய்யுளாக அமைந்திருப்பதைக் கண்டேன். கண்டபோது, அச் செய்யுட்களைத் தொகுத்துவைப்பது நலம் என்று தோன்றியது. வெவ்வேறு காலத்திலே வெவ்வேறு இடங்களில் இருந்த புலவர்கள் அவ்வப்போது பாடிய தனிச் செய்யுட்களைப் பிற்காலத்தவர் தொகுத்துத் **தனிப்பாடற்றிரட்டு** என்னும் பெயருடன் வெளியிட்டிருப்பதைப் படித்து நாம் பல செய்திகளைத் தெரிந்துகொள்கிறோம். அதுபோலவே, வெவ்வேறு ஊர்களிலே வெவ்வேறு காலத்தில் சாசனங்களிலே எழுதப்பட்ட செய்யுள்களைத் தொகுத்து வெளியிட்டால், அது தமிழ் இலக்கிய வரலாற்றினை ஆராய்வதற்கும், அக்காலத்து அரசியல் சமூக இயல் வரலாறுகளைத் தெரிந்து கொள்வதற்கும் பெரிதும் துணையாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆகவே, சாசனங்களில் காணப்படுகிற செய்யுள்களைத் தொகுத்துச் **'சாசனச் செய்யுள் மஞ்சரி'** என்று பெயரிட்டு அமைத்தேன்.

பிறகு, இதுபோன்று, கன்னடம் தெலுங்கு சம்ஸ்கிருதம் என்னும் மொழிகளில் உள்ள சாசனங்களிலும் செய்யுள்கள் இருப்பதையறிந்து, அச்செய்யுள்களைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்களா என்றறிய, அறிந்தவர்களை உசாவினேன். கன்னடம் தெலுங்கு சம்ஸ்கிருத மொழிகளில் உள்ள சாசனச் செய்யுட்களைத் தொகுத்து அந்தந்த மொழியில் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்தேன். ஆகவே, நான் தொகுத்த தமிழ்ச் சாசனச் செய்யுட்களை அச்சிட்டு வெளியிடவேண்டும் என்று எண்ணினேன்.

சாசனங்களிலே, பெரும்பாலும் அரசர்களின் மெய்க் கீர்த்திகள் செய்யுளாக அமைந்திருக்கின்றன. அந்த மெய்க் கீர்த்திச் செய்யுட்களை மட்டும் சிலர் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால், மெய்க்கீர்த்தி அல்லாத வேறு தனிச் செய்யுட்களைத் தொகுத்து இதுவரையில் சரிவர அச்சிடவில்லை. ஆகவே, மெய்க்கீர்த்திச் செய்யுட்களைத் தவிர, ஏனைய சாசனச் செய்யுட்களைத் தொகுத்து வெளியிடுவது மிகத் தேவையானதென்பதைக் கண்டேன். ஏனென்றால், சாசனங்களைத் தொகுதி தொகுதியாக அச்சிட்டிருக்கிற செய்தி பலருக்குத் தெரியாது. தெரிந்த சிலரில், பலர் சாசன வெளியீடுகளைப் படிப்பது இல்லை. பெரும்பாலும் புத்தக சாலைகளில் (இரண்டொரு புத்தகசாலைகள் தவிர) சாசன வெளியீடுகள் காணப்படுவது இல்லை. சில சாசன வெளியீடுகள் இப்போது விலைக்குக் கிடைப்பதும் இல்லை. இவ்வாறு சாசன வெளியீடுகள் கிடைப்பதற்கு அரிய அரும்பொருளாக உள்ளன.

அரிதில் முயன்று தேடிக் கண்டுபிடித்தாலும், வசன சாசனங்கள் எவை, செய்யுள் சாசனங்கள் எவை என்பதைக் கண்டுபிடிப்பது எளிய காரியம் அல்ல. ஏனென்றால், கருங்கல்லிலும் செப்பேட்டிலும் சாசனச் செய்யுள்களைச் செதுக்கியவர்கள், செய்யுள்களைச் செய்யுள் அமைப்புப்படி அடி பிரித்து எழுதாமல், வசனங்களை எழுதிவைப்பதுபோல எழுதி வைத்தார்கள். இதனால், வசன சாசனங்களிலிருந்து செய்யுட் சாசனங்களைப் பிரித்தறிவது எளிதானதல்ல. அதிலும் அச்சுப் புத்தகங்களில் செய்யுள்களைப் படித்துப் பழகியவர்கள், (ஓலைச்சுவடியில் செய்யுள்களைப் படித்துப் பழகாதவர்கள்) சாசனங்களிலுள்ள செய்யுள்களைக் கண்டறிவது மிகமிகக் கடினமானது. சிறிதாவது செய்யுள் இலக்கணம் அறிந்தவர்களும் செய்யுள்களை ஏட்டுச்சுவடியில் படித்துப் பழகியவர்களுந்தான் சாசனங்களில், அடிபிரித்து எழுதாமல் நெடுக எழுதியுள்ள செய்யுட்களைக் கண்டறிய முடியும்.

மேலும், இந்திய சாசனங்கள் என்னும் சாசன வெளியீட்டில், சாசன வாசகங்களை இலத்தின் (ஆங்கில) எழுத்தினால் அச்சிட்டிருக்கிறார்கள். தமிழ் தெலுங்கு கன்னடம் முதலிய மொழிகளில் எழுதப்பட்டுள்ள சாசனங்களை ஆங்கில எழுத்தில் அச்சிட்டால் அவற்றை யார் படிப்பார்கள்? இவ்வாறு பதிப்பித்துள்ள சாசனங்களைப் படிப்பதில் உச்சரிப்பு இடர்ப்பாடுகள் பல உண்டு.

இது ஒருபுறமிருக்க, தமிழ் எழுத்தில் பதிப்பித்துள்ள சாசனங்களைப் படிப்பதிலும் எழுதுவதிலும் சில இடர்ப்பாடுகளும் துன்பங்களும் உண்டு. 'எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்' என்னும் பழமொழி ஓலைச்சுவடிகளை எழுதினவர்களுக்கு மட்டும் அல்லாமல், செப்பேட்டை எழுதினவனுக்கும் கருங்கல்லில் எழுதினவனுக்கும்கூட முழுவதும் பொருந்தும். எப்படி என்றால், இவர்கள் எல்லோரும், புள்ளி பெறவேண்டிய எழுத்துக்களுக்குப் பெரும்பாலும் புள்ளிவைத்து எழுதுவதில்லை; மிக அருமையாக யாரோ ஒருவர்தான் புள்ளி அமைத்து எழுதுவார்கள். இதில் உள்ள இன்னொரு சங்கடம் என்னவென்றால், இக்காலத்து மெய்யெழுத்துக்களைப்போலவே அக்காலத்து மெய்யெழுத்துக்களும் புள்ளிபெற்றிருந்ததோடு எகர ஒகரக் குற்றெழுத்துக்களும் அக்காலத்தில் புள்ளிபெற்றிருந்தன.

இக்காலத்தில் எகர ஏகார ஒகர ஓகாரங்களுக்குத் தனித்தனி எழுத்துக்கள் புள்ளியிடப்படாமல் எழுதப்படுகின்றன. ஆனால், அக்காலத்தில் இவ்வெழுத்துக்களைப் புள்ளி அமைத்தும், புள்ளி அமைக்காமலும் எழுதிவந்தார்கள். புள்ளியிடப்பட்ட எகர ஒகரங்கள் குற்றெழுத்தாகவும் புள்ளியிடப்படாத எகர ஒகரங்கள் நெட்டெழுத்தாகவும் அக்காலத்தில் வாசிக்கப்பட்டன. ஆனால், கல்லிலும் செம்பிலும் ஏட்டிலும் எழுதிய அக்காலத்து எழுத்தாளர்கள் புள்ளியிடவேண்டிய எழுத்துக்களுக்கும் (எகர ஒகர மெய்யெழுத்துக்கள்) புள்ளியிடாமல் எழுதிவைத்தார்கள். எகர ஒகரக் குற்றெழுத்துக்களுக்கும்

மெய்யெழுத்துக்களுக்கும் புள்ளியிட்டெழுத வேண்டும் என்று நன்னூல் சூத்திரமும் தொல்காப்பியச் சூத்திரமும் கூறுகின்றன.

" மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் "

என்றும்,

" எகர ஒகரத் தியற்கையும் அற்றே "

என்றும் தொல்காப்பிய இலக்கணம் (எழுத்ததிகாரம், சூத்திரம் 15, 16) கூறுகிறது.

" தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்டு
எய்தும் எகர ஒகரமெய் புள்ளி "

என்று நன்னூல் சூத்திரம் கூறுகிறது.

இந்த இலக்கண முறைப்படி புள்ளி பெறவேண்டிய எழுத்துக்கள் எவை என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டால்தான், சாசனங்களைப் பிழையில்லாமல் படித்து அறிய முடியும். இல்லையேல் தவறுகள், பெருந்தவறுகள் ஏற்படும். சில உதாரணங்களைக் காட்டுவோம் :

எறு, ஒது என்று சாசனங்களில் எழுதியிருந்தால் இவற்றை முறையே ஏறு, ஓது என்று வாசிக்கவேண்டும், பழைய இலக்கண முறைப்படி. இவற்றின்மேல் புள்ளி இல்லாதபடியால் இவ்வெழுத்துக்களை நெட்டெழுத்தாகக் கொள்ளவேண்டும். (ஆனால், புள்ளியிடாமலே எழுதுவது அக்காலத்து எழுத்தாளர் வழக்கமாகையால் இதை நெட்டெழுத்தாகக் கொள்வதா, குற்றெழுத்தாகக் கொள்வதா என்கிற ஐயம் ஏற்படுகிறது.) இவ்வாறே மெகம, செரி, மெய, தெனருநத, பெசி, முனறு, தெஙகமழ, செவவெல, வெடகை, வெறு, செறு, தெவர, குணடுர, தநதென என்று சாசன எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கும். இவற்றை

முறையே மேகம், சேரி, மேய், தேனருந்த, பேசி, மூன்று, தேங்கமழ், செவ்வேல், வேட்கை, வேறு, சேறு, தேவர், குண்டூர், தந்தேன் என்று இடமறிந்து வாசிக்கவேண்டும்.

கொடல, கொலவளை, மலரொன, பொல, பெரருளான, நொககி, சொனனெம, கொளரி, பொதிகிழல, பொரத தனன, வானறொய, தெனறொய, கொளரவம, மெநதன என்று சாசனங்களில் எழுதப்பட்டிருக்கும். இவற்றை முறையே கோடல், கோல்வளை, மலரோன், போல, பேரருளான், நோக்கி, சொன்னேம், கோளரி, போதிகிழல், போர்த்தன்ன, வான்றோய், தேன்றோய், கோளரவும், மேந்தன் என்று இடமறிந்து வாசிக்கவேண்டும்.

சில சொற்கள், இகரத்திற்கும் ஈகாரத்திற்கும் வேறுபாடு தோன்றாமல் எழுதப்பட்டிருக்கும். விதி, வெலை, நிர், நிலம், கண்டிர, திரும, சிரமை, நிடிய, விரன என்றிருப்பதை முறையே வீதி, வேலை, நீர், நீலம், கண்டீர், தீரும், சீர்மை, நீடிய, வீரன் என்று வாசிக்கவேண்டும். இவ்வாறு பண்டைக் காலத்துச் சாசன எழுத்துக்களை வாசிப்பதில் சில இடர்ப்பாடுகள் உள்ளன.

இத்தகைய இடர்களும் துன்பங்களும் ஒருபுறமிருக்க, வேறு சில துன்பமும் காணப்பட்டன. அவை என்னவென்றால், சாசனச் செய்யுள்கள் சிலவற்றில் இடையிடையே சில பல எழுத்துக்கள் மறைந்துள்ளன. இடையிடையே எழுத்துக்கள் மறைந்துபோன செய்யுள்களை அடிபிரித்துச் செய்யுள் உருவத்தில் அமைப்பது கடினமானது. கட்டளைக் கலித்துறை போன்ற செய்யுட்கள் சிலவற்றில், செய்யுள் இலக்கண முறைக்கு மாறுபட, சில அடிகளில் அதிக எழுத்துக்களும் சில அடிகளில் குறைந்த எழுத்துக்களும் காணப்படுகின்றன. அவை, எழுத்துக்களைச் செதுக்கிய சிற்பிகளின் அறியாமையினால் நேர்ந்த பிழைகளாகும். அப்படிப்பட்ட செய்யுள்களை உள்ளது உள்ளபடியே அமைத்து எழுதியுள்ளேன்.

சாசனத்தில் உள்ள செய்யுள்களை அடிபிரித்து அமைத்ததும், எகர ஒகர மெய்யெழுத்துக்களை ஆராய்ந்து தக்கவாறு சொற்களை அமைத்ததும் தவிர ஏனைய திருத்தங்கள் எதையும் நான் செய்யவில்லை. செய்யுள் களில் எழுத்துக்கள் தவறாக இருந்தாலும், அதிகமாகவோ குறைவாகவோ இருந்தாலும், அவற்றை உள்ளது உள்ள வாறே எழுதியுள்ளேன். இந்த வகையில் குறைபாடு காணப் பட்டாலும் அவை தவிர்க்க முடியாதவை என்பதை வாசகர் அறியவேண்டும்.

சாசனச் செய்யுள்களை மட்டும் அச்சிடுவதால் பய னில்லை. அவற்றிற்கு விளக்கங்களும் குறிப்புக்களும் எழுதினால் பெரிதும் பயன்படும் என்றறிந்து, ஒவ்வொரு செய்யுளுக்கும் விளக்கமும் குறிப்பும் எழுதியுள்ளேன். மேலும் அவை உள்ள, அல்லது கிடைத்த இடங்களையும், அவை அச்சிடப்பட்டுள்ள வெளியீடுகளின் பெயர்களையும் காட்டியுள்ளேன். கால வரையறைப்படி செய்யுட்களைத் தொகுப்பதில் குறைகள் உள்ளபடியால் அப்படித் தொகுக் காமல், மாவட்ட முறையாகச் செய்யுள்களைத் தொகுத் துள்ளேன்.

தென் இந்திய சாசனங்கள், இந்திய சாசனங்கள், புதுக்கோட்டை சாசனங்கள், திருவாங்கூர் சாசனங்கள், கர்னாடக சாசனங்கள் ஆகிய சாசன வெளியீடுகளில் உள்ள சாசனச் செய்யுட்களைத் தொகுத்துள்ளேன். செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்துள்ள சில சாசனச் செய்யுள்களை யும் இதனுடன் தொகுத்துள்ளேன். இதுவரையில் வெளி வராத புதிய சாசனச் செய்யுள் ஒன்றையும் இதனுடன் பிற்சேர்க்கையாகச் சேர்த்துள்ளேன். இந்தப் புதிய சாசனச் செய்யுளை இதில் அச்சிடக்கொடுத்துதவியவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆராய்ச்சித்துறை விரிவுரை யாளரும், சாசன ஆராய்ச்சியிலும் சரித்திர ஆராய்ச்சியி லும் வல்லவருமான உயர்திரு T. V. சதாசிவ பண்டாரத்தார்

அவர்கள். அப்பெரியாருக்கு மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழிலே சாசனச் செய்யுட்கள் இவ்வளவுதான் என்று நினைக்கவேண்டா. இன்னும் நூற்றுக்கு மேற்பட்ட செய்யுள்கள் உள்ளன. அவை அச்சிடப்படாமல் எபிகிராபி இலாகாவில், வைக்கப்பட்டு, உலகத்துக்குப் பயன்படாமல் உள்ளன. இப்போது எனக்குக் கிடைத்தவரையில் சாசனச் செய்யுள்களை அச்சிடுகிறேன். இந்த நூலில் உள்ள செய்யுட்கள், தமிழ் இலக்கியத்தை ஆராய்வதற்கும், பண்டைக் காலத்துச் சமுதாய வாழ்க்கை நிலை, அரசியல் நிலை, வரலாற்றுச் செய்தி முதலியவைகளை ஆராய்வதற்கும் பெரிதும் பயன்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

'சாசனச் செய்யுள் மஞ்சரி' என்னும் இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கு உதவிபுரியவேண்டுமென்று டில்லியில் உள்ள சாகித்திய அக்கடமி என்னும் கழகத்தைக் கேட்டுக்கொண்டேன். அக்கழகத்தார் தமது தமிழ்க் குழுவின் மூலமாக இத்தொகுப்பை ஆராய்ந்து, அக் குழுவின் இசைவு பெற்று, இந்நூலை வெளியிடும் செலவுக்காக ரூபா ஐந்நூறு நன்கொடையாக வழங்க உடன்பட்டனர். ஆகவே இந்நூல் சாகித்திய அக்கடமியின் ஆதரவில் வெளிவருகிறது. இவ்வுதவியை அளித்தருளிய சாகித்திய அக்கடமிக்கும், அதன் தமிழ்க் குழுவுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மயிலாப்பூர், சென்னை
15-3-1959

**சீனி. வேங்கடசாமி**

படம் - I



[இது பல்லவர் காலத்துத் தமிழ் எழுத்து. கி. பி. 9-ஆம் நூற்றுண்டில் எழுதப் பட்டது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருவெள்ளறைக் கிராமத்தில் 'நாலு மூலைக் கேணி' என்னும் மாற்பிடுகு பெருங்கிணற்றுச் சுவரில் எழுதப்பட்டுள்ளது. இதன் வாசகத்தை அடுத்த பக்கம் காண்க.]

இந்நூல் 67, 68-ஆம் பக்கம் காண்க.

கண்டார் காணு வுலகத்திற் காதல் செய்து நில்லாதேய்
பண்டேய் பரமன் படைத்தநாள் பார்த்து நின்று னையாதேய்
தண்டார் மூப்பு வந்துன்னைத் தளரச் செய்து நில்லாமுன்
னுண்டேல் லுண்டு மிக்கது உலகம் மறிய வைம்மினேய்.

[முன்பக்கத்தில் காட்டப்பட்ட பல்லவர் காலத்துத்
தமிழ் எழுத்தின் வாசகம்.]

படம் - II



[இது வட்டெழுத்து. ஒருகாலத்தில் தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்ட எழுத்து இது. இவ்வெழுத்தின் வாசகத்தை அடுத்த பக்கம் காண்க.]

## வட்டெழுத்துப் படத்தின் வாசகம்

தென்னவர்தந் திறலாணைச்
    சிலையொடுபுலி கயலிணைமன்
பொன்னிமையச் சிமையத்து
    விறற்கருவி இற்றைக்குந்
தொழில்செய்து வந்தவர் பின்னோன்
    செயல்பல பயின்றோர் முன்னோன்
திருமலிசாசன மிதற்குச்
    செழுந்தமிழ் பாடினோனற்றை
நிருபசேகரப் பெருங்கொல்லன்
    நீள்புகழ் நக்கனெழுத்து.

[இந்நூல், சாசனச் செய்யுளின் கடைசி ஐந்து அடிகள். 156-ம் பக்கம் காண்க.]

## ஆசிரியரின் பிற நூல்கள்

மறைந்துபோன தமிழ் நூல்கள்

தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்

மூன்றும் நந்திவர்மன்

மகேந்திரவர்மன்

நரசிம்மவர்மன்

சமணமும் தமிழும்

பௌத்தமும் தமி

கிறித்துவமும் தமிழும்

இறைவன் ஆடிய
எழுவகைத் தாண்டவம்

கௌதம புத்தர்

பௌத்தக் கதைகள்

அஞ்சிறைத் தும்பி

மகாபலிபுரத்து ஜைன சிற்பம்

# பொருளடக்கம்

[எண்கள் பக்கத்தைக் குறிக்கின்றன]


முகவுரை **3**

படம் - I **10**

படம் - II **12**

செங்கற்பட்டு மாவட்டம்: சுந்தரபாண்டியன் 1. கோதண்ட ராமன் 2. மணியன் பெருங்கன் 2. திருமால் மாவலி வாணன் 4. சண்டேசுவரர் 5.

வடஆர்க்காடு மாவட்டம்: மகதைப் பெருமாள் 7. மகதைப் பெருமாள் 12. ஆட்கொண்டான் 13. கோப்பெருஞ் சிங்கனும் ஆட்கொண்ட தேவனும் 14. காடவராயர் 19. விடுகாதழகிய பெருமாள் 21. குணவீர முனிவர் 23. கோப்பெருஞ் சிங்கன் 24. வீரவீர ஜினாலயம் 27. ஆலத்தூர் திவாகரன் 29. குராமரம் 30.

தென்ஆர்க்காடு மாவட்டம்: சுந்தரபாண்டியன் 31. சுந்தர பாண்டியன் 32. சுந்தரபாண்டியன் 33. சோழகுல வல்லி 34. விக்கிரம பாண்டியன் 35. சுந்தர பாண்டியன் 35. நரலோக வீரன் 36. விக்கிரம பாண்டியன் 43. விக்கிரம பாண்டியன் 45. பல்லவர் கோன் 46. குந்தவை யாழ்வார் 47. கம்பன் மூவேந்த வேளான் 49. அரும் பாக்க எல்லை 58. கம்பன் வீதிவிடங்கன் 59. காடவர் கோன் பாவை 61. புத்தன் இராசசிங்கன் 62. நரேந்திரப் போத்தரையன் 63. காடவராயர்கள் 64. அடையவளைந்தான் வீரர் 67.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்: அறவுரை 67. குருகூர் நம்பி 69. சிராமலையந்தாதி 70. நக்கன் திருவேகம்பன் 89. பத்மநாப நாராயணன் 90. பட்டினப்பாலை மண்டபம் 91.

**தஞ்சாவூர் மாவட்டம்:** சுவரன் மாறன் 92. சிவலோகநாதன் 97. கச்சியர்கோன் 98. கந்தன் மாதவன் 99.

**புதுக்கோட்டை:** வேதவனமுடையான் 101. உமையாள் நகைப்பு 102. பங்களராயர் 103. மாதை வீரன் 104. ஆதி வானவதரையன் 105. சொக்கநாத இலக்கயன் 106. இளங்கோமான் வாணன் 106. சோளிவீரராயன் 107. மாவலிவாணன் 108. மாவலிவாணன் 108. மாவலி வாணன் 109. பாண்டியன் புகழ் 110. பாண்டியன் வெற்றி 111. கோனூர் குறிச்சி 112. மாகதன் பொன் பரப்பினுன் 112. சேதுபதி தானம் 113.

**இராமநாதபுர மாவட்டம்:** இராமநாத முனிவர் 114. இராம நாத முனிவர் 115. இராமநாத முனிவர் 116.

**திருநெல்வேலி மாவட்டம்:** அதிவீரராமனின் தருமம் 117. குல சேகர பாண்டியன் 118. குலசேகர பாண்டியன் 119. ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம் 119. பராக்கிரம பாண்டியன் 120.

**கன்னியாகுமரி மாவட்டம்:** அய்யனம்பி 123. ஐயனம்பி 124.

**திருவாங்கூர்:** திருவிக்கிரமன் 124. தாமோதரன் 126.

**சித்தூர் மாவட்டம்:** இராசகண்ட கோபாலன் 127. ஔள நாதன் 128. புடோலி அரசன் 129. நம்பி அப்பி 130. காமவில்லி 131.

**ஆந்திர நாடு:** நின்ருடுவான் 132. பஞ்சநதி முடிகொண் டான் 133.

**மைசூர் நாடு:** கங்கப் பெருமாள் 134. பிரமராயன் 136. பெரியான் 139. செட்டிதேவன் 141.

**இலங்கை:** ஆரியச் சக்கரவர்த்தி 144. தன்மபாலன் 145.

**இணைப்பு:** பராந்தகன் வீரநாராயணன் 146.

BIBLIOGRAPHY 158

# சாசனச் செய்யுள் மஞ்சரி

## சுந்தரபாண்டியன்

இடம் : செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சீபுரம் தாலுகா, திருப்புட்குழி, விஜயராகவப் பெருமாள் கோவில் முன் மண்டபத்துக் கிழக்கு மேடைச் சுவர்.

பதிப்பு : எண் 455. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஆறு. (No. 455. S. I. I. Vol. VI.)

விளக்கம் : இந்த மண்டபத்தை அமைத்தவர், எடுத்தகை அழகியான் பல்லவராயர் என்பவர். பெருமாள் குலசேகர தேவரான சுந்தர பாண்டியனை வாழ்த்துகிறது இந்தக் கவி.

### சாசனச் செய்யுள்

வாழ்க கோயில் பொன்மேய்ந்த மகிபதி
வாழ்க செந்தமிழ் மாலை தெரிந்தவன்
வாழ்க மண்டலம் யாவையும் கொண்டவன்
வாழ்க சுந்தர மன்னவன் தென்னனேய்.

பெருமாள் குலசேகர தேவர் திருத்தோளுக்கு நன்றாக. எடுத்தகை அழகியான் பல்லவராயர் செய்வித்த தன்மம்.

குறிப்பு :—பண்டைக் காலத்து வழக்கம்போல இச்செய்யுளில், ஏகார ஈற்றெழுத்து யகரமெய் பெற்றுள்ளது.

## கோதண்டராமன்

இடம் : செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சீபுரம் தாலுகா, சின்னகாஞ்சீபுரம். அருளாளப் பெருமாள் (வரதராசப் பெருமாள்) கோவிலைச் சூழ்ந்துள்ள மண்டபங்களின் திண்ணைச் சுவரில் உள்ளது.

பதிப்பு : எண் 853. தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு. (No. 853. S. I. I. Vol. IV.)

விளக்கம் : வசனமாக எழுதப்பட்ட ஒரு சாசனத்தின் அடியில் இந்தச் செய்யுள் காணப்படுகிறது.

*சாசனச் செய்யுள்*

கூர்வேல் வல்ல கோதண்ட ராமன் குலோத்துங்கன்
பேரால் பணித்தமைக்கும் விச்சையம்மன் சேரமான்
வங்கத்தே துங்க வடகொல்லம் கொண்டமைக்கும்
சங்கத் தருங்கடலே சான்று.

---

## மணியன் பெருங்கன்

இடம் : செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சீபுரம் தாலுகா, மாகறல். வைகுண்டபெருமாள் கோவில் மண்டபத்தின் தென்புறச் சுவரிலும், தாயார் சந்நிதி வாயிலின் மேற்புறத்திலும் எழுதப்பட்டுள்ள செய்யுட்கள்.

பதிப்பு : எண்கள் 437, 438. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு. (Nos. 437, 438. S. I. I. Vol. VII.)

விளக்கம் : இராஜராஜ சோழனின் 23-ஆம் ஆண்டில், பட்டியர் போயன் மணியன் என்பவர் இக்கோவிலில் திருப்பணிகள் செய்ததை முதல் செய்யுள் கூறுகிறது.

அண்டம்பாக்கிழான் திருவன் என்பவர், முருகன் கோவிலைக் கட்டியதாக இரண்டாவது செய்யுள் கூறுகிறது.

இந்த முருகன் கோவில் இப்போது தாயார்சந்நிதியாக இருக்கிறது. முன்பு, முருகன் திருவுருவம் இங்கு இருந்ததாகவும், பிற்காலத்தில் அவ்வுருவம் இவ்வூர்ச் சிவன் கோவிலுக்குக் கொண்டுபோகப்பட்டதாகவும் கூறப்படுகிறது. முருகன் இருந்த ஆலயத்தில் இப்போது மடைப்பள்ளி நாச்சியார் என்னும் உருவம் வைக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பூசை கிடையாது. ஆனல், இந்த முருகன் ஆலயம் இப்போது தாயார்சந்நிதி என்று பெயர் கூறப்படுகிறது. இந்த ஆலயத்தின் வாயிலின் மேலே இரண்டாவது செய்யுள் எழுதப்பட்டிருக்கிறது.

முதலாவது செய்யுளின் மேலே கீழ்க்கண்ட வாசகம் எழுதப்பட்டிருக்கிறது :

''ஸ்வஸ்திஸ்ரீ. திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு உ௰௩-வது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் திரு மேற்கோயில் வீற்றிருந்த எம்பெருமான் கோவில் ஸ்ரீவிமானமும் திருவர்த்த மண்டபமும் திருமண்டபமும் சோபனமும் ஸ்ரீபீடமும் இவ்வூர் பட்டியர் போயன் மணியன் பெருங்கன் செய்வித்தான். ஹரி.''

### சாசனச் செய்யுள்

திருமன்னு ஸ்ரீராச ராசற் கியாண்டு சென்ற
விருபத்து மூன்ருவதிற் செந்தளிர் சூழ்
மருமன்னும் பொழிற் றிருமாகறல் திருமேற்கோயில்
மன்னிவீற் றிருந்த பெருமாளுக்கு மண்மேற்
கருமன்னு சீவிமான மத்தமண்டப மேர்கலந்த
மண்டபத்தொடு சோபானஞ் சீபீடந்
தருமன்னுங் கொடைப்பட்டியர் போயன் மணியன்
தரும்பெருங்கன் செய்வித்தான் தருமநிலைபெறவே. 1

சீராச ராசற் காண்டாறிற் றென்மாகறற்
பாரார்புக ழுண்டம் பாக்கிழான்—காரார்
தருப்போல் தருந்திருவன் காழன் முருகன்
திருக்கோயில் செய்தான் சிறந்து.

---

## திருமால் மாவலிவாணன்

இடம்: *செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சீபுரம் தாலுகா, காஞ்சீபுரம். ஏகாம்பரநாதர் கோவிலில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோவில், மேற்கு-தெற்குப்புறச் சுவர்களில் எழுதப் பட்டுள்ளவை.*

பதிப்பு: *எண் 348-A. தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு.* (No. 348-A. S. I. I. Vol. IV.)

விளக்கம்: *திருமால் மாவலிவாணன் என்னும் அரச னுடைய போர்வெற்றியைக் கூறுகின்றன இச்செய்யுட்கள்.*

*சாசனச் செய்யுள்*

அடுகயலை முன்னுளி லாடகக் குன்றிட்ட
வடுமறைந்து போயும் மறையா—முடுகுசமர
மாற்றேர் தொழுந்திருமால் மாவுதைப்ப வேல்வழுதி
தோற்றேடிப் போன சுவடு. 1

மாலாக்கி யிந்திரையைத் திருத்தோள்வைத்து வையமொரு
கோலாற் புரந்தருள மாவலிவாணன் நன்கொற்றவடி
வேலாற் றுரப்புண்டபின் வீரமாறன் வெகுண்டு பண்டு
காலாற் குடித்த கடற் கண்களால் விழக் கண்டனமே. 2

ஏற்றூர்க் கிடாதா ரில்லையென்ப தின்றறிந்தேஞ்
சீற்றத் திருமால் செருவேற்க—மாற்றிலாப்
பொன்னிட்டான் சென்னிகொடிப் பன்னிட்டான் சேரமான்
வென்னிட்டான் கொற்கையார் வேந்து. 3

குறிப்பு :—செய்யுள் 1. ஆடகக் குன்று - பொன்மலை, இமயமலை. திருமால் - திருமால் மாவலிவாணன். மாவலி வாணர் என்னும் வாணாதிராயர்கள், பாண்டியரின் கீழ்ப் படைத்தலைவராக இருந்தவர்கள். பாண்டியர் ஆற்றல் குறைந்த பிற்காலத்தில் இவர்கள் சுயேச்சை பெற்றுப் பாண்டிய அரசர்களைத் தமக்குக் கீழ்ச் சிற்றரசராகும்படிச் செய்தார்கள். இவ்வாணாதிராயர்களில் ஒருவன் திருமால் மாவலி வாணன் என்பவன். செய்யுள் 2. மாவலிவாணனால் துரத்தப் பட்ட வீரமாறன் என்னும் பாண்டியன் வரலாறு தெரியவில்லை. செய்யுள் 3. மூன்றாம் வரியில் கொடிப்பன்னிட்டான் என் றிருப்பது கொடிப்பின்னிட்டான் என்றிருத்தல் வேண்டும். வென்னிட்டான் - முதுகுகாட்டித் தோற்றோடினான்.

---

## சண்டேசுவரர்

இடம் : செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுகா, பெரும்பேர் கிராமம். இவ்வூர் தான்தோன்றீசுவரர் கோவில் முன்மண்டபத்துத் தெற்குச்சுவரில் உள்ள சாசனச்செய்யுள்.

பதிப்பு : எண் 484. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு. (No. 484. S. I. I. Vol. VII.)

விளக்கம் : இது சண்டேசுவரர் ஓலைச் செய்யுள். தண்டீசுவரர் ஓலை என்றும் கூறப்பெறும். சண்டேசுவரர் அல்லது தண்டீசுவரர் என்பவர் சைவ அடியார்களில் ஒருவர். சிவன்கோவில்களில், எல்லா விசாரணைகளையும் செய்யும்படி சிவபெருமான் சண்டேசுவரரை ஏற்படுத்தியதாகப் புராண வரலாறு கூறுகிறது. இந்த வரலாற்றுப்படி, சிவன் கோவில் வரவு செலவு கணக்குகளைச் சண்டேசுவரர் பேரினால் எழுது வது பண்டைக் காலத்து மரபு. இந்தச் செய்யுள் அந்த மரபைக் கூறுகிறது.

"புகழ்மாது விளங்க ஜயமாது விரும்ப" என்று தொடங்குகிற ஒரு சாசனத்தின் கீழே இந்தச் செய்யுள் எழுதப்பட்டுள்ளது.

*சாசனச் செய்யுள்*

சண்டேச்சரன் ஓலை சாகரஞ்சூழ் வையகத்தீர்
கண்டிச்சரன் கரும மாராய்க—பண்டேய்
அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
திறம்பாமைச் சென்னிமேற் கொள்க.

குறிப்பு :—இந்தச் செய்யுள், பாடபேதங்களுடன் வேறு சாசனங்களிலும் எழுதப்பட்டுள்ளது. அவற்றை இங்கே குறிப்பிடுவது அமைவுடைத்து.

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, உடையார் கோயில் திருக்களாவுடைய மகாதேவர் ஆலயத்தின் வடபுறச் சுவரில் உள்ள செய்யுள். (எண் 1041, தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு.)

தண்டிச்சரன் ஓலை சாகரஞ்சூழ் வைய்யகத்து
கண்டிச்சுரன் கருமம் ஆராய்மின்—பண்டே
அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
திறம்பாமல் சென்னிமேல் வைத்து.

தென்ஆர்க்காடு மாவட்டம், விழுப்புரம் தாலுகா, திருவாமாத்தூர், அபிராமேசுவரர் கோவில் முதல் பிராகாரம் தென்புறச் சுவரிலும் இதே செய்யுள் பாடபேதத்துடன் காணப்படுகிறது. (எண் 750, தென் இந்திய சாசனங்கள், தொகுதி எட்டு.)

தண்டேசுரன் ஓலை தாபரஞ்சூழ் வையகத்து
கண்டிசன் கருமம் ஆராய்க—பண்டே
அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
திறம்பாமல் சென்னிமேல் வைத்து.

வெண்ணெயூரில் உள்ள விசுவநாதர் கோவிலில், இதே செய்யுள் வேறு பாடபேதத்துடன் காணப்படுகிறது. அது,

''செந்தமிழ்'', நான்காந் தொகுதியில், 252-ஆம் பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. பாடபேதமுள்ள முதல் இரண்டடி இது:

'' தண்டீச் சுரன் கோயிற் றுபரஞ்சூழ் வையகத்திற்
கண்டீச் சுரங் கருப்ப மீருகப்—பண்டே ''

புதுக்கோட்டை, திருமெய்யம் தாலுகா, கள்ளம்பட்டி, மதீசுவரர் கோவிலின் முன்புள்ள ஒரு கல்லில் இச்செய்யுள் எழுதப்பட்டுள்ளது. அது, புதுக்கோட்டை சாசனங்கள் 989-ஆம் எண்ணில் அச்சிடப்பட்டிருக்கிறது. இடையிடையே சில எழுத்துக்கள் மறைந்துவிட்டன.

## மகதைப் பெருமாள்

**இடம் :** வடஆர்க்காடு மாவட்டம், திருவண்ணுமலை தாலுகா, திருவண்ணுமலை. அண்ணுமலையார் கோவில், முதல் பிராகாரம், வடக்குப் பக்கச் சுவரில் உள்ளது.

**பதிப்பு :** எண் 97. தென் இந்திய சாசனங்கள், தொகுதி எட்டு. (No. 97. S. I. I. Vol. VIII.) 'செந்தமிழ்' மூன்றுந் தொகுதி, பக்கம் 427—432.

**விளக்கம் :** மகதைப் பெருமாள் என்பவரின் வீரத்தையும் வெற்றியையும் புகழையும் கூறுகின்றன இந்தச் செய்யுட்கள். மகதை என்பது மகதநாடு. இதற்கு நடுநாடு என்னும் பெயரும் உண்டு. மகதைப் பெருமாள் வாண குலத்தைச் சேர்ந்தவன். ஆகையால், வாணகோவரையன் என்றுங் கூறப்படுகிறுன். மகதைப் பெருமாள், திருவண்ணு மலை கோவிலைப் பொன் வேய்ந்தான். ஆதலால், பொன் பரப்பினன் மகதைப் பெருமாள் என்றும் கூறப்படுகிறுன். இவன் சோழ அரசனுக்குக் கீழடங்கியவன்.

### *சாசனச் செய்யுள்*

பொன் பரப்பினனை மகதைப் பெருமாள் கவி.

தாரு முடியு முரசுந் தமக்குரிய
பாரு முடன்பெறுவர் பார்வேந்தர்—வீரப்
பெருமாள் மகதேசன் பேரெழுதித் தத்தம்
திருமார்பி லாளோலை செய்து. 1

வன்மதுரை விட்டு வடகடலான் மால்வழுதி
தென்மதுரை பட்டின்று தென்கடலான்—நன்னுதலாய்
மல்லார்தோள் மாகதர்கோமான் முனிந்தால் மன்னவருக்
கெல்லாங் கடலோ விடம். 2

ஆழந் தருகடல் வையத் தரசு
செலுத்திய செங்கோ லரசெல்லாம்
வேழந் தருகொடை வாண திவாகரன்
விதிமுறை செய்வது மெய்கண்டீ
ரீழந் திறையிடு மாணிக் கப்படி
யடுமின் தென்னரீ ரிடீராகிற்
சோழன் திறையிடும் யானைக் குங்களை
யிடுமென் றிருமிது சொன்னேமே. 3

பாரோங்கு கொற்றக் குடைவாணன் பல்புரவித்
தேரோன் திருவுத் திராடநாள்—பேருவமை
குன்றொடா மாலியானைக் கோவேந்தர் வீற்றிருப்ப
ரின்றொடா னின்றொடா னென்று. 4

தென்னர் முதலா வுலகாண்ட செம்பொன்முடி
மன்னர் பெருவாழ்வும் வாள்வலியு—மின்னு
முருவத் திகிரி யுயர்நெடுந்தேர் வாணன்
புருவக் கடைவளையப் போம். 5

தீய்ந்து பொழிலாகா சிந்தி நகராகா
தூந்து மணிநீர்த் துறையாகா—வேந்துமுலைப்
பூணாகா மாறி விழவாகா பொன்னெடுந்தேர்
வாணாகா வென்னுதார் மண். 6

பொருப்பிற் கரிய புகர்முக வெங்கூற்றின்
மருப்பிற் றுளைப்புண்ண வாரா—திருப்பில்
வடியுளவாஞ் செவ்வேல் மகதையர் கோமா
னடியுளவாம் வேந்தற் கரண். 7

அரிந்த கனைகழற்காற் போர்வளவர் கோனை
வரிந்த திறைக்காக வாணு—தெரிந்தானை
வாங்கினு யென்று வழுதியர்கள் தாங்கலங்கி
யேங்கினுர் பாரிழந்தோ மென்று. 8

முருகுந்து காஞ்சியும் வஞ்சியும் கொண்ட மொய்தார் மகதன்
திருகுங் கனைகழல் வீக்கிய நாள்சீ பராந்தகனிற்
பெருகுங் குருதிப் புனல்வாய் தொறும் பிலவாய் மடுத்துப்
பருகுங் கழுதுடன் செம்மைகொண் டாற்கும் பனிக்கடலே. 9

மட்டியன் றேறிய தார்புனை வாண புரந்தரனீ
வெட்டியன் றேகொன்ற வெண் மணிப்பொடி யுதிரவெள்ளத்
தொட்டியென் றேனுந் துலைவதுண்டே துலையாதபந்தி
கட்டியன் றேதெவ்வர் பாய் பரித்தானை கலக்குவதே. 10

கொங்குங் கலிங்கமுங் கொண்ட கண்டா கொடித் தேருதியர்
தங்கும் பதிகொண்ட வாணதிபா தணியாத தென்கொல்
பொங்குஞ் சினப்படை வங்கார *தொங்கன் புரண்டுவீழச்
செங்குன்ற மின்று பிணக்குன்ற மாக்கிய தேர்மன்னனே. 11

வாரொன்று முலையாய்மற் றவரொன்றும்
பழுதுரையார் மகதை வேந்தன்
போரொன்று புரியாமுன் பெரியகுறிச்
சியில்லெழுந்த புகையே கண்டாய்
காரன்று கனலெரியை மின்னென்று
தளரேல் காரைக் காட்டி
லூரொன்று மதில்விழுந்த பேரொலியும்
உருமதிர்வ தொக்கும் காணே. 12

*சிங்கன் என்பது ரிஷபேசுவரர் கோவில் சாசனத்திற் கண்ட பாடம்.

முன்பொரு படைக்கடலை விட்டரச ரானர்
மூலதன மும்பரியு முறைமுறை பரிவாரித்
தென்பகை யடக்கியபின் வாணகுல தீபன்
செய்ததனி யாண்மைவட திக்கி லறிகிற்பீர்
*பண்டொரு பொருப்பரண் விடாமலைய மாணப்
போரயிலில் பொருத போதொரு பெரும்போர்
வன்பறை தவிர்த்தொரு குதிரைவலி யாலவனை
வாட்டுறை தவிர்த்ததொரு கோலின் வலியாலே. 13

மண்ணுள் திகிரிக்கை வாணன் வடுகெறிந்த
எண்ணு யிரஞ்சூழ்ந்த எண்டிசையும்—புண்வடிந்த
நீரே நீர்காக நிழலே நிழல்நெடும்பேய்த்
தேரேதேர் செஞ்சேறே சேறு. 14

எண்மேல் மிகும்பரித் தேர்மக தேசன் இகல் விசையப்
பெண்மேல் விரும்பிவெம் போர்செய்த நாள்பின் குடாவடுகர்
விண்மேல் நடந்து வடுகென்னு நாமம் விலக்குண்டபின்
மண்மேல் நடந்தது தேசிமுன் னுன் வடுகொன்றுமே. 15

சூழும் பிணவணைமேல் தோய்கழுகின் பந்தற்கீழ்
வீழுங் கழுதினங்கள்† மெய்காப்ப—வாழுந்தன்
தொன்னகரே போல்வடுகர் துஞ்சத் துயிற்றியதே
மன்னவர்கோன் மாகதர்கோன் வாள். 16

மடலளவு நிறைந்தொழுகு மதுமலர்த்தார்
மகதேசன் வையங் காக்கும்
அடலளவி லணிநெடுந்தேர் ஆயு . .
. . . . ரமணை வணங்கா வரச ரியாவர்
கடலளவு நடந்தவன் கணை குரக்கு
மவன்றன் கதிர்வேல் மன்ன
ருடலளவு நடந்ததுமற் றுலகளவு
நடந்ததவன் ஒருசெங் கோலே. 17

*பின்பொரு என்றும் பாடம் உண்டு. †கழுகினங்கள் என்றும் பாடம்.

தெற்கோடி மாமறுகில் தெண்மணலைச் சேயிழையா
ரமரற்கு மருந்தாக்க வல்லவா—யாற்கு
முயிராய் செங்கோ லுயர்நெடுந்தேர் வாணன்
னயிரா வதத்தி னடி. 18

சொல்லி விடுசெரு மீனவர் சூழு முரிமைகொ டாழ்கட
லெல்லி விடுபட வெறுவ ரேனு மியமபுரி யேறுவர்
கொல்லி விடுமுத காதிபர் கூளி கருதில ரூர்புக
வல்லி விடும் அயிராவதம் வாணன் வரவிடு நாளேயே. 19

வேளை நெடுங்கல்லும் வெட்டும் விரற்குகையு
மூளை தெரிக்கு முடித்தலையு—நாளை
மதிவா ணுதல்மடவாய் காணலாம் வாண
னதிவா ரணன்தொடர்விட் டால். 20

குறிப்பு :—3-ஆம் செய்யுள். மனிதரை யானையால் மிதித்துக் கொல்லும் வழக்கம் அக்காலத்திலிருந்ததை இச்செய்யுள் கூறுகிறது.

4-ஆம் செய்யுள். அரசர் தமது பிறந்த நாளில் போர் செய்வது மரபன்று. பொன்பரப்பினான மகதைப் பெருமாளும், தான் பிறந்த திருவுத்திராட நாளில் போர் செய்வதில்லை என்பது கருத்து.

15-ஆம் செய்யுள். இரண்டாம் அடியில், "குடாவடுகர்" என்றிருப்பது "கொடா வடுகர்" என்றிருக்க வேண்டும். ஆனால், சாசனங்களிலெல்லாம் இச்சொல் "குடு" என்றே எழுதப்படுகிறது. குடு என்னும் பழைய உருவம் இக்காலத்தில் "கொடு" என்று திரிந்துள்ளது போலும்.

பொன்பரப்பினான மகதைப் பெருமாளின் சிறப்புக்களைக் கூறுகிற இந்தச் செய்யுட்களில் சில, திருவண்ணாமலை தாலுகா, செங்கமா கிராமத்தில் உள்ள ரிஷபேசுவரர் கோவில் தென்புறச் சுவரிலும் எழுதப்பட்டுள்ளன. அவை, தென் இந்திய சாசனங்கள், ஏழாந் தொகுதி, 123-ஆம் நெம்பரில்

அச்சிடப்பெற்றுள்ளன. மேலேயுள்ள செய்யுள்களில் 9, 10, 12, 11, 13, 16, 19 எண்ணுள்ள செய்யுள்கள் அந்தச் சாசனத்தில் எழுதப்பட்டுள்ளன. ஆகையால் அவற்றைத் தனியே இங்குக் காட்டவில்லை.

---

## மகதைப் பெருமாள்

இடம் : வடஆர்க்காடு மாவட்டம், திருவண்ணமலை தாலுகா, திருவண்ணமலை. அண்ணமலையார் கோவில், முதல் பிராகாரம் வடக்குப்புறத்துச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு : 'செந்தமிழ்', மூன்றாந் தொகுதி, பக்கம் 432.

விளக்கம் : இவையும், பொன்பரப்பினுனை மகதைப் பெருமாளைப்பற்றிய கவிகள்.

### சாசனச் செய்யுள்

ஸ்வஸ்திஸ்ரீ பொன்பரப்பினுனை மகதைப் பெருமாள் கவி.

நாமான் அரவிந்தமான் விந்தமான் முடி நாகர்சென்னிப்
பூமான் விரும்பும் புகழ்மக தேசற்குப் போர்வழுதி
வாமா நிறையிட்ட வன்னாள் துடங்கிஅவ் வானவர்தம்
கோமான் றனதென் றிரான் அமராபதிக் குஞ்சரமே. 1

மேருவின்மேல் வென்று கயல்பொறித்த வார்த்தையிலும்
வாரிபட வேலெறிந்த வார்த்தையிலும்—கார்விலங்கு
முன்னிட்ட வார்த்தையிலுந் தென்னவர் மாகதற்குப்
பின்னிட்ட வார்த்தை பெரிது. 2

குறிப்பு :—மகதைப் பெருமாளின் யானையைப் புகழ்கிறது முதற் செய்யுள். பாண்டியன், மகதைப் பெருமாளிடம் தோல்வியடைந்ததைக் கூறுகிறது இரண்டாவது செய்யுள்.

---

# ஆட்கொண்டான்

இடம் : வடஆர்க்காடு மாவட்டம், திருவண்ணுமலை தாலுகா, செங்கமா. இவ்வூர் ரிஷபேசுவரர் கோவில் தென் புறச் சுவரில் உள்ள செய்யுட்கள்.

பதிப்பு : எண் 121. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஆறு. (No. 121. S. I. I. Vol. VII.)

விளக்கம் : கண்ணனூர் ஆட்கொண்டான் என்பவர், முருகன் திருவுருவத்தை இக்கோவிலில் அமைத்ததைக் கூறு கின்றன இச்செய்யுள்கள்.

### சாசனச் செய்யுள்

தருவளரும் புயன்தென் கண்ணை ஆட்கொண்ட நாயகனிற்
பொருள்வளரும் புவியிற் பொலிவெய்திப் பொருந்திடவே
யுருவளர் தோகையின் மேல்வந் துதித்தெழு ஞாயிறுபோற்
கருவளர் கந்தனைக் கற்பித் தடியிணை கண்டனனே.

பெரியுடையார் திருமேனி கல்யாணி திருமேனியாக

நீடுலகில் வாழ நிறைந்து திருவிருக்க
நாடிநெதி எய்தி நலந்திகழ—கோடுவளர்
கண்ணனூ ராட்கொண்டான் கந்தனைக் கற்பித்தா
னண்ணல் சிறுவேளன் அறிந்து.

குறிப்பு :—செய்யுள் 1. கண்ணை - கண்ணனூர்.
செய்யுள் 2. நெதி - நிதி, செல்வம்.

---

# கோப்பெருஞ் சிங்கனும் ஆட்கொண்ட தேவனும்

இடம் : வடஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை தாலுகா, திருவண்ணாமலை. அண்ணாமலையார் கோவில், முதல் பிராகாரம், மேற்குப் பக்கத்துச் சுவரில் உள்ளது.

பதிப்பு : எண் 69. தென் இந்திய சாசனங்கள், தொகுதி எட்டு. (No. 69. S. I. I. Vol. VIII.)

விளக்கம் : கூடலாளப் பிறந்தான் கோப்பெருஞ் சிங்கனும் அவன் மகன் ஆட்கொண்ட தேவனும் இந்தக் கோவிலுக்குச் செய்த தான தருமங்களைச் சிறப்பித்துக் கூறுகிறது இந்தச் செய்யுள்.

### *சாசனச் செய்யுள்*

கார்வளர் மேனிக் கமலக் கண்ணன்
பார்வள ருந்திப் பல்லவர் பெருமான்
சகல புவனச் சக்கர வர்த்தி
கூட லவனி யாளப் பிறந்தான்
கோப்பெருஞ் சிங்கன் குரைகழற் காடவன்
சொன்மறை யாக்கன் சுடர்வா ளெடுத்துப்
பின்வர நடந்து பிலந்திறந் தருளிய
காவலர் தம்பிரான் கண்ணா ரமுத
ரருண மால்வரைப் பெருமாள் தமக்குச்
செய்த திருப்பணி தெரிந்தெடுத் துரைப்பிற்
காதிற் கம்பியுங் கதிர்மணி மகுடமும்
செங்கதி ரெரிக்கு மங்க சுத்தமும்
பாகு வலையமும் பைம்பொற் பலதொழிற்
திருவுடை யாடையுந் திருக்கழற் கீழிடும்
பேதை பாதமும் பிறங்கிருட் கண்டமு

மிளஞா யிற்றி னெழினிறந் தோன்ற
வளர்மா ணிக்க வாளிவெயி லரும்பிய
விரிகட லவனி யாளப் பிறந்தான்
திருவா சிகையுஞ் சிங்கா சனமும்
கற்பக விருக்கமு முத்தின் பந்தலு
மோடரி மைக்க ணுமையிசை பாடி
ஆடிய வதிருங் கழற்பெரு மாளுக்
கினமா ணிக்க மிலங்கச் செய்த
பரதம் வல்ல பெருமா ளென்னுந்
திருவா சிகையுஞ் சிறந்த செங்கதி
ரொளி விளங்கு மாணிக்கமுந் துளங்கும்
வயிரமுங் கட்டிய பொலன்தருக் கூட
மஞ்சனமுங் கண்ணு ரமுதர்காமக் கோட்டத்
துண்ணு முலையா முமையவள் தனக்குப்
பருமணி நிரைத்த திருவுடை யாடையும்
வென்றிவேல் கொண்டு குன்றெறி முருகன்
செந்நிற மேனியுந் தேவியர் மேனியு
மைஞ்ஞிறத் தோகை வண்ணமு மடையப்
பொன்னிற மாக்கிய பொற்பணி பலவு
மல்லை காவல னிச்சங்க மல்லன்
பல்லவர் வேந்தன் பரதம் வல்லன்
கூட லவனி யாளப் பிறந்தான்
செய்தன விப்பணி யடங்கவு மிவன்சிறந்
தூழி காலம் வாழி இவன்மகன்
வாடா வாகைக் காடவ குமாரன்
வான்புகழ் மல்லையு மயிலையுங் காஞ்சியுந்
தண்டக நாடுந் தண்புனற் பாலியும்
பெண்ணையுங் கோவலும் மெவுகையு முடையவ
னெண்ணருஞ் சிறப்பில் யாவரு மதித்த
விருதரில் வீரன் விறல்வீ ராசனி
கரிய நாதன் காதற் குமரன்

குடதிசைக் கருநடர் தென்புலங் குறுகவும்
வடதிசைத் தெலுங்கர் வடக்கிருந் தழியவும்
போர்பல கடந்து பொருந்தா மன்னவ
ராரெயிற் சேர்ந்தூர் மலையர ணழித்து
நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்
வெல்புக ழனைத்து மேம்படத் தங்கோன்
வாகையுங் குரங்கும் விசையமுந் தீட்டிய
வடல்புனை நெடுவே லாட்கொண்ட தேவன்
கடகரி முனைமுகங் கடந்த காங்கயன்
கண்ணு ரமுதர் கனங்குழை யாகத்
தண்ணு மலையற் கன்புகெழு நெஞ்சில்
விருப்புடன் செய்த திருப்பணிக் கோவை
யாவையு மெடுத்துப் பாவல ருரைப்பில்
நின்ற தொல்புகழ் நிலமுழு தளித்த
வென்றி புனைதோ ளாட்கொண்ட தேவன்
வேணு வுடையா னென்னும் பெயரா
னீணுள் வாழ நிலைபெறச் செய்த
பெருமா ளமருந் திருமண் டபமும்
மருக்கமழ் கனகத் திருப்பளி யறையுந்
திருவமு தேற்றும் பெருமண் டபமும்
விரிவுடன் செய்திருக் காக்கள் ளியும்
பெருவிற லவனி யாளப் பிறந்தான்
திருமண்டபமுஞ் செழுமலர் தொடுத்த
கண்ணி வாடாது கண்ணிமை யாது
மண்மிசை நடவா வானோர் வலம்வர
வெண்மதி நிலவில் விளங்குசுட ரெரிக்கும்
படித்தள மென்னவும் படிமூன் றுக்கு
மடித்தள மென்னவு மடையா மன்னவர்
மலைத்தளம் பறித்தம் மன்னவர் சுமந்தச்
சிலைத்தளங் கொண்டு செய்தசிலைத் தளமு
மெல்லையி லுகந்தொறுஞ் செல்வந் தொலையாது

வரும்படி வகுத்த நிச்சங்க மல்லன்
பெரும்பண் டாரமும் பிறைமுடிப் பெருமா
ளின்னாள் வந்திருந் தமைதோன் றவு
முன்னா ளமைந்த முறைமை காணவும்
வாட்டடங் கண்ணியர் மனைதொறும் பலிகொளக்
காட்டிய வடிவிற் கங்காள வேடமும்
வான்முகத் தமரர் வணங்கச் செய்த
நான்முகத் தெரு நாயகி தனக்கு
மப்படி வகுத்த வணிநெடுந் தெருவுஞ்
செப்பிய கதிரவர் திசைவலம் போதும்
சோதி நன்மணி வீதிகள் இலங்கக்
கலைபயில் தவத்தோர் நிலைபெற விருக்க
மலைவகுத் தனைய காங்கயன் மடமுங்
கானிற் பயிலுங் கடவுளர் தமக்கு
வேனிற் றென்றல் வியன்பெருங் கவரி
யிருமருங் கிரட்டவு மிமையவர் துதிக்கவு
மருமணம் பெருகிய வாள்வல பெருமாள்
திருநெடுந் தோப்புந் தீர்த்த மாகிய
வமுத நன்னதி யனைத்திலுந் தூய
தமிணாடு காத்த பெருமாள் தடாகமும்
வண்டிசை பாடல் மதுமலர் வாசங்
கொண்ட காடவ குமாரன் தோப்புங்
கவின் வெம்பரிக் கதிர்வழி தடுத்த
வவனி யாளப் பிறந்தான் தோப்பும்
தலநிகழ் சேனைத் தலைவன் தோப்பும்
வெம்மை நாளில் வெஞ்சுர னடைந்தவர்
தம்மனங் குளிரத் தண்டலை நிழற்செயு
மம்மை மடமு மைய்ய னேரியும்
வெற்பகந் துளைத்தெனக் கற்புடை யராகி
யடனெடும் பிலத்தி லமுதுவந் தெழுந்த
வடிவாள் வல்ல பெருமாள் கிணறு

மளிமுரல் கமலமு மாம்பலு மலர்ந்து
குளிர்புனற் காடவ குமாரன் தடாகமுங்
குன்று கரையன்ன கோடுயர் நெடுங்கரை
வென்று மலைகொண்ட பெருமா ளேரியுஞ்
சுரர்தரு நெருங்கிய சோலையு மொவ்வாப்
பரதம் வல்ல பெருமாள் தோப்பும்
வளஞ்மி ருர்க்கு மடலிளம் பாளை
விரைகமழ் வீர ராயன் தோப்புந்
தவநெறிச் சுந்தரர் தம்பெருங் குலத்திற்
த . . . . . ற்குச் செய்து குடுத்த
கடலென நிறைந்து கார்வயல் விளைக்கும்
விச் . . சை நிச்சங்க மல்ல னேரியுங்
காங்கயன் தடாகமுங் காங்கயன் மடமும்
பூங்கமழ் சோலையும் பொற்புடன் விளங்க
யிவ்வகை யாவையுஞ் செய்தன னதனாற்
பாவை பாகன் சேவடித் தாமரை
யணிந்த சென்னியர் பார்க்குங் கண்ணின
ரணிந்த நீற்றின ராகம நன்னெறி
படிந்த நெஞ்சினர் பரசமையங் கடனை
கடிந்த வாணையர் கண்ணுதற் பெருமா
ளாதி நாத நாய்வேடங் கொண்டு
பாய்புனற் கங்கை யாயிர முகங்கொண்
டார்த்தெழு மன்னா ளேற்றுக் கொண்ட
திருந்திய பிறைமுடி யருந்தவச் சடாதர
ராதியி லஞ்செழுத் தோதிய தொண்டரென்
றெண்ணிய நாற்பத் தெண்ணா யிரவருந்
திருவரு ளிவன்மேல் வைத்தன
ரிருநிலந் தன்னி லினிதுவாழ் கெனவே.

குறிப்பு :—51-ஆம் வரியில், “நல்லிசைக் கடாம்புணை நன்னன்” என்று கூறப்பட்டுள்ளது. இதில், நல்லிசைக்கடாம்

என்பது சங்க காலத்து இலக்கியமாகிய பத்துப்பாட்டில் மலைபடுகடாம் என்னும் பாட்டாகும். மலைபடுகடாம் பாடியவர், இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் என்பவர். இப்பாடலைப் பெற்றவன் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னன் என்னும் சிற்றரசன்.

வரி 43. 'மெவுகையு' என்பது 'உதகையு' என்றிருத்தல் வேண்டும்.

129 வரி முதல் 132 வரி வரையில், சிவபெருமான் நாய் வேடங் கொண்டு கங்கையை ஏற்ற செய்தி கூறப்படுகிறது. பல்லவர் காலத்துச் சிற்பங்களில் கங்காதரமூர்த்தி உருவத்தில், சிவபெருமான் கங்கையைத் தாங்குகிற சடைக்குப் பக்கத்தில் நாயின் உருவம் இருப்பதைக் காண்கிறோம். பிற்காலத்துக் கங்காதரமூர்த்தி சிற்ப உருவத்தில் நாய் உருவம் காணப்படவில்லை. இந்தச் சாசனத்தில் நாயின் உருவம் குறிப்பிடப்பட்டிருப்பது கருதத்தக்கது.

## காடவராயர்

இடம் : வடஆர்க்காடு மாவட்டம், செய்யாறு தாலுகா, அத்தி கிராமம். இவ்வூர் அகத்தீசுவரர் கோவில், திருவுண்ணாழிகைத் தென்புறச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு : எண் 125. தென் இந்திய சாசனங்கள், தொகுதி பன்னிரண்டு. (No. 125. S. I. I. Vol. XII.)

விளக்கம் : தொண்டைமண்டலங் கொண்ட பல்லவாண்டாரான காடவராயரின் சிறப்பைக் கூறுகின்றன இச் செய்யுட்கள். பல்லவ அரசர்களுக்குக் காடவராயர் என்பது பெயர்.

### சாசனச் செய்யுள்

ஸ்வஸ்திஸ்ரீ. கூடல் ஆளப் பிறந்தாரான காடவராயர் மகனார் தொண்டைமண்டலங் கொண்ட பல்லவாண்டாரான காடவராயர் கல்வெட்டு.

தங்கோ நகர்பெறத் தம்புவி தாம்பெறத் தான்வணங்கிய
செங்கோல் வளைக்கை யரிவைய ரோடும் அடியுங் கையும்
பங்கேருக மன்ன பல்லவன் காடவன் பார்முழுதா
னெங்கோ னனுமதந் தோளிலிடா மன்ன ரெம்மன்னரே. 1

பொருதிக் கிலுஞ்சென்று போர்வென்ற பல்லவன் காடவர்
கருதிப் பொரச்சென்று சேவூரினிற் றிருக்கண் சிவக்கப் [கோன்
பருதிக்கு மேலுமுயர் பிணக்குன்றிற் பரந்திழிந்த
குருதிப்புனல் தொண்டை நன்னாடடங்கலுங் கொண்டதுவே.

கூராழி யேந்திய பல்லவற்குக் கூடல் மன்னவற்குப்
பாராழி சூழ்ந்திசை பரிக்குப் பந்தி பண்டடைந்த
நீராழி வேழங்க ணீராடு மாமடு நின்றகொற்றப்
போராழி வெற்பிவன் செங்கோல் நடக்கும் பெருவழியே. 3

தொழுதிய லாமன்னர் தொண்டைத் திருநாடு கொண்டவரூர்
கழுதிய லக்கண்ட காடவன் பல்லவன் காசினிமேற்
பழுதிய லாத்தனிச் செங்கோல் நடாத்திப் பராக்ரமஞ்சென்
றெழுதிய தூணங்க ளெண்டிசை சூழ்ந்த வெழுகிரியே. 4

கைம்மலை வெள்ளக் கடற்படைப் பல்லவன் காடவர்தஞ்
செம்மலை வந்து பணியா வடமன்னர் சேனைவிட்டுத்
தம்மலைவிட்டுப் புறமலை வேலித் தலத்துளஞ்சா
தெம்மலை யெச்சுரத்துப் புகுவார் புக்கிருப்பதற்கே. 5

வண்டற் புனற்பெண்ணை நாடுடையான்
வடவேங் கடவெற்பன்
தொண்டைத் திருநாடு தோள்வலியாற்
கொண்ட தொண்டைமன்னன்
கண்டற் கடற்கச்சிப் பல்லவன்
காடவன் காரிருளிற்
பண்டப் பிரமவர்க் கன்பிலாப்
பொற்பதாம் புயனே. 6

குறிப்பு :—இச்செய்யுட்களில் மூன்றுவதான "கூராழியேந்திய" என்னும் செய்யுள், வடஆர்க்காடு மாவட்டம், குடியாத்தம் தாலுகா, ரங்கம்பேட்டைக்கு அருகில் உள்ள மோரி ஜொனே என்னும் இடத்தில் ஒரு பாறைமேல் எழுதப்பட்டுள்ளது (தென் இந்திய சாசனங்கள், தொகுதி பன்னிரண்டு, 127-ஆம் எண் சாசனம்). அந்தச் சாசனச் செய்யுளின் மேலே சிதைந்துபோன சாசன வாசகம் எழுதப்பட்டிருக்கிறது. அதன் வாசகம் இது: "கூடல் ஆளப்பிறந்தார் மகனூர் தொண்டமண்டலங் கொண்ட பல்லவாண்டாரான வீரர் வீரன் காடவராயர் ... ... ... ..."

3-ஆம் செய்யுள். கூடல் மன்னவன் என்பது மதுரை நகரின் மன்னவன் என்பது பொருள் அன்று. இந்தக் கூடல், தென்ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள கூடலூர் ஆகும்.

4-ஆம் செய்யுள். கழுது - பேய்.

5-ஆம் செய்யுள். கைம்மலை வெள்ளக் கடற்படைப் பல்லவன் என்பது, யானைப் படையையும் கடற்படையையும் உடையவன் என்பது.

---

## விடுகாதழகிய பெருமாள்

இடம் : வடஆர்க்காடு மாவட்டம், போளூருக்கு அடுத்த திருமலை. இவ்வூர் மலைமேலுள்ள சிகாநாதசுவாமி கோவிலுக்கு அருகில் உள்ள குகைவாயிலின் வெளிப்புறச் சுவரில் உள்ள செய்யுள்.

பதிப்பு : எண் 75. தென் இந்திய சாசனங்கள், முதல் தொகுதி. (No. 75. S. I. I. Vol. I.)

விளக்கம் : சேர அரசர் குலத்தவனுகிய எழினி என்பவன், முன் ஒருகாலத்தில் இந்த மலையின்மேலே அமைத்த இயக்கன் இயக்கி உருவங்கள் பிற்காலத்தில் பழுதடைந்து போக, அக்குலத்தில் தோன்றிய அதிகமான் விடுகாதழகிய பெருமாள் என்னும் அரசன் அவ்வுருவங்களைப் பழுது

தீர்த்துப் புதுப்பித்ததோடு வெண்கல மணியொன்றைத் தானம் செய்ததையும், கடப்பேரியிலிருந்து ஒரு கால்வாயை வெட்டியமைத்ததையும் இச்செய்யுள் கூறுகிறது. இந்தச் செய்யுளுக்கு மேலே ஒரு வடமொழிச் செய்யுளும் எழுதப்பட்டிருக்கிறது.

### *சாசனச் செய்யுள்*

சேரவம்சத்து அதிகைமான் எழினி செய்த தர்ம யக்ஷரையும் யக்ஷியாரையும் எழுந்தருளுவித்து எறிமணியும் இட்டுக் கடப்பேரிக் காலுங் கண்டு குடுத்தான்.

வஞ்சியர் குலபதி எழினி வகுத்த
  வியக்க ரியக்கியரோ
டெஞ்சிய வழிவு திருத்தியிவ் வெண்குண
  விறைதிரு மலைவைத்தான்
அஞ்சிதன் வழிவருமவன் வழிமுதலி
  அதிகன் வகன் நூல்
விஞ்சையர் தலபுனை தகடையர் காவலன்
  விடுகாதழகிய பெருமாளேய்.

குறிப்பு :—இயக்கர் இயக்கியர் - யக்ஷன், யக்ஷி. இவர்கள் அருகக் கடவுளின் பரிவாரத் தெய்வங்கள். எண்குண இறை - எட்டுக் குணங்களையுடைய அருகக் கடவுள். வகன் - குபேரன். தகடை - தகடூர். இச்செய்யுளின் ஏகார ஈறு அந்தக் காலத்து வழக்கப்படி யகரமெய் பெற்றுள்ளது.

இவ்வரசர்கள், கடை எழு வள்ளல்களில் ஒருவனாகிய அதிகமான் நெடுமானஞ்சியின் மரபில் வந்தவர்கள் எனத் தெரிகின்றனர்.

---

# குணவீர முனிவர்

இடம்: வடஆர்க்காடு மாவட்டம், போளூருக்கு அருகில் உள்ள திருமலை என்னும் ஊர். இவ்வூர் ஏரியின் மதகில் உள்ளது இந்தச் சாசனம்.

பதிப்பு: எண் 66. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஒன்று. (No. 66. S. I. I. Vol. I.)

விளக்கம்: இவ்வூர் வைகைத் திருமலை என்றும், வைகாவூர் திருமலை என்றும் கூறப்படும். இது பேர்போன ஜைனத் திருப்பதி. இவ்வூர் குந்தவை ஜினலயம் பேர்போனது.

குணவீர மாமுனிவர் என்பவர், கணிசேகர மருபொற் சூரியன் என்பவர் பெயரினால், நிலங்களுக்கு நீர் பாய இவ்வூர் ஏரியில் கலிங்கு கட்டியதை இந்தச் செய்யுள் கூறுகிறது. இந்தச் செய்யுளுக்கு மேலே, இராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்தி கீழ்க்கண்டபடி எழுதப்பட்டிருக்கிறது:—

"ஸ்வஸ்திஸ்ரீ. திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கேயுரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி வெங்கை நாடுங் கங்கபாடியு நுளம்பபாடியுந் தடிகைபாடியுங் குடமலைநாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டிசை புகழ்தர வீழமண்டலமும் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் எல்லா யாண்டும் தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள் ஸ்ரீகோவிராஜ இராஜசேகரி பன்மரான இராஜராஜ தேவர்க்கு யாண்டு உ௰க-ஆவது."

### சாசனச் செய்யுள்

அலைபுரியும் புனற்பொன்னி ஆறுடைய சோழன்
அருமொழிக்கு யாண்டு இருபத்தொன்றுவ தென்றுங்
கலைபுரியு மதிநிபுணன் வெண்கிழான் கணிச் செக்
கர மருபொற் சூரியன்றன் நாமத்தால் வாம

நிலைநிற்குங் கலிஞ்சிட்டு நிமிர்வைகை மலைக்கு
நீடூழி இருமங்கும் நெல்விளையக் கண்டோன்
கொலைபுரியும் படைஅரைசர் கொண்டாடும் பாதன்
குணவீர மாமுனிவன் குளிர்வைகைக் கோவேய்.

குறிப்பு:—பொன்னி ஆறு-காவேரி ஆறு. கலிஞ்சு-கலிங்கு.

---

## கோப்பெருஞ் சிங்கன்

இடம்: வடஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி தாலுகா, வாயலூர். இவ்வூர் ஏரி கரைமேல் உள்ள கல்லில் எழுதப்பட்டுள்ள செய்யுட்கள். இந்த வாயலூர், செங்கற்பட்டிலுள்ள வாயலூர் அன்று. இது தெள்ளாற்றிலிருந்து 12 மைல் தூரத்தில் உள்ளது.

பதிப்பு: இந்திய சாசனங்கள், தொகுதி இருபத்து மூன்று, பக்கம் 174—182. (Epigraphia Indica Vol. XXIII. Page 174—182.)

விளக்கம்: கோப்பெருஞ் சிங்கன் என்னும் பல்லவ அரசன், தெள்ளாறு என்னும் ஊரில் சோழ அரசனுடன் போர் செய்து அவனை வென்றுச் சிறைப்பிடித்து வைத்ததையும், அவனுடைய வீரத்தையும் புகழ்ந்து பேசுகின்றன இந்தச் செய்யுட்கள். இந்தத் தெள்ளாற்றுப் போர், மூன்றும் நந்திவர்மன் என்னும் பல்லவ அரசன் பாண்டியனுடன் செய்த தெள்ளாற்றுப் போர் அன்று. இது பிற்காலத்தில் நடந்த போர்.

### சாசனச் செய்யுள்

ஸ்வஸ்திஸ்ரீ. சகலபுவன சக்கரவர்த்தி ஸ்ரீ கோப்பெருஞ் சிங்கன் சோழனைத் தெள்ளாற்றில் வென்று சகல பரிச்சின்னமுங் கொண்டு சோழனைச் சிறையிட்டுவைத்து சோணாடு கொண்ட அழகிய சீயன்.

பொன்னி நாடனு முரிமையும் அமைச்சரு
மிருப்பதுன் சிறைக்கோட்டம்
பொருப் பிரண்டென வளர்ந்த தோள்
வலியினுற் கொண்டு சோணுடு
கன்னி காவிரி பகீரதி நின்பிரியா
தெண்டுறை வாவி காவல்
மன்னவர் திரையுட னுணங்குவ
துன்பெருந் திருவாசல்
வென்னிடாத போர்க் கன்னடர் வென்னிடப்
பொருததுன் பெருஞ்சேனை
விளங்கு செம்பொனி னம்பலக் கூத்துநீ
விரும்பிய தேவாரம்
பின்னி காவல அவனி நாராயண
பேணு செந்தமிழ் வாழப்பிறந்த
காடவகோப் பெருஞ்சிங்க நின்
பெருமை யார் புகழ்வாரேய். 1

திரையிட் டிருமின்கள் தெவ்வேந்தர் செம்பொன்
திரையிடாப் பூம்புகார்ச் சோழன்—சிறைகிடந்த
கோட்டந்தனை நினைமின் கோப்பெருஞ்சிங்கன் கமல
நாட்டங் கடைசிவந்த நாள். 2

மீளிவன் கொண்ட விடைவேந்தர் மார்பினும்
தோளினுந் தீட்டிய தொண்டை மன்னவர்
வாளில் வென்றிடு சிறைவளவன் தூங்கிய
நாளினும் பெரியதின் ஞுளெனப் புலம்புமே. 3

அறைகடலி னிசையுடனே யண்டர் வேயினும்
பல்லிசை செவிகவர அந்திமாலை
நிறைமடியி னிலவென்னு நெருப்புப் பட்டால்
நீரிலை நின்ருற்றுவளோ நிருபதுங்கா

பிறைபொருத கனமகர கிம்புரிவன் கோட்டுப்
பெருங்களிற்றுச் சோழனையும் மமைச்சரையும் பிடித்
சிறையிலிடக் களிறுவிடு மிண்டன் சீயா [துச்
திரிபுவனத் திராசாக்கள் தம்பிரானே. 4

ஒருநாளும் விடியாத நெடிய கங்கு
லூழியென நீண்டுவர உலகிற் புன்கண்
மருண்மாலை யிதுமுன்னே வந்ததென்றால்
மடந்தையிவ ளாற்றுவளோ மல்லைவேந்தே
பொருமாலை முடியரசர் கன்னிமாதர்
போற்றிசெயும் புவனமுழு துடையார்தாமுந்
திருமாதும் புணர்புயத்து மிண்டன்சீய
திரிபுவனத் திராசாக்கள் தம்பிரானே. 5

இது கோச் சீயன் ஆணை.

குறிப்பு :—செய்யுள் 1. அவனிநாராயணன் - இது கோப் பெருஞ் சிங்கனுடைய சிறப்புப் பெயர். இவனுடைய முன்னோனை தெள்ளாற்றெறிந்த நந்திவர்மனுக்கும் இந்தச் சிறப்புப் பெயர் உண்டு. பின்னி - பெண்ணையாறு; தென்பெண்ணையாறு. இச்செய்யுளின் ஈற்றுச்சொல், யகரமெய் பெற்றுப் புகழ்வாரேய் என்றிருக்கிறது. இது அக்காலத்து முறை.

செய்யுள் 2. தெவ்வேந்திர் - பகையரசர்களே.

செய்யுள் 3. கோப்பெருஞ் சிங்கனுடைய கொடி விடைக் கொடி. அதாவது ஏற்றுக்கொடி. அவனுடைய முத்திரையும் ஏறு (எருது). இவனால் வெல்லப்பட்ட மன்னருடைய மார்பிலும் தோளிலும் இவனுடைய முத்திரையாகிய எருதின் உருவத்தை (பச்சைகுத்தி) எழுதினான். இது, அவர்களை அவமதிப்பதாகும். இவ்வாறு அவமதிக்கப்பட்ட அரசர்கள், இவனால் சிறைப்பிடிக்கப்பட்டுச் சிறைச்சாலையில் இருந்து இறந்த சோழ அரசன் பட்ட துன்பத்தைவிடப் பெரிய துன்பமாகக் கருதினார்கள் என்பது இச்செய்யுளின் கருத்து. போரில்

வெற்றிபெற்ற அரசர், தமது முத்திரையைத் தோற்ற அரசரின் மார்பிலும் தோளிலும் பொறிப்பது அக்காலத்து வழக்கம்.

செய்யுள் 4. திரிபுவனத் திராசாக்கள் தம்பிரான் - சோழ அரசர்களின் தலைவன். சோழ அரசர்கள் தம்மைத் திரிபுவன சக்கரவர்த்திகள் என்று கூறிக்கொள்வது வழக்கம். கோப் பெருஞ் சிங்கன், சோழனைப் போரில் வென்று அவனைச் சிறை வைத்துச் சோழநாட்டை யரசாண்டபடியினாலே, திரிபுவனத் திராசாக்கள் தம்பிரான் என்று புகழப்படுகிறான்.

செய்யுள் 5. மல்லை - மாமல்லபுரம். இப்போது மகாபலி புரம் என்று வழங்கப்படுகிறது. இது, பண்டைக்காலத்தில் பல்லவ அரசர்களின் துறைமுகப்பட்டினம். சீயன் - சிங்கன்; அதாவது கோப்பெருஞ் சிங்கன்.

கோப்பெருஞ் சிங்கன் என்னும் பெயருடைய பல்லவ அரசர்கள் இருவர் இருந்தனர். அவ்விருவரில் இந்தக் கோப் பெருஞ் சிங்கன் முதலாமவன். இவன், ஏறத்தாழ கி. பி. 1232-இல் சிம்மாசனம் ஏறினான் என்பர். தெள்ளாற்றுப் போரிலே இவனால் சிறைப்பிடிக்கப்பட்ட சோழன், கி. பி. 1216-இல் முடிசூடிக்கொண்ட மூன்றும் இராஜராஜன் என்பர்.

---

## வீரவீர ஜினாலயம்

**இடம் :** வடஆர்க்காடு மாவட்டம், ஆரணி தாலுகா, பூண்டி. இவ்வூர் பொன்னிநாதர் ஆலயம் என்னும் ஜைனக் கோவிலின் மேற்குப்புறச் சுவரில் உள்ள சாசனச் செய்யுள்.

**பதிப்பு :** எண் 62. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு. (No. 62. S. I. I. Vol. VII.)

**விளக்கம் :** இந்த அழகான அகவற்பா, ஒரு அரசன் வீரவீர ஜினாலயத்துக்குத் தானதருமங்கள் செய்ததைக் கூறு கிறது. வீரவீர ஜினாலயம் என்பது பொன்னிநாதர் கோவில். இந்தச் செய்யுளின் இடையிடையே சில எழுத்துக்கள் மறைந்துவிட்டன.

*சாசனச் செய்யுள்*

சிறப்பருளிக்
கொற்றவன் மகிழ்ந்த கொள்கைய ளுகி
மெய்த்தவத் தீர்க்கு வேண்டுவ தியாதென
அத்தவ னுரைப்போ னின்னகன்றலை ஞாலத்துச்
செயங்கொண்ட சோழ மண்டலந் தன்னிற்
பயன்படு சோலைப் பல்குன்றக் கோட்டத்து
வேண்டியது சுரக்கு மெய்யூர் நாட்டுப்
பூண்டி யென்பது காண்டகு திருநகர்
சீயன் சம்புமன் திரு . . ற மாப்பொய்
காலத்துப் புரந்துடன் வந்தது
அறநெறி வளர வருணமக் கென்ன
மறமலி தானை மன்னர் மன்னன்
சினவரன் றனக்குச் சொம்பொற் கோயி
னிவன்தக வருளிநின்று நீடு விளங்க
வீர வீர சினுலய மென்றுதன்
பெயர்பொறித் தமைத்துப் பெருஞ்சிறப் பியற்றி
முனிகள் பூண்டியென் றினிதினி னடப்ப
வெல்லை தழுவிய விரும்பே டுட்பட
நல்லறந் தழைப்ப நன்கமைத் தனனே
அஃதான்று
அணிநக ரகன்பெய ரெல்லை யாவதுங்
கணியிலுப் பைக்குக் காண்டகு மேற்கு
நெருநற் பாக்கத் தெல்லை வடமேற்கும்
பொருநற் குன்றிப் புனல்யாற்றின் வடக்குங்
குலாமலி குண்டிகைத் துறைக்கு வடகிழக்கு
மிலாறை யாதித்த மங்கலத் தெல்லைக்கேய் கிழக்கு
மிரும்புனற் பொய்கை மெயூரெல்லை . . ந்த தென்கிழக்கு
மல்லற் றெல்சீர் மறையோ ராதை
யெல்லை நிலத்துக் கியைந்த தெற்கு

மிவ்வாத னூரி லகன்பெய ரெல்லையிற்
பீலி மடுவிற்குப் பிறங்குதென் மேற்கு
மெண்டிசை மருங்கினு மியன்ற வெல்லையிற்
குண்டிகைக் கல்லு நாட்டிக் கண்கவர்
கொல்லை நன்னிலங் குறைவின்றி விரிந் . . .
னெல்லை முற்று மிறையும் வரியு
மந்த ராயமு மாயமு மமஞ்சியும்
வந்தன பிறவு மாற்றி வளமலி
மாளிகை யெடுக்கவு மணிக்குலை கமுகு
நாளி கேரமு நன்குட னுக்கவுங்
கரும்புஞ் செந்நெலு மொருங்குட னடவுஞ்
சண்பகந் தமனகஞ் சாதி கேதகை
வண்கழு நீருடன் மலர்பல வியற்றவும்
. . . . ஞ் செக்கு மமைக்கவு மருளிச்
சாலையுந் தவமுந் தருமமுந் தழைப்பச்
செம்பிலுங் கல்லிலுஞ் செய்து தன்புக
ழலர்கதி ரளவுஞ் செல்ல
மலர்தலை யுலகின் வாழ்வமைத் தனனே.

குறிப்பு :—வரி 5. செயங்கொண்ட சோழ மண்டலம் - தொண்டைமண்டலம். வரி 13. சினவரன் - ஜினன், அருகன். வரி 15. சினாலயம் - அருகன் கோவில்.

---

## ஆலத்தூர் திவாகரன்

இடம் : வடஆர்க்காடு மாவட்டம், குடியாத்தம் தாலுகா, திருவல்லம். இவ்வூர் பில்வநாதேசுவரர் கோவிலின் மகா மண்டபத்துத் தென்புறச் சுவரில் உள்ள செய்யுள் சாசனம்.

பதிப்பு : எண் 325. தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு. (No. 325. S. I. I. Vol. IV.)

விளக்கம் : வல்லத்துப் பில்வநாதேசுவரர் கோவில், முற்காலத்தில் திருவல்லத்து ஆழ்வார் கோயில் என்று

பெயர் பெற்றிருந்தது. இக்கோவில் பூசைக்காக ஆலத்தூர் திவாகரன் என்பவர் தானம் செய்ததை இச்செய்யுள் கூறுகிறது.

*சாசனச் செய்யுள்*

ஆலத்தூ ராளி திவாகரன்தான் செய்வித்தான்
பாலொத்த வெள்ளி நாற்பதின் கழஞ்சால்—சோஸேத்
திருவலத்தே யாழ்வார் திருப்பலிக்குச் செல்வம்
வருநலத்தான் கொள்கைதான் மற்று.

திருவுண்ணாழிகையார் வசம்.

குறிப்பு:—திருவலத்தே - திருவல்லத்தே. திருவுண்ணாழிகை - அகநாழிகை; அதாவது கருப்பக்கிருகம். 'திருவுண்ணாழிகை உடையார் வசம்' என்பது, கருப்பக்கிருகத்தில் பூசை செய்யும் குருக்களிடம் இந்தத் தர்மம் ஒப்படைக்கப்பட்டது என்பது கருத்து.

---

## குராமரம்

இடம்: செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சீபுரம் தாலுகா, திருப்பருத்திக்குன்று கிராமம். திரைலோக்யநாதர் என்னும் ஜைனக் கோவிலின் ஒரு மேடைமீது உள்ள சாசனம்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு, எண் 399. (No. 399. S. I. I. Vol. VII.)

விளக்கம்: இந்தக் கோவிலில் உள்ள குராமரத்தைப் புகழ்கிறது இச்செய்யுள்.

*சாசனச் செய்யுள்*

தன்னளவிற் குன்ரு துயராது தண்காஞ்சி
முன்னுளது மும்முனிவர் மூழ்கியது—மன்னவன்தன்
செங்கோல் நலங்காட்டுந் தென்பருத்திக் குன்றமர்ந்த
கொங்கார் தருமக் குரா.

குறிப்பு :—குரா என்பது குராமரம். கோரா மரம் என்றும் கூறப்படுகிறது. மும்முனிவர் யாவர் என்பது தெரியவில்லை. மல்லிசேனர் என்னும் வாமன முனிவரும், அவர் சீடர் புஷ்ப சேனரும் இங்கு இருந்தனர் என்பது சாசனங்களினால் தெரிகிறது.

---

## சுந்தரபாண்டியன்

இடம் : தென் ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவில் கிழக்குக் கோபுரவாயிலின் வலதுபுறச் சுவரில் உள்ளவை.

பதிப்பு : எண் 618. தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு. (No. 618. S. I. I. Vol. IV.)

விளக்கம் : சுந்தரபாண்டியனின் வெற்றிச் சிறப்பைக் கூறுகின்றன.

*சாசனச் செய்யுள்*

காரேற்ற தண்டலைக் காவிரி நாடனைக் கானுலவுந்
தேரேற்றி விட்ட செழுந்தமிழ்த் தென்னவன் சென்றெதிர்ந்து
தாரேற்ற வெம்படை யாரியர் தண்டுபடத் தனியே
போரேற்று நின்ற பெருவார்த்தை யின்றும் புதுவார்த்தையே.

பண்பட்ட மென்மொழிப் பைந்தொடி கொங்கையர்க் கவைமே
கண்பட்ட முத்தவடங் கண்டு காக்கிலன் காடவர்கோன் [ற்
எண்பட்ட சேனை யெதிர்பட் டொழுக வெழுந்த புண்ணீர்
விண்பட் டலையப் படைதொட்ட சுந்தர மீனவனே.

குறிப்பு :—செந்தமிழ்த் தென்னவன் - சடாவர்மன் சுந்தர பாண்டியன் *I*.

செய்யுள் 2. காடவர்கோன் - பல்லவ அரசன்; இவன் கோப்பெருஞ் சிங்கன் போலும். சுந்தர மீனவன் - சுந்தர பாண்டியன் *I*.

---

## சுந்தரபாண்டியன்

இடம் : தென் ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவில் கிழக்குக் கோபுரவாயிலின் வலதுபுறச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு : எண் 619. தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு. (No. 619. S. I. I. Vol. IV.)

விளக்கம் : சுந்தரபாண்டியன் வென்ற போர்க்களத்தின் உவமை.

*சாசனச் செய்யுள்*

வட்ட வெண்குடை மன்னர் தம்புகல்
கொண்டு மாமுடி கொண்டுபோர்
மாறு கொண்டெழு போசளன் தடை
கொண்டு வாணன் வனம்புகத்

தொட்ட வெம்படை வீரன் வெற்றி
புனைந்த சுந்தர மாறன்முன்
சூழி விட்ட தெலிங்கர் சேனை
துணித்து வென்ற களத்துமேல்

விட்ட வெம்பரி பட்ட பொழுதெழு
சோரி வாரியை யொக்குநீர்
மேல் மிதந்த நிணப் பெருந்திரள்
வெண் ணுரைத்திர ளொக்குமுன்

பட்ட வெங்கரி யந்த வீரர்
படிந்த மாமுகி லொக்கும்வீழ்
பருமணிக் குடை யங்கு வந்தெழு
பருதி மண்டல மொக்குமே.

குறிப்பு :—சுந்தர மாறன் - சுந்தரபாண்டியன். இவன் தெலிங்கருடன் செய்த போர்க்களத்தின் வர்ணனை இச்

செய்யுள். குதிரைப்படை சிந்திய இரத்தம் கடலையொத்தது. நிணப்பெருந்திரள் இரத்தக் கடலில் தோன்றும் நுரை போன்றன. போரில் இறந்த யானைகள், கடல்நீரைப் பருகும் மேகம் போன்றிருந்தன. தோற்றோடிய அரசன் போட்டுச் சென்ற வெண்கொற்றக்குடை, கடலிலிருந்து தோன்றுகிற சூரியனைப் போன்றிருந்தது என்பது கருத்து.

## சுந்தரபாண்டியன்

இடம் : தென்ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவில் கிழக்குக் கோபுரவாயிலுக்குள் வலதுபுறச் சுவரில் உள்ளது.

பதிப்பு : எண் 620. தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு. (No. 620. S. I. I. Vol. IV.)

விளக்கம் : சுந்தரபாண்டியன் என்னும் பாண்டிய அரசன், தில்லைச் சிற்றம்பலத்தில் துலாபாரம் ஏறித் தன் எடைக்குச் சரியாகப் பொன்னையும் முத்தையும் நிறுத்துத் தானம் செய்ததை இச்செய்யுள் கூறுகிறது. முதல் அடியில் இரண்டு எழுத்துக்கள் மறைந்துவிட்டன.

### சாசனச் செய்யுள்

**இனவ . . கம்புரி வெண்பிறைக் கோட்டிகல் வெங்கடுங்கட்**
**சின மதத்த வெங்கரிச் சுந்தரத் தென்னவன் தில்லைமன்றில்**
**வனசத் திருவுடன் செஞ்சொற் றிருவை மணந்ததொக்கும்**
**கனகத் துலையுடன் முத்தத் துலையிற் கலந்ததுவே.**

குறிப்பு :—சுந்தரத் தென்னவன் - சடாவர்மன் சுந்தர பாண்டியன் I. இவன் கி. பி. 1251-1271 வரையில் அரசாண்டான். சிதம்பரக் கோவிலின் மேற்குக்கோபுரத்தை அமைத்தவன் இவன். வனசத் திரு - செந்தாமரையில் உள்ள திருமகள். செஞ்சொற்றிரு - சொல்லின் செல்வியாகிய கலைமகள்.

# சோழகுலவல்லி

இடம் : தென்ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவில் கிழக்குக் கோபுரவாயிலுக்குள் வலதுபுறச் சுவரில் உள்ளது.

பதிப்பு : எண் 621. தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு. (No. 621. S. I. I. Vol. IV.)

விளக்கம் : திருமூலத்தானமுடையான் என்பவர் இச் செய்யுட்களை இயற்றினர்.

### சாசனச் செய்யுள்

ஓதுஞ் சகரர் யாண்டோ ரொருபத்தெட்டில்
மேலாதி மூலநாளி லானிதனில்—சோதி
துளங்கிலமேல் சோழன் சோழகுல வல்லி
களங்கமற வைத்தான் கரு. 1

வண்ணந் திகழுங் கொடியாட மன்னுஞ் சோழ குலவல்லி
நண்ணுந் தலைமை யுடையாரை நாமார் புகழப் பாமாலை
யெண்ணும் படியில் புகழாளர் என்றே யன்றே யென்னுடைய
கண்ணும் பழனக் கழுமலமுங் கலந்தார்த் திருவ மலந்தாரேல்.

திருமூலத்தான முடையான்.

குறிப்பு :—சோழகுல வல்லி - கோப்பரகேசரி வர்மனை இராஜேந்திர சோழதேவரின் மடைப்பள்ளி உத்தியோகஸ்தன் பெயர்.

---

## விக்கிரம பாண்டியன்

இடம் : தென் ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவில் கீழைக்கோபுரத்துத் தெற்குக் கதவுநிலையில் உள்ள செய்யுள்.

பதிப்பு : 'செந்தமிழ்', நான்காந் தொகுதி; பக்கம் 493.

விளக்கம் : விக்கிரம பாண்டியனின் யானையைப் புகழ்கிறது.

*சாசனச் செய்யுள்*

மீனவற்கு விக்கிரம பாண்டியற்கு வேந்தரிடும்
யானை திருவுள்ளத் தேறுமோ—தானவரை
வென்றதல்ல மேனிநிறம் வெள்ளையல்ல செங்கனகக்
குன்றதல்ல நாலல்ல கோடு.

குறிப்பு :—இந்த அரசன் சடையவர்மன் விக்கிரம பாண்டியன் என்பவன். இவன், கி. பி. 13-ஆம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் இருந்தவன்.

---

## சுந்தரபாண்டியன்

இடம் : தென் ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவில் கீழைக்கோபுரத்துத் தெற்குக் கதவுநிலையில் உள்ள செய்யுட்கள்.

பதிப்பு : 'செந்தமிழ்', நான்காந் தொகுதி ; பக்கம் 492, 493.

விளக்கம் : சுந்தர பாண்டியனின் வெற்றிச் சிறப்பைக் கூறுகின்றன.

*சாசனச் செய்யுள்*

மீளா வழிசெல்ல வேணாடர் தங்களை வென்றதடந்
தோளான் மதுரைமன் சுந்தர பாண்டியன் சூழ்ந்திறைஞ்சி

யாளான மன்னவர் தன்னேவல் செய்ய வவனிமுட்ட
வாளால் வழிதிறந் தான்வட வேந்தரை மார்திறந்தே. 1

கொங்க ருடல்கிழியக் குத்தியிரு கோட்டெடுத்து
வெங்க ணழலில் வெதுப்புமே—மங்கையர்கண்
சூழத் தாமம்புனையுஞ் சுந்தரத்தோள் மீனவனுக்
கீழத்தா னிட்ட இறை. 2

வாக்கியல் செந்தமிழ்ச் சுந்தர பாண்டியன் வாளமரில்
வீக்கிய வன்கழற் கண்ட கோபாலனை விண்ணுலகிற்
போக்கிய பின்பவன் தம்பியர் போற்றப் புரந்தரசி
லாக்கிய வார்த்தை பதினு லுலகமு மானதுவே. 3

குறிப்பு:—சுந்தரபாண்டியன் கி. பி. 13-ஆம் நூற்ருண்டின் இடைப்பகுதியில் இருந்தவன். வீரகண்ட கோபாலன், கணபதி என்னும் காகதீய அரசர்களை வென்ருன். 3-ஆம் செய்யுளில் கூறப்படும் 'கழற்கண்ட கோபாலன்' என்பவன், வீரகண்ட கோபாலன் ஆவான்.

---

## நரலோக வீரன்

இடம்: தென்ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவில் முதல் பிராகாரத்தின் வெளிப் பக்கம், வடபுறச் சுவரில் உள்ளது.

பதிப்பு: எண் 225. தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு. (No. 225. S. I. I. Vol. IV.)

விளக்கம்: இந்தச் செய்யுள்களுக்கு மேலே வடமொழிச் செய்யுள்களும் உள்ளன. தமிழ்ச் செய்யுட்கள் கூறுவதையே வடமொழிச் செய்யுள்களும் கூறுகின்றன. இச்செய்யுட்கள், முதலாங் குலோத்துங்கச் சோழனின் சேனைத் தலைவனுகிய நரலோகவீரன், திருச்சிற்றம்பலத்தில் செய்த திருத்தொண்டுகளைக் கூறுகின்றன. நரலோகவீரன்

குலோத்துங்க சோழன், விக்கிரம சோழன் என்னும் இரண்டு அரசர்கள் காலத்திலும் இருந்தான்.

### சாசனச் செய்யுள்

எல்லை கடலால் இகல்லெந் தணக்க வந்த
செல்வமெலாம் தில்லைச் சிற்றம்பலத்து—தொல்லைத்
திருக்கொடுங்கை பொன்மேந்தான் திண்மைக் கலியின்
தருக்கொடுங்க வெல்கூத்தன் தான். 1

தில்லையில் பொன்னம்பலத்தைச் செம்பொனல் மேந்துவா
னெல்லையைப் பொன்னுக்கிறு னென்பரால்—ஒல்லை
வடவேந்தர் செல்வமெலாம் வாங்க வேல்வாங்கும்
குடைவேந்தர் தொண்டையார் கோன். 2

தென்வேந்தர் கூநிமிந்த செந்தமிழர் தென்கோயில்
பொன்மேந்து திக்கைப் புகழ்வேந்தா னெக்கும்
குற்றம்பல கண்டோன் கோலிழைக்கு வெல்கூத்தன்
சிற்றம் பலத்திலே சென்று. 3

பொன்னம்பலக் கூத்தாடு மிடம் பழமரைவில்
பொன்னம்பலக் கூத்தர் பொன்மேந்தார்—தென்னர்
மலைமன்னர் ஏனை வடமன்றக் குலமன்னர்
செல்வ மெலாம் கொண்டு. 4

தில்லைச்சிற் றம்பலத்தே பேரம்பலந் தன்னை
மல்லற் கடற்றுன் வாழ்கூத்தன்—வில்லவுதொ
நம்புசேர் வெஞ்சிலையின் ஆற்றலனை மாற்றியகோன்
செம்பு மேவித்தான் தெரிந்து. 5

ஏனை வடவரைசர் இட்டிடைந்த செம்பொனல்
ஏனலென தில்லை நாயகற்கு—ஆனை
சொரிகலமா மாமயிலை தொண்டையர்கோன் கூத்தன்
பரிகலமாச் செய்தமைத்தான் பார்த்து. 6

தெள்ளு புனற்றில்லைச் சிற்றம்பலத் தார்க்கு
தள்ளி எதிரம்பலந் தாதம்பாதம்—புள்ளுண்ண
நற்பிக்கம் கொண்ட நரலோக வீரன்செம்
பொற்படிக்கம் கொண்டான் புரிந்து. 7

இட்டான் எழில்தில்லை எம்மாற் கிசைவிளங்க
மட்டார் பொழில்மணவில் வாழ்கூத்தன்—ஒட்டாரை
இன்னமற்ற நித்தான நேற்றினன் நீண்டொளிசேர்
செம்பொற் றனிக்காளம் செய்து. 8

ஆடுந் தனித்தேனுக்கு அம்பலத்தே கர்ப்பூரம்
நீடுந் திருவிளக்கு நீடமைந்தான்—கூடா
ரடிக்கத்தினை நரியும் புள்ளும்
கடிக்கப் பெருங்கூத்தன் தான். 9

பொன்னம்பலம் சூழப் பொன்னின் திருவிளக்கால்
மன்னுந் திருச்சுற்று வந்தமைத்தான்—தென்னவர்தம்
பூபெறு வார்குழலா ரொடும் பொருள் பெரு
மாவேறு தொண்டையார் மன். 10

சிற்றம் பலத்தானை ஏற்றினு ரெவ்வடத்து
போற்றுத தால்வந்த கொழுநெதியால்—பற்றெக்கு
கட்ட வஞ்சனம் வெலுகார் மணவில் கூத்தன்திருக்
கட்ட வஞ்சநமாஞ் செய்து. 11

தொல்லைப் பதித்தில்லைக் கூத்தற்குத் தொண்டையர்கோன்
எல்லைத் திசைக்கரிகள் எட்டளவும்—செல்லப்போய்
சாலமுதுபேய் தடிக்க தாறட்டிகத்தங்கு தொண்டையர்கோன்
பாலமுது செய்வித்தான் பரிந்து. 12

ஆடுந் தெளிதேனை ஆயிரநாழி நெய்யால்
ஆடும்படி கண்டான் அன்றினர்கள்—ஓடுந்
திறங்கண்ட நாளன் சினக்களிற்றுன் ஞால
மறங்கண்ட தொண்டையர்கோன் ஆங்கு. 13

நட்டப் பெருமான் நாமஞானங் குழைந்தளித்த
சிட்டப் பெருமான் திருப்பதியம்—முட்டாமைக்
கேட்போர்க்கு மண்டபத்தைச் செய்தான்தெவ் வேந்தர்கெட
வாட்டிக்கும் தொண்டையர்கோன் மன். 14

மல்லக் குலவரையால் நூற்றுக்கால் மண்டபத்தே
தில்லைப் பிரானுக்குச் செய்தமைத்தான்—கொல்ல
மழிவுகண்டான் சேரன் அளப்பரிய ஆற்றற்
கிழிவுகண்டான் தொண்டையர்கோ னேறு. 15

தில்லைப் பெரிய திருச்சுற்று மாளிகை
எல்லைக் குரைவரைபோ லீண்டமைத்தான்—தொல்லைநீர்
மண்மகளைக் கங்கோன் மதிக்குடைக்கீழ் வீற்றிருத்தி
உண்மகுழும் தொண்டையர்கோ னுற்று. 16

புட்கரணி கல்சாத்து வித்தான்பொற் கோயிலின்வாய்
விக்கரணம் பார்ப்படந்ததன் மேல்விதித்து—திக்களவு
மாநடத்திக் கோல்நடத்தும் வாள்கூத்தன் மண்ணில்லறம்
தாநடத்தில் நீடுவித்தான் தான். 17

வீதிசூழ் நல்விளக்கும் வீற்றிருக்க மண்டபமும்
மாதுசூழ் பாதமும் மகுழ்ந்தார்க்குப்—போதுசூழ்
தில்லைக்கே செய்தான் திசைகளிறு போய்நிற்கும்
எல்லைக்கே செல்கலிங்க ரேறு. 18

நடங்கவின்கொ ளம்பலத்து நாயகச் செந்தேனின்
னிடங்கவின்கொள் பச்சையிளந் தேனுக்—கடங்கார்
கருமாளி கைய்மேல் பகடுதைத்த கூத்தன்
திருமாளிகை யமைத்தான் சென்று. 19

எவ்வுலகும் எவ்வுயிரு மீன்று மெழிலழியாச்
செவ்வியாள் கோயில் திருச்சுற்றைப்—பவ்வஞ்சூழ்
எல்லைவட்டன் தங்கோற் கியல்விட்ட வாட்கூத்தன்
தில்லைவட்டத்தே யமைத்தான் சென்று. 20

வாளுடைய பொற்பொதுவின்மன் நடந்தன னடமாடும்
ஆளுடைய பாவைக் கவிஷேகம்—வேளுடைய
பொற்பினுன் பொன்னம்பலக் கூத்தன் பொங்குசட
வெற்பினுற் சாத்தினுன் வேறு. 21

சேதாம்பன் வாயுமைக்குந் தில்லையந் தேவிக்கும்
பீதாம்பரஞ் சமைத்தான் பேரொலிநீர்—மோதா
வலைகின்ற வெல்லை யபயனுக்கே யாக
மலைகின்ற தொண்டையார் மன். 22

செல்வித் திருந்தறங் கண்ணு னகரித் தில்லைக்கே
நல்லமகப்பா லெண்ணை நாள்தோறும்—செல்லத்தான்
கண்டா னரும்பையர்கோன் குண்ணக்கநீர் ஞாலமெல்லாங்
கொண்டான் தொண்டையர் கோன். 23

பொன்னுலகு தாம் புலியூர் தொழுவதற்கு
குன்னிழி கின்ற சொக்கமால்—தென்னர்
. . . டாமற் செகுத்த கூத்தன் செம்பொன்னின்
கொடிபுறஞ் செய்த குமா. 24

ஆதிசெம்பொன் னம்பலத்தி லம்மா னெழுந்தருளும்
வீதியும்பொன் மேய்ந்தெனுப் மேல்விளக்கும்—சோதிக்
கொடியுடைத்தா பொன்னுல் குறுகவலான் ஒன்றும்
படியமைத்தான் தொண்டையர்கோன் பார்த்து. 25

நாயகர் வீதி எழுந்தருளும் நன்னுளால்
தூய கருவெழு தூபத்தால்—போய்யொளிசேர்
வான்மறைக் கண்பானிம் பண்மகவன் வண்புகழால்
தான்மறைக் கூத்தன் சமைத்து. 26

பாருமைய் மொட்பச் செய்வீர் சீரியர்
திருவுருவ மான திருக்கோலம்—பெருகொளியால்
காட்டினுன் தில்லைக்கே தாசந்வாய் வெங்கலியை
ஓட்டினுன் தொண்டையர் கோன். 27

என்றுஞ் சிற்றம்பலத் தெங்கோமா னந்தி
சங்கொடு மூலகேத்தச் சாந்தமைத்தான்—கல்லுவந்
துயினக் கொள்வீர் கொள்வொன்னல் வெல்களெர்களிரி
வளித்திடு தொண்டையர்கோன் வென்று. 28

மன்னுந் திகழ் தில்லைக்கே வாணிக்க சகணத்
துன்னுபொழில் மணவில் தொண்டைமான்—என்றுந்
துண்ணக் கண்டான் இகல்வேந்த ராகம்பருந்
துண்ணக் கண்டான் பரிந்து. 29

தில்லைத் தியாகவல்லி விண்சிற்பஞ் சவினி
எல்லைநிலங் கொண்டிறை யிழிச்சி—தில்லை
மறைமுடிப்பார் வீதி மடஞ்சமைத்தான் மண்ணோர்
குறைமுடிப்பார் தொண்டையர் கோ. 30

என்றும் பெறுதலால் ஏருவிழிற் புலியூர்
மன்றி னடனுக்கு மாமத்தக்—குன்று
குடுத்தருளி மண்ணிற் கொடுங்கலி வாராமே
தடுத்தான் தொண்டையர்கோன் ருன். 31

முத்திறத்தா ரீசன் முதற்றிறத்தைப் பாடியவர்
ஒக்கமைத்த செப்பேட்டி னுள்ளினெழு—தித்தலத்தி
லெல்லைக் கிரிவா யிசை யெழுதினுன் கூத்தன்
தில்லைச் சிற்றம்பலத்தே சென்று. 32

தில்லை வளரும் தெளிதே ஞெளிதழைப்ப
நல்ல திருநந்தா வனஞ்சமைத்த—வில்லத்திருக்
கோட்டங்கொள் வாழ்வேந்தர் கொற்றக் களியானை
யீட்டங்கொள் காலிங்க ரேறு. 33

நூருயிர முகமாங் கமைத்தான் ஞேன்சினத்தி
பாருக வெல்களிற்று வாட்கூத்தன்—கூருளும்
வல்லிச் சிறுகிடைக்குக் கான்வளர் நாடஞ்செய்
தில்லைச் சிற்றம்பலத்தே சென்று. 34

மாசிக் கட்லாடி வீற்றிருக்க மண்டபமும்
மாசற்ற வற்றைப் பெருவழியும்—ஈசற்குத்
தென்புலியூர்க்கே யமைத்தான் கூத்தன் திசையனைத்து
மன்புலி யாணை நடக்கறை யத்து. 35

ஓங்கியபொன் னம்பலத்தார்க் கோராயிரஞ் சுரவி
ஆங்களித்தா னேற்றெதிர்ந்தா ராழிழையார்—தாங்கா
தொக்கி உடலாவி யுயிர்நாட் போக்கி
இருக்கின்ற தொண்டைய ரேறு. 36

தொல்லோர் வாழ்தில்லைச் சுடலையமர்ந்தார் கோயில்
கல்லால் எடுத்தமைத்தான் காசினியிற்—பொலன்
மறைவளர்க்க வெங்கலியை மாற்றி வழுவாம
லறம்வளர்க்கக் காலிங்க ளுய்ந்து. 37

தில்லை மூவாயிரவர் தங்கள் திருவளர
எல்லையில் பேரேரிக் கெழில்மதகு—கல்லினல்
தானமைத்தான் தெவ்வேந்தர்க் கெல்லாங் கலந்தவீர
வானமைத்தான் தொண்டையார் மன். 38

ஹர உ இது வெட்டுவித்தான் காலிங்கராயர் ஆண்ட அரசு. அற மறவற்க அறமல்லது துணையில்லை. திருச்சிற்றம்பலம். உ

குறிப்பு:—சாசனத்தைப் பொறித்த சிற்பியின் தவறுதலினல், சில செய்யுட்களில் பொருள் விளங்காதபடி எழுத்துக்கள் அமைந்துள்ளன. அவை சாசனத்தில் உள்ளபடியே அச்சிடப் பட்டுள்ளன. 24-ஆம் செய்யுளில் மூன்றும் அடியில் சில எழுத்துக்கள் மறைந்துவிட்டன. 1, 2, 4-ஆம் செய்யுட்களில் “ மேந்தான் ” என்றிருப்பது வேய்ந்தான் என்றிருத்தல் வேண்டும்.

இச்செய்யுட்களில் கூறப்படுகிற நரலோக வீரன், தொண்டையர்மன், காலிங்கன், கூத்தன் என்னும் பெயர்களையுடையவன்.

செய்யுள் 15. நரலோக வீரன் தில்லைச் சிற்றம்பலத்தில் நூற்றுக்கால் மண்டபத்தை அமைத்ததை இச்செய்யுள் கூறுகிறது. இந்த மண்டபத்திற்கு ஸ்ரீ விக்கிரமசோழன் திருமண்டபம் என்று பெயர் சூட்டினன். இந்த மண்டபத்துத் தூண்கள் சிலவற்றில் இன்றும், "ஸ்ரீ விக்கிரம சோழன் திருமண்டபம்" என்று எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.

செய்யுள் 22. இதில், அபயன் என்பது முதலாம் குலோத்துங்கச் சோழனை.

---

## விக்கிரம பாண்டியன்

இடம் : தென்ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவில் கீழைக்கோபுரத்து வடக்குப் பக்கச் சுவரில் எழுதப்பட்டுள்ளவை.

பதிப்பு : 'செந்தமிழ்', நான்காந் தொகுதி ; பக்கம் 493, 494.

விளக்கம் : விக்கிரம பாண்டியன் வெற்றிச் சிறப்பைக் கூறுகின்றன.

*சாசனச் செய்யுள்*

ஏந்து மருவி யிரவி புரவியின்முன்
பூந்து வலைவீசும் பொதியிலே—காந்துசின
வேணுடனை வென்ற விக்கிரம பாண்டியன்மெய்ப்
பூணுரம் பூண்டான் பொருப்பு. 1

புயலுந் தருவும் பொருகைப் புவநேக வீரபுனல்
வயலுந் தரளந்தரு கொற்கை காவல வாரணப்போர்
முயலுங் கணபதி மொய்த்த செஞ்சோதி முகத்திரண்டு
கயலுண் டெனுமதுவோ முனிவாறிய காரணமே. 2

வெங்கண் மதயானை விக்கிரம பாண்டியனே
பொங்கி வடதிசையிற் போகாதே—யங்கிருப்பாள்
பெண்ணென்று மீண்ட பெருமாளே பேரிசையாழ்ப்
பண்ணென்றும் வேய்வாய் பகை. 3

குறிப்பு :—இங்குக் கூறப்படும் விக்கிரம பாண்டியன், சடையவர்மன் விக்கிரம பாண்டியன் ஆவன். இவனுக்குப் புவனேக வீரன் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. 13-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இருந்தவன். இவன், சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் பாண்டி நாட்டின் ஒரு பகுதியை அரசாண்டான்.

செய்யுள் 1. வேணாடன் ஆகிய திருவாங்கூர் அரசனை வென்று அவனுடைய பொதிகைமலையைத் தன்னுடைய மலையாக்கிக்கொண்டதைக் கூறுகிறது.

செய்யுள் 2. விக்கிரம பாண்டியனுக்குப் புவனேக வீரன் என்னும் சிறப்புப் பெயர் உண்டு. இவன் காகதீய அரசன் வீரகண்ட கோபாலனைப் போரில் கொன்றான். பிறகு, அவன் உறவினனாகிய கணபதி என்பவன் இவனிடம் நட்புக்கொள்ள, அவனுக்கு அரசை அளித்தான். இச்செய்தியைக் குறிக்கிறது இச்செய்யுள்.

செய்யுள் 3. "பொங்கி வடதிசையிற் போகாதே அங்கிருப்பாள் பெண்" என்பது, தெலுங்கு தேசத்தின் ஒரு பகுதியைக் காகதீய குலத்தில் வந்த ருத்ராம்பா என்பவள் அரசாண்டதைக் கூறுகிறது. இந்த இராணி ருத்திரதேவ மகாராஜா என்னும் ஆண்பெயர் பூண்டு அரசாண்டாள் என்று பிரதாபருத்திரீயம் என்னும் நூல் கூறுகிறது. பெண்ணின்மேல் போருக்குச் செல்வது அரசருக்கு மரபன்று என்பதை இச்செய்யுள் கூறுகிறது.

# விக்கிரம பாண்டியன்

இடம் : தென் ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவில் இரண்டாம் பிராகார வாயிலின் மேற்குப் பக்கச் சுவரில் உள்ளது.

பதிப்பு : எண் 228. தென் இந்திய சாசனங்கள், நான்காந் தொகுதி. (No. 228. S. I. I. Vol. IV.)

விளக்கம் : புவனேக வீரன் என்னும் சிறப்புப் பெயருடைய விக்கிரம பாண்டியன், வெள்ளாறு என்னும் இடத்தில் போர் வென்றதையும், பகை மன்னரைச் சிறைப்பிடித்ததையும் இச்செய்யுட்கள் கூறுகின்றன.

### சாசனச் செய்யுள்

சீர்கொண்ட வெள்ளாறு குருதிப் பெருக்கிற்
செவ்வாறு பட்டோட வவ்வாறு சென்றப்
போர்வென்று வனப்பேய் நடங்கண் டதற்பின்
புலியூர் நடங்கண்ட புவனேக வீரா
பார்பண் டளந்துண்டோ ராலிற் கிடக்கும்
பச்சைப் பசுங்கொண்ட லேபத்ப நாபா
கார்கொண்ட நின்கையில் வேலுக்கு வற்றுங்
கடலல்ல வென்பேதை கண்டந்த கடலே. 1

மாறுபடு மன்னவர்தங் கைபூண்ட வாளிரும்பு
வேறுமவர் கால்பூண்டு விட்டதே—சீறிமிக
வேட்டந் திரிகளிற்று விக்கிரம பாண்டியன்த
ணுட்டங் கடைசிவந்த நாள். 2

குறிப்பு :—செய்யுள் 1. புவனேக வீரன்-இது மாரவர்மன் விக்கிரம பாண்டியனின் சிறப்புப் பெயர்.

செய்யுள் 2. விக்கிரம பாண்டியன். இவன் கி. பி. 1269 முதல் 1296 வரையில் அரசாண்டான். மூன்றாங் குலோத்துங்க சோழன் காலத்தில் இருந்தவன். இந்தச் சோழன் உதவியி ஞல் பாண்டிய அரசைப் பெற்றவன்.

---

## பல்லவர் கோன்

இடம் : தென் ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவிலில் உள்ள சாசனம்.

பதிப்பு : தென் இந்திய சாசனங்கள், தொகுதி பன் னிரண்டு ; முன்னுரை, பத்தாம் பக்கம். (Page 10, Preface, S.I.I. Vol. XII.)

விளக்கம் : பல்லவ அரசன் தில்லையில் உலா வந்ததைக் கூறுகிறது.

### சாசனச் செய்யுள்

சுந்தரத் தோரண நாட்டித் துகிற்கொடி சூட்டிமுத்துப்
பந்தரப் பாலிகை தீபம் பரப்புமின் பல்லவர்கோன்
செந்தளிர்க் கைக்கோத் தபையன் மகளுடன் தில்லையுலா
வந்தளிக்கும் பெருமாள் வெற்பர் மாதை மணஞ்செய்யவே.

குறிப்பு : அபையன் - அபயன். அபயன் மகள் - சோழ அரசன் மகள்.

---

# குந்தவையாழ்வார்

இடம் : தென் ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவிலின் உள்பிராகாரம் வடக்குப் புறச் சுவரில் உள்ளது.

பதிப்பு : இந்திய சாசனங்கள், தொகுதி ஐந்து, பக்கம் 105. (Epigraphia Indica, Vol. V. Page 105.)

விளக்கம் : குலோத்துங்க சோழனுடைய தங்கையார் குந்தவையாழ்வார், தில்லைச் சிற்றம்பலத் திருக்கோவிலில் செய்த தான தருமங்களைக் கூறுகிறது. இச்செய்யுளின் மேலும் கீழும் உரைநடையில் சில செய்திகள் எழுதப்பட்டுள்ளன.

*சாசனச் செய்யுள்*

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர் திருத்தங்கையார் ராஜராஜன் குந்தவையாழ்வார் ஆளுடையார்க்கு தண்ணீர் அமுது செய்தருள இட்ட மிண்டம் ஒன்றினுல் குடிநற்கல் நிறை மதுராந்தகன் மாடையோடு ஒக்கும் பொன் நும். ஐம்பதின் கழஞ்சு. உ

நானிலத்தை முழுதாண்ட சயதரற்கு
 நாற்பத்து நாலாண்டில்
மீனநிகழ் நாயற்று வெள்ளிபெற்ற
 உரோகிணிநா ளிடபம்போதால்
தேனிலவு பொழிற்றில்லை நாயகர் தன்
 கோயிலெலாம் செம்பொன் மேய்ந்தா
ளேனவருந் தொழுதேத்தும் ராஜராஜன்
 குந்தவை பூவிந்தையாளே.

தில்லைநாயக தேவற்குத் திருக்கண்ணுடியும் இட்டார். உ

ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு காம்போச ராஜன் காட்சியாகக் காட்டின கல்லு. இது உடையார் ராஜேந்திர சோழ தேவர் திருவாய்மொழிந்தருளி உடையார் திருச்சிற் றம்பல முடையார் கோவிலில் முன் வைத்தது. உ

இந்தக் கல்லு திருவெதிரம்பலத்து திருக்கல் சரத்தில் திருமுன்பத்திக்கு மேலைப்பத்தியிலே வைத்தது. உ

குறிப்பு :—இந்தச் செய்யுளில் சயதரன் என்பது முதலாங் குலோத்துங்க சோழனின் சிறப்புப் பெயராகும். அவனுடைய நாற்பத்துநாலாம் ஆண்டில், குந்தவையார் சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்ததாக இச்செய்யுள் கூறுகிறது. சயதரனுடைய 44-ஆம் ஆண்டு கி. பி. 1114 என்பர் சரித்திர நூலோர். இந் தக் குந்தவையார், ஸ்ரீ இராஜராஜ சோழன் மகளும் குலோத் துங்க சோழன் தங்கையும் ஆவார். இவர் சிதம்பரக் கோவி லைப் பொன் வேய்ந்ததோடு, வேறு சில தானங்களையும் செய் ததை இச்செய்யுளும் வசனமும் கூறுகின்றன.

அன்றியும், இராஜேந்திர சோழனுக்குக் காம்போச அரசன் கல் ஒன்றைக் காட்சிப் பொருளாக அளித்ததையும், அக்கல் சிற்றம்பலத்தின் எதிரம்பலத்தில் வைக்கப்பட்டதை யும் இந்தச் சாசனம் கூறுகிறது.

சரித்திரப்புகழ் படைத்த இந்தக் கல் இப்போது சிதம்பரத் திருக்கோவிலில் இருக்கிறதா? புதுக்கப்பட்டபோது இந்தக் கல் தவறிப்போய்விட்டதா? இதைப்பற்றி ஆராய்ச்சி செய்து இக் கல்லைக் கண்டெடுக்கவேண்டுவது அறிஞர் கடமை யாகும்.

---

# கம்பன் மூவேந்த வேளான்

**இடம் :** தென்ஆர்க்காடு மாவட்டம், திருக்கோயிலூர் தாலுகா, கீழூர். இவ்வூர் வீரட்டானேசுவரர் கோவிலின் திருவுண்ணாழிகையின், தெற்கு-கிழக்கு-வடக்குப் புறச் சுவர் களில் எழுதப்பட்டுள்ள து.

**பதிப்பு :** எண் 863. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு. (No. 863. S. I. I. Vol. VII.)

**விளக்கம் :** இந்த அழகான அகவற்பா, முதலாம் இராசராச சோழன் காலத்தில் எழுதப்பட்டது. இந்தச் சோழனிடம் அதிகாரியாயிருந்த கம்பன் மூவேந்த வேளான் என்பவர், வீரட்டானேசுவரர் கோவிலில் செய்த தானதரு மங்களைக் கூறுகிறது. இந்தக் கம்பன் மூவேந்த வேளானை அம்பர்நாடன், ஆலங்குடிக் கோன், திரைமூர் நாடன், மணற்குடி நாடன் என்று இச்செய்யுட்கள் கூறுகின்றன.

இந்த அகவற்பாவின் இடையிடையே சில எழுத்துக்கள் மறைந்துவிட்டன.

### சாசனச் செய்யுள்

.... .... .... ....
ஜயஜய வென்று மொழி
பன்னிய வாய்மையிற் பணியப் பொன்னியல்
விசும்பரிற் கதமும் பசும்புரி வெள்ளுளை
நெடுஞ்சுவற் றெடுத்த குறுந்துணைப் படுங்க
னள்ளுறப் பொன்ஞான் வள்ளுற வச்சத்
தனிக்கா லரசு மனக்காற் கங்குற்
குழம்புபடு பேரிருட் பிழம்புபட வுருட்டிய
செஞ்சுடர் மௌலி வெஞ்சுடர் வானவன்
வழிமுதல் வந்த மஹிபதி வழிமுத
லதிபதி நரபதி அஸ்வபதி ....ட

கஜபதி கடலிடங் காவலன் மதிமுதல்
வழுதியர் வரைபுக மற்றவர் தேவிய
ரழுதுய ரழுங்கலி லழுங்கப் பொழுதியல்
வஞ்சியிற் காஞ்சி வகுத்த செஞ்சிலைக்
கலிங்கன் கனெ . . கப்பா ...வங்கன்
அம்மை . . . . . . . . . . . . . . . . ட்
புதுமலர் வாகை புனைந்து நொதுமலர்
கங்க பாடி கவ்விக் கொங்கம்
வெளிப்படுத் தருளி யளிபடுத் தருளிய
சாரல் மலையட்டுஞ் சேரன் மலைநாட்டுத்
தாவடிக் குவட்டின் பாவடிச் சுவட்டுத்
துடர்நெய்க் கனகந் துகளெழ நெடுநற்
கோபுரங் கோவை குலைய மாபெரும்
புரிசை வட்டம் பொடிபடப் புரிசைச்
சுதைகவின் படைத்த சூளிகை மாளிகை
யுதைகை முன்னெள்ளெரி கொளுவி
உதகை வேந்தைக் கடல்புக வெகுண்டுபோந்து
சூழமண் டலந்தொழ வீழமண் டலமுங்கொண்டு
தண்டருளிப் பண்டு தங்கடிருக் குலத்தோர்
தடவரை எழுதிய பொங்குபுலிப் போத்துப்
புதுக்கத் துங்கத் திக்கினிற் சேனை
செலுத்தி மிக்க வொற்றை வெண்குடைக்கீ
ழிரட்டை வெண்கவரி தெற்றிய வனலந்
திவள வெற்றியுள் வீற்றிருந் தருளிய
வேந்தன் போற்றிருந் தண்டமிழ் நாடன்
சண்ட பராக்கிரமன் றிண்டிறற் கண்டன்
செம்பியர் பெருமான் செந்திரு மடந்தைமன்
ஸ்ரீராஜ ராஜ னிந்திர சமானன்
ராஜசர் வஞ்ஞனெனும் புலியைப் பயந்த
பொன்மான் கலியைக் கரந்து கரவாக்
காரிகை சுரந்த முலைமிகப் பிரிந்து

முழங்கெரி நடுவணுந் தலைமகற் பிரியாத்
தையல் நிலைபெறுந் தூண்டா விளக்கு
. . . .   . . . .   . . .சி சொல்லிய
வரைசர்தம் பெருமா னதுலனெம் பெருமான்
பரைசை வண்களிற்றுப் பூழியன் விரைசெயு
மாதவித் தொங்கல் மணிமுடி வளவன்
சுந்தர சோழன் மந்தர தாரன்
திருப்புய முயங்குந் தேவி விருப்புடன்
வந்துதித் தருளிய மலையர் திருக்குலத்தோ
ரன்மை யாக தமரகத் தொன்மையிற்
குலதெய்வ . . . .   . . . .   கொண்டது
நலமிகுங் கவசந் தொடுத்த கவின்கொளக்
கதிர்நுதித் துவசந் தொடுத்த சுதைமதிற்
சூழகழ்ப் புளகப் புதவக் களகக்
கோபுர வாயின் மாடமாளிகை வீதித்
தேசாந் தன்மைத் தென்திருக் கோவலூ
ரீசரந் தன்றக் கவன்றது மீசரங்
குடக்குக் கலுழி குணக்குகால் ..ழுங்கக்
காளா கருவுங் கமழ்சந் தனமுந்
தாளார் திரள்ச் சாளமு நீளார்
குறிஞ்சியுங் கொடியு முகடுயர் குன்றிற்
பறிந்துடன் வீழப் பாய்ந்து செறிந்துயர்
புதுமத கிடறிப் போர்க்கலிங் கிடந்து
மொதுமொது முதுதிரை விலகி கதுமென
வன்கரை பொருது வருபுனற் பெண்ணைத்
தென்கரை யுள்ளது தீர்த்தத் துறையது
மொய்வைத் தியலு முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்
மூரிவண் டடக்கைப் பாரித னடைக்கலப்
பெண்ணை மலயர்க் குதவிப் பெண்ணை
யலைபுன லழுவத் தந்தரிக்ஷந் செல

மினல் புகும் விசும்பின் வீடுபே றெண்ணிக்
கனல்புகுங் கபிலக் கல்லது புனல்வளர்
பேரெட் டான வீரட் டான
மனைத்தினு மனாதி யாயது நினைப்பினு
முணர்தற் கரியது யோகிக ளுள்ளது
புணர்தற் கினியது பொய்கைக் கரையது
சந்தன வனத்தது சண்பகக் கானது
நந்தன வனத்தி னடுவது பந்தற்
சுரும்படை வெண்பூங் கரும்பிடை துணித்தரத்
தாட்டொலி யாலை யயலது பாட்டொலிக்
கருங்கைக் கடையர் பெருங்கைக் கடைவாள்
பசுந்தாட் டியுஞ் செந்நெற் பழனத்
தசும்பார் கணி . . .   . . ,   . . . . .
யவற்றை யருக்க னரிச்சனை முற்றிய
நான்மறை தெரிந்து நூன்முறை யுணர்ந்தாங்
கருச்சனா விதியொடு தெரிச்சவா கமத்தொழில்
மூவெண் பெயருடை முப்புரி நூலோர்
பிரியாத் தன்மைப் பெருந்திரு வுருடையது
பாடகச் சீறடிப் பணைமுலைப் பாவையர்
நாடகத் துழதி நவின்றது சேடகச்
சண்டையுங் கண்டையுந் தாளமுங் காளமுங்
கொண்டதிர்ப் படகமுங் குளிறுமத் தளங்களுங்
கரடிகைத் தொகுதியுங் கைம்மணிப் பகுதியு
முருடியல் திமிலை முழக்கமும் மருடரு
வால்வளைத் துணையு மேல்வளைத் தணையுங்
கருப்பொலி மேகமுங் கடலுமெனக் களுலி
திருப்பொலி திருப்பலி சிநத்து விருப்பொலிப்
பத்தர்தம் பாடல் பயின்றது முத்தமிழ்
நாவலர் நாற்கவி நவின்றது ஏவலி
லருஷையோ டரஹர வெனக்குனித் தடிமைசெய்
பருஷையர் பகுவிதம் பயின்றது கருஷை

முக்கண்ணவ னுறைவது கடவுளர் நிறைவது
மண்ணவர் தொழுவது வானவர் மகுழ்வது
மற்று மின்ன வளங்கொள் மதிற்பதாகைத்
தெற்றுங் கொழுநிழற் சிவபுரத் தரற்குப்
பன்னு ணிலைபெற முந்நா ளுரவோன்
செய்த தானந் தேவன் குடியி
லலகியல் மரபி னமைந்து உலகியல்
சாண்பன் னிரண்டிற் சமைந்த தனிக்கோல்
போற்றுற வளந்த நூற்றறு பதுகுழி
மாவொன் றாக வந்த வேலி
யாறே காலி லந்தங் களைந்து
நீங்கிய நிலத்தா னீங்கா நெற்றுகை
ஆங்கொரு மாவிற் கறுகல மாகக்
கொழுநூற் றவராடுங் கூட்டி யளந்த
எழுநூற் றிருபதி லிறைமகற் குரிமை
நாழி யெட்டான் வாழியட் டானக்
கருங்கா லொன்றாற் செங்கை யிரண்டிட்
டளந்த நெல்லா லறுபதனிற் களைந்த
நிவந்தத் தன்மை நினையி லுவந்து
நஞ்சுண் டவருக் கமுதுண நயந்த
வொத்தெண் வழுவாப் பத்தெண் குத்தல்
பழநெல் லரிசி பன்னிரு நாழிக்கு
பதினை யிரட்டிநெற் பதினை யிரட்டியுங்
குறுவா ளான நெடுவா ணயனிக்
கோரிரு நாழியுள்ப் படுத்து யர்ந்தநெல்
நாலெட் டான நாழியும் மெ ....
.... .... மிளகுமுப் பிடிக்கு
செல்லக் குடுத்த நெல்லஞ் ஞாழியுஞ்
சூழ்கறி துவன்ற பொழ்கற் கொள்நெற்
பெருக்கிய நாலுரி யுருக்கிய நறுநெ
யுழக்கரை தனக்கு வழக்கரை வினவில்

முந்நா ழியுந்தயிர் முந்நாழிக் காங்கறு
நானா ழியுமடைக் காய மிதிற்குப்
பன்னீ குழக்கும் பரிசா ரகமா
ணன்னான் கினுக்கு நெல்லறு நாழியுந்
திருமடைப் பள்ளிப் பெருமடைக் குதவு
மிந்தன வொருவற்குத் தந்த முன்னாழியும்
ஆகநெற் கலமு மேகநற் றிவசம்
அப்பரி சியற்றலி லறுவகை யிருதுவு
மிப்பரி சியற்றி யெழுந்துநே ரானபின்
புதுமலர் விரிந்து மதுமலர் சோலைப்
புள்ளூர் கோவ லுள்ளூர்ப் பழநிலம்
இரட்டு முக்காலிற் றந்த பதினைஞ்சு
மொட்டுக் கல்லைக் கவர்மூன்று மாவும்
ஆலஞ் செறுவி லஞ்சு மாவும்
திரண்டு பாய்புனற் றெங்காச் செறுவி
லிரண்டு மாவும் இலுப்பைக் காலிரண்டும்
நெல்லா லித்தெழும் புல்லா லிப்புற
மஞ்சொடுங் கூட்டி ஆகிய நிலத்தொகை
அப்புத்திரண் டியல்மா முப்பத் திரண்டு
மேலா றுணந்த நாலா றெண்பயி
லந்தண ரனைவர்க்கு மரிச்சனா போகந்
தந்த பின்னைத் தடமலர்ப் பொய்கைப்
போதகர் பழனப் புதுமலர்ச் சோலைச்
சிதாரி பலமஞ்சு மஞ்சாமற் கெட்ட
திருவையன் கோட்டமில் குணத்தாற் செம்பொற்
புரிசைச் சிவபுரத் தாற்குக் கோவ
லந்தணர் பாற்கொண்டு கொடுத்தன
பண்டைக் கோலாற் பண்டைக் குழித்தொகை
மணங்கொண் டீண்டு முணங்கல் பூண்டி
யொப்புத் தொறுமா முப்பத்தறு மாவு
மிகவந் துயர்புனற் பகவந்தக் கழனி

யெட்டுமுத லிருபது மாவு மட்டவிழ்
பூத்துழா வியபுனல் மாத்துழான் வேலி
ஏவிய வெட்டு மாவும் வாவியிற்
கோடறு பழனக் காடேறு மாநில
மஞ்சுங் களர்நிலம் பத்துந் நெஞ்சகத்
துள்ளத் தகும்புன லூரவுக் கடலுகா
யம்பளத் திரண்டும் பாவருங் கணியக்
கழனியி லெட்டுங் கைகலந் துரைப்பிற்
றுழனி .... .... கலமென
மேற்படி காலாற் பாற்பட வளந்த
வீங்குட னவர் பாங்குடன் றெகுத்த
மெஞ்ஞூற் றுரைகயில் மேதக தூநெ
லஞ்ஞூற் றிருபத் திருகலம் என
மற்றைத் தொகையில் மதிவளர் சடையோன்
பெற்ற வாரம் பிழையறப் பேசி
ஐம்பதிற் றைஞ்சொடு மொய்ம்புறு பதினெரு
கலத்தொடு முணங்கல் பூண்டியிற் கறைநெல்
நஞ்சை ஸ்ரீக்கிப் புஞ்சை நான்மா
மாத்தாற் கலவரை யான வரையறை
அறுகல மேற்றிப் பெறுகல வளவை
மூன்றெடு முப்பது குறைந்த முன்னூற்றுக்
கலத்தினில் மற்றக் கண்ணுதற் காக
நிலத்தவ ருவந்த நிவந்தந் நலத்தகு
நாளொன் றினுக்கு நான்முன் னுழி
பானிறத் தன்மைத் தூநிறக் குத்த
லரிசியி லான நெல்லு வரிசையிற்
குறுபவள் கூலி யெற்றிப் பெறுவன
பேணிய பழநெற் றூணியுங் காணிய
வையமிது புகழு நெய்யமுது முப்பிடி
கொள்ளக் கொடுத்த நெல்லறு நாழியும்
பொழுது மூன்றினுக் கிழுதுபடு செந்தயி

ரொருமுன் னாழிக் கிருமுன் னாழியு
யடைக்கா யமுதுக் காறுரி யத்து
மந்தண னொருவ னபிஷேகஞ் செய்யத்
தந்தன குறுணிமுற் றதைந்த நாழியு
மறையேவல் செய் மாணிரண் டினுக்குக்
குறைவறக் குடுத்த நெற்குறுணி ஞானாழியு
மோராண் டினுக்கு நேராண்டாக
நண்ணிய நக்ஷத் திரமென னல்லோ
னண்ணிய திருவிளக் கெண்பதுங் கண்ணெனக்
காவியர் கயல்பயி லாவியூ ரதனிற்
றிக்குடை யிவரு முக்குடை யவர்தம்
அறப்புற மான திறப்பட நீக்கிச்
சாலி விளைஞிலம் வேலி யாக்கி
முதல்வதின் மூன்றே முக்காலே யரைக்கா
லிதன்த னிவந்த மியல்வகை யுரைப்பில்
ஒப்பத் திருவனை யவர்முப்பத் திருவர்
பாடல் பயின்ற நாடக மகளிர்க்கும்
நெஞ்சா சார நிறைவொடு குறையாப்
பஞ்சா சாரியப் புகுதி யோர்க்கும்
நறைப்புது மலர்விரி நந்தவான
மிறைப்புத் தொழில்புரிந்த விருந்தவத் தோற்கும்
யோகி யொருவனுக்கு நியோக முடைநில
.... .... .... வாழியர்
செஞ்சடைக் கடவுடன் றிருவாக் கேழ்வித்
தஞ்சுடைக் கடிகையன் றனக்கும் நெஞ்சில்
விதித்த முறைமை மதித்து நோக்கி
யின்னவை பிறவு மாராஜ ராஜன்
றன்னவை முன்னற் றத்துவ நெறியி
லறங்கள் யாவையு மிறங்கா வண்ணம்
விஞ்ஞா பனத்தால் மிகவெளிப் படுத்தோன்

அன்பது வேலியி லடைகுன் றகர்க்கு
மொன்பது வேலி யுடைய வுரவோன்
கொம்பர் நாடுங் குளிர்மலர்ச் சோலை
யம்பர் நாடன் ஆலங்குடிக் கோன்
தெண்டிரைப் பழனத் திரைமூர் நாடன்
வண்டிரைத் துயர்பொழில் மணற்குடி நாடன்
நேரிய னருமொழி நித்த விநோதன்
காரிய மல்லதோர் காரிய நினையா
தாராண் டலைமைக் கற்பக சதுசன
பேராண் டலைமைப் புணர்புயத் துரவோன்
கூத்தொழில் கேளா தேத்தொழில் முனைந்த
கண்டகர் கரிசறத் துரிசறக் கலிசெக
மண்டல சுகதியில் வயப்புலி வளர்த்தோன்
வான்பால் மதியும் வலம்புரி யிடம்புரி
யான்பால் வதியும் விரிசடைக் கடவுள்
நெற்றிக் கண்ணும் நிலத்தவர் நினைந்த
தெற்றிக் கண்ணுஞ் சிந்தா மணியும்
போலப் பிறந்த புகழோன் கோலக்
கருங்களிற் றுழவன் கம்பத் தடிகள்
மாதி விடங்கு வருபரி வல்ல
வீதி விடங்கன் மென்கருப் பாலைத்
தலந்தருந் தண்டலைத் தடநீர்
நலந்தரு பொன்னி நாடுகிழ வோனே. 1

வேலியர்கோன் வீதிவிடங்கன் விறற்கம்ப
ஞலியல்மான் சோழ னதிகாரி—கோலப்
படியின்மேற் பொற்பூப் பைங்கோவல் வீரட்டர்
முடியின்மேல் வைத்தான் முயன்று. 2

பொன்முக் கழஞ்சால் மணிப்பட்டம் பூப்புனைந்து
மின்மிக்க கட்டமைத்து மேற்கட்டி—சொன்மிக்க
கோவலான் வீரட்டற் கீந்தான் குலவேலி
காவலான் வாழ்கம்பன் கண்டு. 3

சென்னி திறற் ஸ்ரீராஜ ராஜற் கியாண்டு
திகழு மிருபத்தேழிற் செழுநீர் வேலி
மன்னிய கம்பன் மஹிமாலைய மூவேந்த
வேளான் விண்ணப்பத்தால் மணிநீர்க் கோவ
லென்னியல்சீர் வீரட்டத் திலிங்க மொன்று
பொன்னூற்றுற் செய்ததற்கு வெள்ளிப் பீடம்
பன்னிய தொண்ணூற்றறு முக்கழஞ்சுடை யம்பொன்
பேர்த்தும் அய்ங்கழஞ்சின் மேற் பத்துமாவே. 4

குறிப்பு :—இச்செய்யுளில் சில சொற்கள் இவ்வாறு பயின்றுள்ளது காண்க : அரிச்சனே (அருச்சனே), துழதி (தொகுதி), மகுழ்வது (மகிழ்வது), உள்ப்படுத் துயந்த (உட்படுத் துயர்ந்த), குடுத்த (கொடுத்த), ஞாழி (நாழி), ஞெல் (நெல்), ஞீக்கி (நீக்கி), ஞிலம் (நிலம்).

இச்செய்யுட்களில் கூறப்படும் திருப்பணிகள் இராஜராஜ சோழனுடைய ஆட்சி இருபத்தேழாவது ஆண்டில் செய்யப் பட்டன.

---

## அரும்பாக்க எல்லை

இடம் : தென் ஆர்க்காடு மாவட்டம், திருக்கோயிலூர் தாலுகா, கீழூர். இவ்வூர் வீரட்டானேசுவரர் கோவில் தென் புறச் சுவரில் உள்ளது.

பதிப்பு : எண் 857. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு. (No. 857. S. I. I. Vol. VII.)

விளக்கம் : கோவிராஜ ராஜகேசரி பன்மர் என்னும் சோழ அரசனுடைய 11-ஆம் ஆண்டில் எழுதப்பட்டது இச் சாசனச் செய்யுள். இது அரும்பாக்கம் என்னும் ஊரின் எல்லையைக் கூறுகிறது. இந்தச் சாசனச் செய்யுளின்மேலே கீழ்க்கண்ட வசனம் எழுதப்பட்டிருக்கிறது :

"ஸ்வஸ்திஸ்ரீ. காந்தளூர்சாலை கலமறுத்த கோவிராஜ ராஜ கேசரிப் பன்மக் கியாண்டு கக-ஆவது மலாட்டு குறுக் கைக் கூற்றத்து திருக்கோவலூர் திருவீரட்டான முடை யாற்கு மிலாடு உடையான் இராமன் நாட்டடிகள் வைத்த நொந்தா விளக்கு ஒன்றுக்கும் திருவுண்ணாழிகை சபையார் வசம் சந்த்ராதித்தவல் விளக்கெரிப்பதற்குக் குடுத்த பொன் பன்னிரு கழஞ்சு. பன்மாஹேஸ்வர ரக்ஷை."

சாசனச் செய்யுள்

இறைவ னரும்பாக்க மெல்லைக் கற்குட்டம்
முறைசேர் கோவல் முழைசுனை—பிறைநுதலாய்
வெண்மாறங் கெல்லை மேல்பால் கறடிவடாவாறு கீழ்பால்
கண்ணத்தம் பாடியாங் காண்.

குறிப்பு :—இவ்வெண்பாவின் மூன்றுமடி பொருந்தவில்லை.

---

## கம்பன் வீதிவிடங்கன்

இடம் : தென் ஆர்க்காடு மாவட்டம், திருக்கோயிலூர் தாலுகா, கீழூர். வீரட்டானேசுவரர் கோவிலின் வடக்குப் புறத்துச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு : எண் 880. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு. (No. 880. S. I. I. Vol. VII.)

விளக்கம் : "திருமகள் போலப் பெருநிலச் செல்வி யும்" என்று தொடங்குகிற கோவிராஜ பாகேசரி பன்மரான ஸ்ரீ ராஜராஜ தேவரின் 29-ஆவது ஆண்டில் எழுதப்பட்ட ஒரு சாசனத்தின்கீழ் இந்தச் செய்யுள் எழுதப்பட்டிருக்கிறது. ஜயங்கொண்ட சோழபுரத்து மிலாடான ஜனநாத வளநாட் டுக் குறுக்கைக் கூற்றத்துத் திருக்கோவலூர் வீரட்டான

முடைய மகாதேவருக்கு 150 பசுக்கள் தானங் கொடுக்கப் பட்டதை இச் செய்யுள் கூறுகிறது. "பசு ஒன்றுக்கு பாலாழாக்காக நிசதம் பால் பதக்கிருநாழி முழாக்குப் பால் உச்சம்பொழுது பாலாடியருள" இந்தப் பசுக்கள் இக்கோவிலுக்குத் தானங் கொடுக்கப்பட்டன.

### சாசனச் செய்யுள்

பாலிக்குங் கோவலூர் சிற்றிங்கூர் மருதூர் பதிமல்லம்
பதிற்றுப்பத் தொடுபதிற் றைஞ்சான
காலிக்குப் புணையாகத் திருவுண்ணா ழிகையார் கைக்கொண்டு
கறவைஒன் றுலாழாக் காங்கணக்குக்
கோலிக்கொள் பால்பதினெண் ணாழிமுழக் குக்கோவல்
வீரட்டர்க்கு மஞ்சனமாடக் குடுத்தான்
வேலிக்கோன் திறற்கம்பன் விறல்வீதி விடங்கன் வேந்தர்பிரா
னருமொழிக்கு விண்ணப்பஞ் செய்தே.

குறிப்பு :—பதிற்றுப்பத்தொடு பதிற்றைஞ்சு-நூற்றைம்பது. காலி - பசு. திருவுண்ணாழிகையார் - அகநாழிகையார் (கருப் பக்கிருகத்தார்), அதாவது மூலஸ்தானத்தில் பூசை செய்யும் ஆதிசைவர்கள். குடுத்தான்-கொடுத்தான். பழைய சாசனங் களில் இந்தச் சொல் குடுத்தான் என்றே எழுதப்பட்டுள்ளது. வேலிக்கோன் கம்பன் வீதிவிடங்கன் - இவன் இராஜராஜ சோழனின் ஒரு உத்தியோகஸ்தன். அருமொழி - அருமொழித் தேவர்; இது இராஜராஜ சோழனின் பெயர்.

# காடவர்கோன் பாவை

இடம் : தென்ஆர்க்காடு மாவட்டம் திருக்கோவலூர் தாலுகா, சிற்றாமூர். இவ்வூர் மலைநாதர் கோவிலின் பின்புறமுள்ள பொடவின் அடியில் உள்ள செய்யுள்.

பதிப்பு : எண் 830. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு. (No. 830. S. I. I. Vol. VII.)

விளக்கம் : சிற்றாமூர் மலைநாதர் கோவில் ஜைனக் கோவில். இக்கோவிலுக்குச் சோழ அரசியார் தருமஞ் செய்ததை இச்செய்யுள் கூறுகிறது.

### சாசனச் செய்யுள்

காடவர்கோன் பாவை கணைகழற்காற் சோழற்கு
நீடுபுகழ்த் தேவியார் நீணிலத்துப்—பீடுசிறந்
தமரும் சிற்றாமூர் செய்திறங்கல் மீட்பித்
தறம்பெருக வாக்கு மவள்.

குறிப்பு :—காடவர்கோன் பாவை - பல்லவ அரசன் மகள். இவர் சோழ அரசனை மணந்தார். இவர், நிலத்தைச் செப்பனிட்டு அதனை இக்கோவிலுக்குத் தானமாக வழங்கினார்.

# புத்தன் இராசசிங்கன்

இடம் : தென் ஆர்க்காடு மாவட்டம், திண்டிவனம் தாலுகா. திண்டீசுவரர் கோவில் முன்மண்டபத்துத் தென் புறச் சுவரில் உள்ள செய்யுள்.

பதிப்பு : எண் 837. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு. (No. 837. S. I. I. Vol. VII.)

விளக்கம் : புத்தன் இராசசிங்கன் என்பவன் இந்தக் கோவிலின் முன்மண்டபத்தைக் கட்டியதை இந்தச் செய்யுள் கூறுகிறது. இவன் கோ ராஜராஜ ராஜகேசரி பர்மன் என்னும் சோழ மன்னனுக்குக் கீழடங்கிய சிற்றரசன்.

*சாசனச் செய்யுள்*

சீராருந் தென்கிடங்கிற் றிண்டீச்சரத் தரனுக்
கேராருங் கன்மண்டப மெடுத்தான்—பாராரும்
பொன்னனை பூமகள்சேர் புத்தன் இராசசிங்க
னென்னுனை ஆறையா றேறு.

புத்த னிராசசிங்கன் ஏவத் திருத்திண்டீஸ்வரமுடையார் மண்டபம் செய்வித்தான் வாகூர் சிவப்பிராமணன் திருமாங் கோயில் வாணகோவரையன்.

குறிப்பு :—கிடங்கில் என்பது திண்டிவனத்தின் பழைய பெயர். இந்த மண்டபம் அமைத்த இராசசிங்கனின் மனைவி கண்ணன் அருஞ்சிகைப்பிராட்டி என்பவர், இந்தக் கோவிலுக்கு விளக்கு எரிப்பதற்காக ஆடுகளைத் தானம் செய்திருக்கிறார். "இவ்வூர்க் கடம்புழான் புத்தன் இராசசிங்கன் அகமுடையாள் கண்ணன் அருஞ்சிகைப் பிராட்டி வைத்த நந்தா விளக்கு இரண்டினுக்கு விட்ட சாவாமூவாப் பேராடு நூற்றெண்பது" என்று இக்கோவிலிலுள்ள இன்னொரு சாசனம் கூறுகிறது. (*No. 836. S. I. I. Vol. VII.*)

---

# நரேந்திரப் போத்தரையன்

இடம் : தென்ஆர்க்காடு மாவட்டம், திண்டிவனம் தாலுகா, தளவானூர். இவ்வூரில் உள்ள பாறைக் குன்றில் அமைக்கப்பட்ட குகைக்கோயிலின் தூணில் உள்ள செய்யுள்.

பதிப்பு : இந்திய சாசனங்கள், தொகுதி 12. பக்கம் 225—26. (Epigraphia Indica Vol. XII. P. 225—26.)

விளக்கம் : நரேந்திரப் போத்தரையன் என்பது மகேந்திரவர்மன் I உடைய சிறப்புப் பெயர். இவன் கி. பி. 600 முதல் 630 வரையில் அரசாண்ட பல்லவ அரசன். முதன் முதலாகத் தமிழ்நாட்டிலே பாறைகளைக் குடைந்து குகைக் கோயில்களை அமைத்தவன் இவனே. வெண்பேடு—இப்போதுள்ள தளவானூருக்குப் பழைய பெயர். சத்துரு மல்லன் என்பதும் முதலாம் மகேந்திர வர்மனுடைய பெயர்.

*சாசனச் செய்யுள்*

தொண்டையந் தார்வேந்தன் நரேந்திரப் போத்தரையன்
வெண்பேட்டின் தென்பால் மிகமகிழ்ந்து—கண்டான்
சரமிக்க வெஞ்சிலையான் சத்துருமல் லேஸ்வராலயமென்
றரனுக் கிடமாக வாங்கு.

இவ்வூர் பிரம மங்கலவன் செல்லன் சிவதாசன் சொல்லியது.

குறிப்பு :—இதுவரையில் நமக்குக் கிடைத்துள்ள சாசனச் செய்யுட்களில் இதுவே காலத்தினால் முற்பட்டது. நரேந்திரப் போத்தரையன் என்பவன், இக் குகைக்கோயிலை அமைத்து இதற்குச் சத்துருமல்லேஸ்வராலயம் என்று பெயரிட்டதை இச்செய்யுள் கூறுகிறது. இச்செய்யுளைப் பாடியவர் பிரமமங்கலவன் செல்லன் சிவதாசன் என்பவர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டு.

# காடவராயர்கள்

இடம் : தென்ஆர்க்காடு மாவட்டம், விருத்தாசலம் தாலுகா, விருத்தாசலம். வேதகிரீசுவரர் கோவிலின் இரண்டாவது கோபுரவாயில். இவ்வாயிலின் வலப்புறத்தில் உள்ள சாசனம்.

பதிப்பு : எண் 263. தென் இந்திய சாசனங்கள், தொகுதி பன்னிரண்டு. (No. 263. S. I. I. Vol. XII.)

விளக்கம் : கீழ்க்கண்ட செய்யுட்கள் காடவராயர் சிலரைப் புகழ்கின்றன. காடவராயர் என்பவர் பல்லவ அரசர்கள். வளந்தாருரான காடவராயரையும், அவர் மகன் ஆட்கொள்ளியாரான காடவராயரையும், அவர் மகன் நாலுதிக்கும் வென்ருரான ஏழிசை மோகன் காடவராயரையும், அவர் தம்பி அரசநாராயணன் கச்சிராயரான காடவராயரையும் புகழ்கின்றன.

இந்தச் செய்யுட்கள் எழுதப்பட்டுள்ள கோபுரவாயிலுக்குக் கண்டராதித்தன் வாசல் என்று பண்டைக் காலத்தில் பெயர் வழங்கப்பட்டது.

### சாசனச் செய்யுள்

அரசநாராயணன் ஆளப்பிறந்தான் வீரசேகரனை காடவராயன் கண்டராதித்தன் வாசலில் கல்வெட்டுவித்தபடி.

வரிவளை பொலம்பூண் கொடுத்த மங்கையர்
மயலுற மனந்தான் துடக்கு கின்றன
மதிகதி ரிரண்டாங் கெனச் சிறந்தொளிர்
வயிரமு மிசைத்தாங் கிடப் பிசைந்தன
பரிமள தளந்தான் சமைத்த குங்கும
பரிவொடு பசுஞ்சாந் தெழக் கமழ்ந்தன
பலிகொள விரந்தாங் குமிக்க சிங்களர்
பரவையில் விழுந்தாங் கெடத் துடர்ந்தன

கரிபரி உடன்சேர்ந் தெடுத்த கங்கர்கள்
கருவரை யிடந்தான் புகக் கடந்தன
கனலென வுகந்தான் சுடத் துடங்கிய
கலிவலி பெலந்தான் புகத் துரந்தன
வரிபெற விரந்தான் தடக்கை ஒன்றினி
லகலிட முகந்தாம் புனற் சொரிந்தன
வரசரை நெடுஞ்சரங் கிடக்கை கொண்டன
அழகிய வளந்தான் திருப்பு யங்களே. 1

இது வளந்தானுரான காடவராயர் கவி.

அங்குலவும் வயற்பெறுகை ஆட்கொள்ளி காடவர்கோன்
பங்குலவு மதசானை பதநிகளம் விடுகின்ற
னிலங்குமணி முடியரசர் யார்கொலோ விணையடியில்
விலங்கு கலின் கலினென்ன வீதிதொறும் வருவாரே. 2

இது இவர் மகனுர் ஆட்கொள்ளியாரான காடவராயர் கவி.

பொருகாம னம்பு புகுந்துயிர்மே லன்றிச்
செருகா விடையாமஞ் செல்லா—தொருகாலும்
பாகாகா மாலியானைக் கண்டு பணிந்தானை
மோகாகா வந்திபடா முன். 3

இது இவர் மகனுர் நாலுதிக்கும் வென்றுரான ஏழிசை மோகன் காடவராயர் கவி.

துடக்கு மாரன் சொரிசரப் பாயல்மேற்
கிடக்கு மிவ்வுல கென்பதுங் கேட்டுமே
வடக்கு மேருவுந் தெற்கு மலையமுங்
கடக்கு மாணையான் கச்சிய ராயனே. 4

மும்மலை முன்பெறிந்தாய் பின்பு முரணிரட்டர்
தெம்மலை வாதாபி சென்றெறிந்தாய்—மெய்ம்மைச்
செருவரசே பின்னிச் சிலம்பா வெறிந்த
தொருவரைசே மேனு ளுடன்று 5

இது இவர் தம்பியார் அரசநாராயணன் கச்சியராயரான காடவராயர் கவி.

இவர் மகன் சகரையாண்டு ஆயிரத்தொரு நூற்றெட்டிஞல் ஆடி மாசத்துப் பிற்பத்தில் கண்டராதித்தன் வாசலுக்கு மேற்கே புறப்பட்டுக் கற்கடக மாராயன் கூடலும் அதியமாஞடும் அழித்து வெற்றிக்கொடி உயர்த்த அனுமனும் பொறித்தான் ஆளப்பிறந்தான் வீரசேகரஞன காடவராயன்.

பாரள வல்ல பணைத்தோ ளளவு பகலவன்போந்
தேரள வல்லநின் செங்கோ லளவு திகிரிச் செங்கை
காரள வல்ல பரவீர சேகர காடவநின்
போரள வெவ்வள வாம்பர வேந்தர் புறத்தளவே. 6

தாரார் மணிப்புயந் தண்ணந் துழாய்மண நாறுஞ்சந்தக்
காரார் திருநிறஞ் செய்யாள் திருமண நாறுங்கச்சி
யாரார் திகிரிக்கை யாளப் பிறந்தாற் கசஞ்சலற்குப்
பாராள் வடமன்னர் பொன்முடி நாறும் பதாம்புயமே. 7

விடையள விட்ட கொடிவீர சேகர காடவநின்
நடையள விட்டது ஞாலங்க ளேழையும் வாழிநின்போர்ப்
படையள விட்டது பத்துத் திசையும் பரியமுத்தக்
குடையள விட்ட திரிசுடர் சூழண்ட கூடத்தையே. 8

ஸ்வஸ்திஸ்ரீ. இக் கல்வெட் டழிப்பான் வல்லவரையன் சத்தியம்.

குறிப்பு :—செய்யுள் 1. இது வளந்தாஞர் ஆன காடவராயரின் புயத்தை (தோள்வலியைப்) புகழ்கிறது. செய்யுள் 2. இதில் இரண்டாம் அடியில் மதசாஜ என்றிருப்பது மதயாஜ என்றிருக்க வேண்டும். வீரசேகர காடவராயன் அதிகமான் நாட்டையும் கூடலேயும் அழித்தது சக ஆண்டு 1108 என்று கூறுகிறபடியால் அது நிகழ்ந்தது கி. பி. 1186-இல் ஆகும். அதிகமான் நாடு என்பது தகடூர் என்னும் தர்மாபுரி. கற்கடக மாராயன் என்பவன் யார் என்பது தெரியவில்லே.

# அடையவளைந்தான் வீரர்

இடம் : தென் ஆர்க்காடு மாவட்டம், கூடலூர் தாலுகா, திருவேந்திபுரம் (திருவயிந்திபுரம்). தேவநாயகப் பெருமாள் கோவில், மேலைக் கோபுரவாயிலின் இடதுபுறச் சுவரில் உள்ளது.

பதிப்பு : தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு; எண் 771. (No. 771. S. I. I. Vol. VII.)

விளக்கம் : தொண்டையர் கோமான் அடையவளைந்தான் என்னும் அரசனின் படைவீரர் சிறப்பைக் கூறுகிறது இச் செய்யுள்.

### சாசனச் செய்யுள்

அருள்புனை தொண்டையர் கோமா னடைய வளைந்தபிரான்
பொருபடை மன்னவர் வீரமொன்றே; பொரும்போர் தொலைந்
வருகதிர் முந்து குணதிசை ஆள்வர், வடக்கிருப்பர் [தும்
வெருவருதென்திசைகொள்வர்,செல்லாநிற்பர்மேற்றிசைக்கே.

---

# அறவுறை

இடம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப் பள்ளிக்கு வடக்கே பன்னிரண்டு மைலில் உள்ள திருவெள் ளறை என்னும் ஊரில் உள்ள, நாலுமூலைக்கேணி என்னும் மாற்பிடுகு பெருங்கிணற்றுச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு : இந்திய சாசனங்கள், தொகுதி பதினொன்று ; பக்கம் 154—158. (Epigraphia Indica Vol. XI. Page 154—158.)

விளக்கம் : இந்தக் கிணறு, பல்லவ அரசனை தந்தி வர்மன் காலத்தில் அமைக்கப்பட்டது. இக்கிணற்றை அமைத்

தவன், கம்பன் அரையன் என்பவன். இந்தச் சாசனச் செய்யுளுக்கு மேலே, கீழ்க்கண்ட செய்தி எழுதப்பட்டிருக்கிறது :

"ஸ்வஸ்திஸ்ரீ. பாரத்துவாஜ கோத்திரத்தின் வழித் தோன்றிய பல்லவ திலக குலோத்பவன் தந்திவர்ம்மற்கு யாண்டு நான்காவ தெடுத்துக்கொண்டு ஐந்தாவது முற்று வித்தான், ஆலம்பாக்க விசையநல்லூழான் தம்பி கம்பன் அரையன் திருவெள்ளரைத் தென்னூர்ப் பெருங்கிணறு. இதன்பியர் மார்ப்பிடுகு பெருங்கிணறென்பது. இது ரக்ஷிப்பார் இவ்வூர் மூவாயிரத் தெழுநூற்றுவரும்."

## சாசனச் செய்யுள்

கண்டார் காணு வுலகத்திற் காதல் செய்து நில்லாதேய்
பண்டேய் பரமன் படைத்தநாள் பார்த்து நின்று நையாதேய்
தண்டார் மூப்பு வந்துன்னைத் தளரச் செய்து நில்லாமுன்
னுண்டேல் லுண்டு மிக்கது உலகம் மறிய வைம்மினேய்.

குறிப்பு :—இச்செய்யுளில் ஏகார ஈற்றுச் சொற்கள் யகர மெய் பெற்று நில்லாதேய், பண்டேய், நையாதேய், வைம்மினேய் என்று வந்திருப்பது கருதத்தக்கது. பண்டைக்காலத்துச் சாசனப் பாடல்களில் பெரும்பாலும் இவ்வாறே உள்ளன.

# குருகூர் நம்பி

இடம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி தாலுகா, அன்பில் கிராமம், சுந்தரராசப்பெருமாள் கோவில் வடக்குப்புறச் சுவரில் உள்ளது.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள். தொகுதி எட்டு; எண் 187. (No. 187. S. I. I. Vol. VIII.)

விளக்கம் : இந்தக் கோவிலில், அழகியபெருமாள், இளையாழ்வார், மலர்மகள், அனுமார் இவர்களின் உருவங்களைக் குருகூர்நம்பி என்பவர் அமைத்ததைக் கூறுகிறது இச் செய்யுள்.

*சாசனச் செய்யுள்*

அன்னவயல் சூழ்அன்பி லவர்கள்நீடி
அழகெய்தி முப்பொழுதுங் கண்டுபோற்ற
மன்னும் அழகிய பெருமாள் இளையகோவை
மலர்மகளை மாருதியை எழுந்தருளு வித்தோன்
கன்னநய குடைத்தடக்கைப் பாருண்நிதி
காண்டகுசீர்க் கிளைதாங்கி கலைகள்ஓதி
செந்நெல்வயல் சூழ்வீரை சிங்கம்எங்கள்
சீகுருகூர் நம்பிஎனுஞ் செழுமறையோன் தானே.

குறிப்பு:—சுந்தரராசப் பெருமாள் என்று இப்போது வழங்குகிற பெயர் பண்டைக்காலத்தில் அழகியபெருமாள் என்று வழங்கியது.

# சிராமலையந்தாதி

இடம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி மலையின்மேல் உள்ள மகேந்திரவர்மன் அமைத்த குகைக் கோவில் சுவர்களில் எழுதப்பட்டுள்ள செய்யுட்கள்.

பதிப்பு : தென் இந்திய சாசனங்கள், தொகுதி நானகு; எண் 167. (No. 167. S. I. I. Vol. IV.)

விளக்கம் : இந்தச் செய்யுட்கள், சிராமலைச் சிவபெருமான் மீது பாடப்பட்ட அந்தாதிச் செய்யுட்கள். கலித்துறைப் பாவினல் இயற்றப்பட்டவை. இதனைப் பாடிய புலவர் பெயர் நாராயணன் என்பது. இவர் கி. பி. 9 அல்லது 10-ஆம் நூற்றுண்டில் இருந்தவராவர். சில செய்யுட்களில் இடையிடையே சில எழுத்துக்கள் மறைந்துவிட்டன.

### சாசனச் செய்யுள்

உலக மடந்தை நுதலுறந்தைப் பதி யந்நுதற்குத்
திலதம் பரம னமருஞ் சிராமலை யம்மலைவா
யலகின் னிறைந்த கதிர்மணி பாய . . மேல் வந்ததந்தாதி
. . ப் பொன்னி பரன் கழுத்திற் கொண்ட வெள்வடமே. 1

வடகயிலாயமுந் தென்மான் மலையப் பொருப்பு மென்னுந்
தடவரை தாமிதன் றன்மைய வாவது தாமுணர்ந்துங்
கடவரை மேக முழக்குஞ் சிராமலை கண்டகண்
முடவரை யொக்கு மறுசான் றெண்ணி மொழிகின்றதே. 2

மொழிந்திடுமெய்ம்மை முனிந்திடும்பொய்ம்மை முயன்றிடுமின்
கழிந்திடும் யாக்கையைக் கைப்பணி கொடல் கருமுகில்வான்
பொழிந்திடு மெல்லருவிச் சிராமலை புகுத்திடுமி
னிழிந்திடு நும்வினை யீச னங்கேவந் தெதிர்ப்படுமே. 3

படும்பொழு தாயிற்று வெங்கதிர் கூர்றுவன் பற்றிநம்மை
யடும்பொழுதா வஞ்சலென்பான் சிராமலையர் எரிவந்
திடும்பொழு தாயிற் றெதிர்கண்டிடி லெமருங் கொடியர்
நெடும்பொழுதா லென்கொலோ வன்பர் நீர்வந்து நிற்கின்றதே.

நிற்குந் துயர்கொண் டிருக்கும் பொழுதின்றி நெஞ்சனுங்கித்
தெற்கும் வடக்குந் திரிந்தே வருந்திச் சிராமலைமேற்
பொற்குன்றனைக் கண்டுகொண்டே னினிப்புறம் போகலொட்
கற்குன்றனைய நெஞ்சிற் செல்வரா லில்லை காரியமே. [டேன்

காரிக் குதவார் கடவுட் கிறைச்சியுங் கள்ளுநல்கு
மோரிக் குரற்பெண்க ளொன்றறியீ ரொருபால் குறவர்
சேரிக் கொடுமுடித் தெய்வச் சிராமலைத் தெண்மணிநீர்
வாரிக் குளிக்க வொளிக்குமெய்ந் நோயி மடவரற்கே. 6

மடக்கோல் வளையிடத் தான்றன் சிராமலை வாழ்த்திலர்போல்
படக்கோ நிலமன்னர் பாவையைப் பேசிப் பரிசமிட்டார்
விடக்கோ கிடந்தன வெளர்வரையார் கொள் வாளனந்தார்
தடக்கோ வெளிப்படுத்தார் மறவீர் நுங்கள் சுற்றத்தையே. 7

சுற்றத்தை நியத்தி நின்றசூள் புணையாகச் சுரம்படர்ந்த
நற்றத்தை பெரலிக்கு நல்குகண்டாய் பண்டு நாடறியப்
பெற்றத்தை யேறும் பெருமான் சிராமலை மேலோர்சேர்
குற்றத்தை நீங்குங் குணத்துர வோர்தங்கள் கோளரியேய். 8

கோளரி யேறு போலக்கொல் யானையைக் கொன்றுதிங்கள்
வாளரி யேறு கண்ணு யிருந்தவன் மால்கடல்வா
யாளரி யோறிடத் தாண்டான் சிராமலை ஐவனமாந்
தோளரி யேறு தஞ்சமா ரிதற்குந் தலைமகளே. 9

தலைமக ..... பர ஞெருவன் னவன் றம்பி கொம்பார்
குலைமுக யானைத் தலையின்னவர் தாயலை மலையாள்
முலைமுக நியமயங்கி மயங்கிற்றுன் முன்மையென்னே
சிலைமுக நீடு திருமலை மேய திகம்பரனே. 10

பரந்தெரி . . . . ன் றுகளாகிப் பகையுறனைச்
சரந்தெரி கானவர் தன்னய . க தடமலரோன்
சிரந்தோயா வொள்வலி சதித்த விரன் சிராமலை போலுந்
. . . . வானுடன் போன வெள்வளைக்கே. 11

வளைவர . . . . . ய வந்துகாண மணி நாளில்வந்த
முளைவா யெயிற்று முதவச் சிராமலை முடியிலவிள்
சுளைவாய் சொரிந்த பெருந்தேன் சுடர்தோய் நறுங்கமலத்
தளைவாய்த் தேனருந்தச் சுரும் பார்க்கின்ற தண்பரணியே. 12

பரணித் தடையா வலர்கள்பெறு குருரம்பைக் கிணைமல்லமுத்
கரணத் தடங்கண்மலர் காதளவும் முன் காரதிருந் [தங்
திரணைத் தடஞ்சாரற் பரமன் சிராமலை சூழ்சுனை
திரணைத் தாங்கப் பிடித்துடி யறுகேநின்ற பாயமயிற்கே. 13

மயிலார் . . . . . க . . . . மென்று பேரகில் வஞ்சியென்று
பயிலாக் கிளியும் மயிலும் படைக்குணகன் பார்த்துழைமா
னயிலா தொழிகி லவை வளங்காவ லெவ்வா றமைத்தார்
வெயிலார் மழுவன் சிராமலை வாழ்நர்தம் மெல்லியற்கே. 14

மெல்லிய . . . த . . மாலைக்கு மெய்ப்பொருள் வேண்டுமெனச்
சொல்லிய கோவிற் கருள் செய்தவன் சூழலும் முகிலை
வல்லிய மால் களிறென்று தன் வாளுகிராற் கதுவச்
செல்லிழி சாரற் சிராமலை மேய திருவடியே. 15

வடிக்குங் கருங்குழல் மேலுமைத்
தாள்மொய்த்த வண்டகற்றிக்
கொடிக்குங் குமக்கொங்கை மேலுங்
கொண்டாள் கொண்ட லந்திமந்தி
பிடிக்குஞ் சிராமலை யாதிதன்
பேரருள் போலநன்றுந்
தடிக்குங் கலையல்கு லாளின்ப
நீதந்த தண்டமையே. 16

தழைகொண்ட கையர் கதிர்கொண்ட
மெய்யர் தளர்வுகண்டு
பிழைகொண்டு பொய்யென்று பேசிவிட்
டேற்கவர் பேரருளான்
மழைகொண்ட கண்டர்தம் மானிர்ச்
சிராமலை வந்துநின்று
ழைகொண்ட நோக்கியின் றென்னுரைக்
கேனவ ருற்றிடிலே. 17

உற்றூர் தலையிட வொன்னார் முகந்த உண்டுமிக்க
துற்று ரிடுவ ரெனத்தொழு தோங்குந் தொழார்புரங்கள்
செற்றூர் சிராமலை சேரவல்லார் திருநாம மெல்லாங்
கற்றூர் கனைகழல் கண்டிறைஞ் சாதவர் கைத்தலமே. 18

கைத்தலைக் கராமலை நெல்லிக் கனிபோல் கலைகளெல்லா
மெத்தலைப் பாடு விதியுணர்ந்தோர் தங்கள் விதியெங்குஞ்
செய்த்தலை நிலமலருஞ் செழுநீர் சிராமலையான்
பைத்தலைப் பாம்புகண்டீ ரரைமேற் கொண்ட பட்டிகையே.

பட்டிப் பசுமுள் படரத் துடர்ந்துநின் பாடுசெல்லின்
முட்டித் திரியு முகில்போ லதிரு முரட்கயிற்றுற்
கட்டிக்கொடாளுங் கருமஞ்சொன்னேங்கன்னி யாரமெங்குங்
மட்டிக் கமழுஞ் சிராமலையீர் நுமதவிடையே. 20

மதவிடைப் பாகன் மதியிடைப் பாகன் மழைநிறத்தோர்க்
குதவிடப் பாக னுமையிட பாக னுயர்கலிங்கு
கதவிடப் பாகு கமுகெழக் காமர் கடிநகர்வாய்ப்
புதமடப் பாய்புனற் பொன்னிச் சிராமலைப் பொன்வண்ணனே.

பொன்வண்ண மாளிகைப் பூந்தண்
சிராமலைப் பள்ளிகொண்ட
மன்வண்ண மால்கடனஞ் சம்மிருந்த
மறைமிடற் றுன்றன்

வண்ணந்தி வண்ணங் கண்டுதளிர்
வண்ணம் வாடிச்சென்முன்
மின்வண்ண நுண்ணிடை யாளெங்ங
னேசெய்யு மெய்ப்பணியே. 22

பணியா வதுநஞ் சிராமலை மேய பரமற்கென்று
துணியாடையு மணிவாய் நன்றுந் துவ ரூட்டிக்கொங்கை
பிணியாதொழிந்தனை யோர்மனத் தேய்பிணிப் பான்றுடையா
யணியா ரடிகள் பழந்தவஞ் சால வயிர்ப்புடைத்தேய். 23

அயிர்ப்புடையாய் நெஞ்சமே யினித் தேறர மங்கையல்லள்
செயிர்ப்புடை யார்தந் திரிபுரஞ் செற்முன் சிராமலைவாய்
பயிர்ப்புடை யாளடிப் பார்தோய்ந்தன படைக்கணிமைக்கு
முயிர்ப்புடை யாளிவ் வுலகுடை யார்பெற்ற வொல்கிடையே.

கிடைவாய் மடந்தையு மைந்தனுங் கேட்கிற் சிராமலையா
னடைவா யவரை யணையார் கிளைபோ லழிந்துபட்டார்
கடைவாய் நிணந்தின்ற பாவிதன் காதற் கரும்பெடையின்
முடைவாய் புகச்சொரி முண்மாக் காளத்து முன்பினரே. 25

முன்வந்து நின்றனை யென்றுரைக் கேன்முகிழ் மென்முலைக்கீழ்
மின்வந்து நின்றனன் நுண்ணிடையாய் விதியே வலிந்த
பொன்வந்த கொன்றையர் பூந்தண் சிராமலை போற்றலர்போல்
பின்வந்து வனகா னவர்கைப் பாடும் பெருஞ்சுரத்தே. 26

பெருஞ்சிலை யாற்புர மூன்றெறித்
தோன்பிறைக் கோட்டுக்கைம்மா
வுரிஞ்சிலை தேங்கமழ் பாங்கற்
சிராமலை யுள்ளலர்போல்
வருஞ்சிலை யோர் நுமராகின்
மறைவன் வன்கானவரேற்
கருஞ்சிலை யாலழிப் பன்கலங்
காதுநிற் காரிகையே. 27

காரிகத் தாழ்பொழிற் கண்ணூர் சிராமலைக் காமர்கொன்றைத்
தாரிகத் தாழ்சடைச் சங்கரனே சதிரொப்பனகொ
பாரிகத் தாழுநின் பாதம் பணிந்தவ ரேதமஞ்ச
வோரிகத் தாவருங் கானகத் தாடி யுரைகின்றதே. 28

உறைவாய் சிராமலை யுள்ளுமென் சிந்தை யுள்ளுமென்றும்
பிறைவாய் மழுவாட் பெரியவனே நுன் பியற்கணிந்த
கறைவா யரவங் கடியா வகையடியே னறியே
னறைவா யழலுமிழும் புரிந்தாடி யலமருமே. 29

அலமரு நெஞ்சத் தரிவைகண் டாற்றுங்கொல் போற்றலர்தங்
குலமரு முப்புரங் கொன்றவன் கோலச் சிராமலைசூழ்
நிலமரு தென்றுளி நித்திலங் கோப்ப நெடும்பொழில்கள்
சலமரு வெள்வடம் பூணத்தண் கானெடுந் தாழ்பனியே. 30

பனிப்படம் போர்த்தனள் பார்மகள்
யானும் பசலையென்னுந்
துனிப்படம் போர்த்திங்குத் தேனங்குத்
தாரன்பர் துங்கக்கைம்மா
முனிப்படம் போர்த்தபிரான் சிராப்
பள்ளியு மூரிக்கொண்மூத்
தனிப்படம் போர்க்கும் பருவமன்றே
வந்து சந்தித்ததே. 31

வந்து சந்தித்திலர் காதலர் பேதையை வாதைசெய்வா
னந்திசந்திப்ப வெழுந்த தரன்றன் சிராமலைவாய்க்
கொந்து சந்தித்த செங்காந்தண் முகைகொண்டு கொண்டிடு
மந்தி சந்திப்ப வரவென் றுள்வாடு மதிப்பகையே. [வான்

மதியும்பகை முன்னைவாயும் பகை மனையும் மனைசூழ்
பதியும் பகை பகையன்றில் என்றும் பகை பான்மைதந்த
விதியும் பகையெனிலும் மன்ப ரன்பினர் வெள்ளக்கங்கை
பொதியுஞ் சடையன் சிராமலை போலுமெம் பூங்குழற்கே. 33

குழனெறி காட்டிய கொம்பனையா ரொடுங் கொண்டசுற்ற
மழனெறி காட்டு மிடத்தெனக்குத் தனக் கன்பர் சென்ற
பழனெறி காட்டும் பரன் சிராப்பள்ளி பரவக் கற்றேன்
முழுநெறி யாகிலுஞ் செல்லே னினிச்செல்வர் முன்கடைக்கே.

இனிச்செல்வர் முன்கடைக் கென்செயச்
செறுமினைய னெஞ்சேய்
கனிச்செல்வ மாம்பொழிற் காவிரித்
தென்கரைப் பூவிரிக்கும்
முனிச்செல்வர் சேருஞ் சிராப்பள்ளி
மேய முக்கட் சுடரைத்
தனிச்செல்வனைப் பணிந் துள்ளமிர்
தூரித் தடித்தனமே. 35

தடித்த சுறதங் கமழ்சாரற்
சிராமலைச் சங்கரன்றன்
கொடிக்கண்ட வள்ளேறன்ன வெற்றிணைக்
கரங்கொடிழைத் தரண்சூழ்
படிக்கண் விட்டார்த்தன ராயர்
தனைப் பருவலியாற்
பிடித்த மொய்ம்பர்க் கின்றெளிய ளன்ருே
வெங்கள் பெண்ணமிர்தே. 36

பெண்ணமிர்தைப் பார்பெருந்தே னமிர்தைப் பிறைநுதலை
வண்ணப் பயலை தணிவித்திரேல் வம்மின் செம்மனத்துக்
கண்ணப்பனுக் கருள் செய்த சிராமலையானைக் கண்டு
விண்ணப்பமுஞ் செய்து வேட்கையுங் கூறுமின் வேறிடத்தே.

வேறு கண்டாய் நெஞ்சமே தளரேல் விளை மாங்கனியின்
சேறு கண்டாருண் சிராமலை யாதிதன் செல்வஞ்சொன்னல்
யாறு கண்டா யவன் றேவியில் லம்பல மேற்பதைய
மேறு கண்டா யவனேறிப் பல்காலம் மியங்குவதே. 38

காலால் வலஞ்செய்து கையாற் றொழுது கண்ணுறக் கண்டு
மேலா னவருடன் வீற்றிருப்பா னெண்ணில் மெய்ப்புலவீர்
சேலார் கழனிச் சிராமலை மேயசெம் பொற்சுடரைப்
பாலா னறுநெய்யோ டாடியைப் பாடிப் பணிமின்களே. 39

பணிமின்கள் பாதம் பகர்மின்க
ளுமங்கள் பாரகத்தீர்
தணிமின்கள் சீற்றம் தவிர்மின்கள்
மொய்ம்மை தவம்புகுநாள்
கணிமின்க ளேனற் கிளிகடி
மாதர்தங் கைவிசைத்த
மணிமின்கள் போலொளிர் வான்றோய்
சிராமலைப் பள்ளி வள்ளலுக்கே. 40

வள்ளலுக்கும் மலை மாதர்தங் கோனுக்கு வார்சடைமேல்
வெள்ளெருக்கும் மதியும் பொதிந்தானுக்கு வெண்பளிங்கு
தெள்ளலைக்கும் மருவிச் சிராப்பள்ளிச் சிவனுக் கன்பா
யுள்ளலுக்கு நன்று நோற்றதன்றே வென்றுணர் நெஞ்சமே.

நெஞ்சம் துணையுண்டு நீர்நிலத் துண்டு நிழலுமுண்டு
தஞ்சப் பெருக்குளதா னஞ்சிராமலைச் சாரலுண்டு
துஞ்சுந் துணையுஞ் சிவனைத் தொழுது துறக்கமெய்தார்
பஞ்சந் நலியப் பலிதிரிவார் சிலர் பாவியரே. 42

பாவிய ராக புரத்திற்பட்டார் பசுஞ் சந்தனத்தி
னாவி யராவு சிராமலை யானையு நல்லனென்னே
மோவியராலு மெழுதப்படா வுருவத் தசுரர் தேவிய
ராவியுங் கொண்ட தன்றே வவன் செஞ்சரமே. 43

சரங்கலந்தோரைப் புணர்விக்க வேயார் மென்றூர்க் கணவன்
னிரங்கலந்தோ டெரி சேர்கின்ற வாறென் சிராமலையா
யிரங்கலந்தோ விலையால் விளையேற்கென் றிரதிமண்மேற்
கரங் கலந்தோலிடக் கண்டதன்றே நின்றன் கண்மலரே. 44

கண்மலர் நீலங் கனிவாய்
பவழங் கருங்குழல்கார்
எண்மலர் மூக்கிளங் கொங்கைகள்
கோங்கிடை யென்வடிவென்
னுண்மல ராசையி னெப்புடைத்
தல்கிலொண் பொன்மலையான்
றண்மலர் சேர்தனிச் சங்கிடுவா
ளொரு பெண்கொடிக்கேய். 45

பெண்கொடி யாரிற் பிறர்கொடியா ரில்லை பேரிடவத்
திண்கொடி யாரைச் சிராமலை யாரைத் திருநுதன்மேற்
கண்கொடியாரைக் கனவிற் கண்டு கலைகொடுத்த
வொண்கொடியாரை யுணர்வழிந் தாரென் றுரைப்பர்களேய்.

கள்ளும் முருகுந் தருமலரான் மிக்க சந்திறைஞ்சி
யுள்ளும் புறமும் மொருக்க வல்லார்கட் குலகறியக்
கொள்ளும் மடிமை கொடுக்குந் துறக்கம் பிறப்பறுக்குந்
தெள்ளும் மருவிச் சிராமலை மேய சிவக்கொழுந்தே. 47

கொழுந்தார் துழாய்முடிக் கொற்ற கருடக் கொடித்தேவுஞ்
செழுந் தாமரையிற் றிசைமுகத் தாதியுஞ் சேவடிக்கீழ்த்
தொழுந் தாரியர்தந் துணிவைப் பணியச் சுடர்ப்பிழம்பா
யெழுந்தான் சிராமலைக் கேறநம் பாவம் மிழிந்தனவே. 48

இழியும் நரகமு மேறுந் துறக்கமு மிவ்விரண்டும்
பழியும் புகழுந் தரவந்தன வினைப் பற்றறுத்துக்
கழியும் முடம்பு கழிந்தவர் காணுங் கழலன்கண்டீர்
பொழியுங் கருமுகில் போர்க்குந் திருமலைப் புண்ணியனேய்.

புண்ணியன் வேதம் முதல்வன் புரமூன் றெரித்தவன்று
திண்ணியன் றேவர் பிரானென்ன நின்றான் சிராமலைவாய்க்
கண்ணியன் றண்ணந் தழையன் கனைபொற் கழலனம்பாற்
றண்ணியன் இன்றும்வரும் மன்று போன தனிவில்லியே. 50

வில்லியின் பின்செல்ல முன்செல்லா
வரிவையு மென்கிளிப்போல்
சொல்லிபின் செல்லமுன் செல்லா
விடலையுட் சொல்லிம்மான்
வல்லிபின் செல்லமுன் செல்லா
திடங்கொண்ட மாதவர்போ
லெல்லிபின் செல்லமுன் செல்லார்
சிராப்பள்ளி யெய்துவரேய். 51

எய்துவ ராயமுந் தாமும் இரும்பொழி லென்னைமையல்
செய்தவர் வாழ்வுஞ் சிராமலை யென்பது சென்றுகண்டால்
மெய்தவர் மான்விழி மென்முலை தண்ணிய வம்முலைக்கீ
ழைதவர் நுண்ணிடை யல்கிலுஞ் சால வளவுடைத்தேய். 52

உடைத்தேய் வருதுன்ப வெம்பகை நீக்கி உலகளிக்குஞ்
சடைத்தேவர் முடித் தேவருந் தாடொழத் தானவரைப்
புடைத்தேய் கெடுத்த பரமன் சிராமலைப் பாடிருந்துங்
கடைத் தேவனைத் தொழுமோ வினையேனென் கரதலமேய்.

கரம்பற்றிய வில்லி கைப்பற்றிய வல்லி காலலைக்குஞ்
சுரம்பற்றிய செழுமம் பொன்சுடர்க் கமலத் தயன்றன்
சிரம்பற்றிய மழு வாளிதன் சாரற் சிராமலைசேர்
வரம்பற்றிய பெரியோரிற் சென் றேகின வாழ்பதியே. 54

பதியிலந் நாடிலம் பைம்பொற் குடைபெறப் பண்டுசெய்த
விதியிலம் . . . . . . . இலம்வியன் கங்கையென்னு
நதியிலங்குஞ் சடை நாதன் சிராமலை நண்ணவெண்ணும்
மதியிலம் வாழ்வா னிருத்துமென் னேநம் மனக்கருத்தேய்.55

மனக்கருத் தாகிய . ரவலை கண்செ . . . பற்றின
. . க்கருத்து . . . . . . . இருந் தென் . . . .
. . . . கெலாம் . . . . . . . . . . . . . . . . . . .
. . . . கொட்டிற் றனைக்கு . . . . . . . . . . சிராமலையே. 56

மலையாள் மடந்தையோர் பாகத்தன் மாகத்து மானதஞ்
சிலையா லழிவித்த நாதன் சிராமலை தேவர் ...... வ
முலையா யொருவர் ....... குயிர்க ..   .....
மிலையா .... ழி ருணர்ந்தெமை வினவி யியங்குவரேய். 57

இயங்கிய காலு நிலனும் எரியு மிருவிசும்பும்
மயங்கிய நீரும் மறையும் பிறவு மருவியரந்
தயங்கிய சோதியுந் தானுந் திருமலைத் தத்துவன்றுள்
முயங்கிய சிந்தையி னுர்க ளெந்நாளு முடிவிலரே. 58

முடியரை சாளு முந்நீரகன் ஞாலந்தன் முனணிந்த
வடியரையாள் விடுவான் சிராமலை ஐய நிலயிற்
பிடியரை சாளி பிடிப்ப நடுக்குறும் பெய்புனத்தேய்
குடியரை சாளுங் குறவருஞ் சாலக் கொடுமையரே. 59

கொடும்பற் றுயங்கிக் குழிகண் ணிடுங்கிக் குரனடுங்கி
இடும்பைக் கொதுங்கி யிருமற் பகைகொல்ல இல்லிபட்ட
நெடும்பற் கனைய நிலையா வுடலை நிலையுமென்னுர்
திடும்பற் கலுழிச் சிராமலை யாளியைச் சேர்ந்தவரேய். 60

ஆளியைச் சேர்ந்த வகலத் தவனுக் கிளையவம்மென்
ரேளியைச் சேர்ந்த பிரான்றன் சிராமலை துன்னலர்போல்
மீளியைச்சேர் நாதனம் செய்தனையெய் வினையேன் பயந்த
வாளியைச் சேர்ந்த சிலைபோல் லுருவத்து வாணுதலே. 61

நுதன்மிசைச் செங்கண் மலர்ந்தனங்
கொடையின் மன்மதவேள்
மதனுகட் போந்தழற் சிந்துவித்தான்
வண் சிராமலைவெற்
பிதன்மிசை சாரலில் யாமா
டிடமிள வண்டுறங்கும்
புதன்மிசைத் தோன்றியுங் காந்தளும்
பூக்கும் பொழிலிடமே. 62

பொழிலுடையார் பணி பொன்னடி வானவர் முன்முடிசேர்
கழலுடையா னது காமர் சிராமலைக் காரணைய
குழலுடையாணசையராற் குறவர்கொல்லியானைக் கொள்ளித்
தழலுடையா நெறி யம்பொறி போர்க்குந் தயங்கிருளே. 63

இருளின் படலம் மிவை கார்முகி லில்லைவென்னின்
மருளும் மயர்வும் பெரிதுடையா ரில்லை வல்லி . . [ல்
. ருணேய்தெரும் மனத்தார்க்கருளும் பிரான்றன்சிராமலைபோ
பொருளும் மவிரும் பொன்னகர் வீதி புகுந்தாரேய். 64

வீதி வந்தாருடன் வெள்களந்தான் விளராலிவடன்
சோதி சேர்ந்தான் சிந்தை . . . ரல்லி . வுண்ணு . . ரதருவின்
. . . சிந்தா மந்தி யாடுஞ் சிராமலைப் பொன்மலைபோ
லாதி செந்தாமரை வண்ணங் கண்டா னங்கள்இழையே. 65

இழையிடங் கொண்ட தடமுரண் . . . . திளங் கோமதலை
விழையிடங் கொண்டவெண் . ரறுறி . ர் தன்றி . ன்னி . , . ழவி
மழையிடங் கொண்ட சிராமலையா ரளி மிறந்தவர்போல்
பிழையிடங் கண்டது . . . . . . . . . ள் பெண்கொடிக்கே. 66

கொடிக்கட்டிய மணி மாளிகைத் தில்லையுட் கொற்றமன்னர்
முடிக்கட்டிய முகை சேர்கழல் மூவாயிரவர் முன்னின்
றடிக்கட்டிய கழலார்க்கநின் றம்பலத் தாடுமையெர்
வடிக்கட்டிய பொழில் வான்றேய் சிராமலை மாணிக்கமே. 67

வான்றேய் சிராமலை வந்திறைஞ்
சாதவர் மையல்வைகுந்
தேன்றேய் மொழியவர் செவ்வாய்
நினைந்து வெள்வாய் புலர்ந்து
மீன்றேய் கடலன்ன வேட்கைய
ராகத்தம் மெய்ம்மைகுன்றி
ஊன்றே யுடலிங் கொழித்துயிர்
போக்கும் உறைப்பினரே. 68

உறைப்புடைக் கூற்றை யுதைத்துயிர்
மாற்றி யுலகறிய
மறைப்புடை மார்க்கண் டயற்கருள்
செய்தவன் வானெரிவாய்க்
கறைப்புடைப் பாம்புறை திங்கட்
கரைக்கங்கை நீரலைக்குஞ்
சிறைப்புடைச் செஞ்சடையன் உறை
கோயில் சிராப்பள்ளியே. 69

பள்ளியம் மாதுயிலெற் கின்றிலை பாவிப் பிழைத்தாய்
வள்ளிதம் ...... சிலைவேடன் உட்கா ....
வெள்ளியம் மாமலை யாளன் சிராமலை மேன்மலையன்
உள்ளியம்மா விரந்தா லுகந்திய பத முன்மத்தமே. 70

மத்தமமைத்தான் சென்னிப் பொன்னிமவான் பெற்ற மாதுதன்
ெ.. ..... ..... ... ... முழுதும்
பித்தமைத்தாய் சிந்தைநொந்து குலமந்து பேர் மாக்கண்
முத்தமைத்தாய்க்கங்கை....ாகில்...,நின் முதிர்ச்சியையே.

முதிரும் பாவை முகந்த கொண்மூ முகடேறி முன்னி
யதிரும் மா...ப்பது ...... வ்வமுங்
கதிருங் கலந்த சிராமலை யாளி கழனேம்பு
கதிர்த் திருவருள் போலினியானை யின் றெய்துவனே. 72

யானையின் றெய்த பிடியாமட .......
...யன்பர்தம் வாழ்நாளை..றென்றுவிட்டார் சிந்தை
..னெறுங் கொன்ற வீரன் சிராமலை யெவினப்பாற்
பூனை நின்றெங்கும் பொரியதிர் தினம் புகுந்தனரே. 73

தினம்புகு கின்றது தண்பணை யாகத்தன் ...மா
வினம்புகு தேர் நின்றிழிந்து புக்கா ரன்பரென்று..வுஞ்
சினம்புகு திண்விடைப் பாகன் சிராமலைத் தெய்வமன்னன்
மனம்புகு வெம்பிணிக்கொ ...... ணந்திட்ட மாமருந்தேய்.

மருந்தேய் சிராமலை மாமணியே மருதா டமர்ந்தாய்
குறுந்தேய் நறும்பொழிற் கற்குடி மேய கொழுஞ்சுடரேய்
முருந்தேய் முறுவ லுமைகணவா முதல்வா வெனநின்
நிருந்தேய் நிறையழிந்தேன் வினையேன் பட்ட வேழைமையே.

ஏழைப் புதல்வன் னெனக்குத்
துணையுமக் கெங்கையையுங்
கோழைக் குரற்பெரும் பாணனையுங்
கொளக் குன்றர்கொன்ற
வாழைக் குலைமண நாறுஞ்
சிராமலை வாழ்த்தலர்போல்
மோழைப் பெரும்பேய் செல்லேலு
நில்லெனுமென் முன்கடையே. 76

கடையகத்துச் சென்று கானிமித்து நின்று கைவிரித்து
நடையகத்துப் பெரி தென்னத் திரிவர் நகுமதிசேர்
சடையகத்துக் கங்கை வைத்தான் சிராமலை சார்வொழிந்து
படையகத்துச் செல்வராய் நல்லாரான .... ரே. 77

களகன் னிவனெனப் பாரோர்நகப் பணையின் மடன்மே
லளகந் நுதலி யொருவர்வந் நாட லியானைக்கன்று
மிளகு மடமையின் முளையும் மிளகமென் றேன்பருகிக்
குளகுந் நுகருஞ் சிராமலை சூழ்ந்த குலப்பதிக்கேய். 78

பதியொற் றிடராற் படுதலையிற் பலி கொள்வதெங்குங்
கதியொற்றி ஊர்வது காசின் மால்விடை காதலியுந்
நதியொற்றி யூர்நகர் நஞ்சுண்பன தந்தலை ..ஞ்ச
மதியொற்றி யூருஞ் சிராமலை மாதவர் வாழ்வங்கயே. 79

மாதவர் வாழுஞ் சிராமலை மாமணி கண்டாங்கேய்
போதுவ ராகிலும் போமடவா யென்ன நிலநடுவே
யீதவர் விதியன் றென்பர்போ விருந்தோங் குணத்தோய்
... யாவிசொல் லாயவர்பாற் சென்று சொல்லுதற்கேய். 80

சொல்லும் பொருளுஞ் சுவையும் பயனு மிலவெனிலும்
அல்லும் பகலு மிகதா மெனக்குப் புரமெரிப்பான்
வில்லுங் கணையுந் தெரிந்த பிரான்றன் சிராமலைமே
லெல்லுங் கனகழலின் குணம் பாரித்த வெண்கவியே. 81

கவியலைத் துண்ணுங் கலைஞர் தங் காமரறு கார்க்களிற்றின்
செவியலைத் துண்ணுஞ் சிராமலை வாழ்நனைச் சேரகில்லார்
புவியலைத் துண்ணும் போர்வண் . . . . . . வலராய்
நவியலைத் துண்ணு மங்காடு நங்கை . . ரா்டு நண்ணுவரே. 82

நண்ணுதலர் காநறப்படு மலரு நறுங் குடுமி
விண்ணுதல் போழுஞ் சிராமலை வெற்பனை வேறிருந்து
மண்ணுதல ரடிப்பணிந்த ஞமமதை . . டக்கயென்
. . . வல்லார்க் கெளிதிமை யோர்த மிரும்பொழிலே. 83

இரும்பிடைச் சேர்ந்ததெண்ணீர் வளன்மை
பெற்றிமை யோரிருக்கப்
பொரும்படைக் கூரெய்த பொன்மலை
யாயைப் புணர்ந்தபின்னைக்
கரும்பா . . . . . . . .
மிர்துங் களிவளனுஞ்
சுரும்பிடைத் தேனுநன் பாலுநின்
போலச் சுவையில்லையே. 84

இல்லையென்பார் பொரு ளுண்டெனப் பரிவ விரதிபழஞ்
சொல்லுந்தனை யாலவர் இரணங்கள் முன்றின் சுடர்விளக்காத்
தில்லையென்பர் தென்சிராமலையா யென்று சென்றிறைஞ்சி
வல்லையன்பர்க நெஞ்செயடு . னியின வன்பழிக்கே. 85

பழிக்கும் இருட்படலம் பேர்ருளன் கையு மஞ்செழுதயு
விழிக்கும் இமையவ ரேறும் மிடத்தெதிர் வந்தருவி
தெழிக்குஞ் சிராமலைச் சித்தரைத் தீர்த்த . . . . . யக்
கழிக்கும்மிது மெய்ம்மை கைகண்ட யோகங் கடலிடத்தே. 86

இடங்கொண்ட வேலையு மெழுமலையுந்
திசை யானையெட்டும்
படங்கொண்ட நாகஞ் சுமந்தவிப்
பாருமே படருங்கொல்லோ
திடங்கொண்ட சாரனற் சிராமலைக்
கூத்தன்செம் பொற்கழல்சேர்
நடங்கொண்ட சேவடிக் குஞ்சித்
தருள் செய்த நானகத்தே. 87

அருள்செய்வதும் படையென் மெய்ம்மையே
யடியேனுக் கிம்மை
பொருள்செய் துதவும் புதல்வரைத் தந்தென்
பொல்லாத சொல்லால்
மருள்செய்த மாலை கொண்டானை
வண்டாருஞ் சிராமலைவா
யிருள்செய்த கண்டனையே தொண்டர்காள்
வந் திறைஞ்சுமினே. 88

வந்திறைஞ்சித் தளர்ந்தேன் செல்லுமோ சிந்தை மாதவர்மேற்
சந்திறைஞ்சிப் படர் சாரற் சிராமலைத் தாழ்பொழில்வாய்க்
கொந்திறைஞ்சிக் கமழ் கோதை சூலாவிக் குழலவிழப்
பந்திறைஞ்சிப் பிடிப்பா ளிடைக்கே சென்று பற்றுண்டதே. 89

தேறு சொல்லாத தமிழ்த்தென் வேம்பய ரண்ணற் செங்குவளை
நாறு மல்லாகத்து நாராயணன் பண்டை நான்மறையும்
ஏறு மல்லோனைச் சிராமலை யாளியை யிங்கு.... த்த
னீறுமல்லோர் தம்மை நோக்கவல்லார்க்கென்று நோயில்லையே.

நோயிலங் காதலுடைய நெஞ்சேய் நுரைவெண் கடலுட்
போயிலங் காபுரஞ் செற்றபொற் றேர்வன் போந்திருந்து
வாயிலங் கார்தரு மந்திரத்தால் வணங்கிப் பணிந்த
சேயிலங் கார்கழற் றீர்த்தன் சிராமலை சென்றடைந்தே. 91

அடைக்குங் கதிர்மணி யாரம் முலைக்கணிந் தல்கின்மெல்லம்
புடைக்குங் கலைபுனைந் தோதியிற் போது புனைந்துவிட்டார்
விடைக்கும் முளைக்கு நற்பாகன் சிராமலை மெல்லியலி
ரிடைக்குங் இளையவர்க்கும் பகையோ நும்மை யீன்றவரேய்.

ஈன்ருள் வருந்த விம்மைப்பிறந் தம்மைக் கிரங்கிநைய்யு
மூன்ரு முடிகொண் டொளிப்போ மெளிப்பட் டொருங்கிநின்
தேன்ருழ் சிராமலை வாரியின் மூரித் தெய்வக்களிறேய் [ரேம்
தோன்ரு யெமக்கொரு நாள்வினைப் பாசத் துடரறவே. 93

துடரிடை யாத்த ஞமலியைப்
போலிருந்தேனிச் சுற்றத்
திடரிடை யாப்பவிழ்த் தென்னைப்
பணிகொள் பொன்னைப் புரையுஞ்
சுடரிடை யாத்தபைங் கொன்றையு
மத்தமுஞ் சூழ்சடையின்
படரிடை யாத்த பரமன்
சிராமலைப் பால்வண்ணனே. 94

பால்வண்ண நீற் றெம்பரன்
சிராப்பள்ளிப் பரஞ்சுடர் தன்
பால்வணங் கண்டுநம் பல்வண்ண
நீங்கிப் பக்கத் திடஞ்சேர்
மால்வண்ணங் கண்டுதம் மால்வண்ணங்
கொண்ட வளைசரிந்து
மால்வண்ணங் கொண்டுவந்தார் சென்று
காண்மின்கள் மங்கையிரே. 95

மங்கை யம்பார் கண்ணி பெண்ணுக்
கரைசி மலைமடந்தை
கொங்கையம் பாரங்கள் போல்வா
னெழுந்து குவிந்தழிந்து

பங்கயம் பாதங்கள் பொன்மலர்
பெருதவர்ப் பொன்மலைமேற்
புங்கவன் பாதந் தொழுதொழிப்போ
மெங்கள் பொய்யுடம்பே. 96

பொய்யினைப் பேசிப் பொருளினைத் தேடிப் புழுப்பொதிந்த
மெய்யினைக் காத்து வெறுத்தொழிந்தேன வியன்பொன்மலைமே
லையனைத் தேவர் தங் கோனை யெம்மானை யம்மான் மறிசேர்
கையனைக் காலனைக் காய்ந்த பிரானைக் கழல்பணிந்தே. 97

கழலும் மருளுநஞ் சென்னி வைத்தோன் கனகச் சிலம்பிற்
சுழலும் மலரும் மசோகும் பலாசுந் துடரா தெழிந்திட்
டழலின் புறத்து வெண்ணீ ருெத்தனநம் மணிவளையார்
குழலும் அளகமும் பெய்யக் கொய்யாத குராமலரே. 98

குராமலை கொண்ட உலகொளி மதியமுங் கோளரவும் [ளுஞ்
இராமலை வான்பகை யென்பது பொய்மெய்ம்மை யோர்க்கரு
சிராமலை வானவன் சென்னியின் மேற்கொண்ட சீர்மையினுற்
கராமலை நீர்க்கங்கை பாலுடன் வாழ்கின்ற கண்டனரே. 99

கண்டன கேட்டன வுற்றன காம ரறுசுவையா
லுண்டன மோந்தன வைம்பொறி யுள்ளு முயிர் தழைப்பக்
கண்டன கேட்டன வுற்றன காம ரறுசுவையா
லுண்டன மோந்தன பொன்மலையானை கயர்க் கோக்கினவே.

ஓக்கிய கையோ டொருக்கிய வுள்ளத்தி யோக்கியர் தம்
வாக்குயர் மந்திரம் வானரங் கற்று மந்திக் குரைக்குந்
தேக்குயர் சாரற் சிராமலைக் கூத்தன்செம் பொற்கழல்மே
லாக்கிய சிந்தை யடியர்க் கென்னே வின்றரியனவே. 101

அரியன சால வெளிய கண்டீ ரருவித் திரள்கள்
பரியன நேர்மணி சிந்துஞ் சிராமலைப் பால்வண்ணனைக்
கரியன செய்யன நுண்புகர்ப் பைங்கட் கடாக்களிற்றி
னுரியனை நாழிகை யேத்தவல் லார்க்கிவ் வுலகத்துளே. 102

மற்பந்த மார்வன் மணியன் மகன் மதிள் வேம்பையர்கோ
னற்பந்தமார் தமிழ் நாராயணஞ் சிராமலைமேற்
கற்பந்த னீழலில் வைத்த கலித்துறை நூறுங் கற்பார்
பொற்பந்த னீழ லரன்றிருப் பாதம் பொருந்துவரே. 103

மாட மதிரை மணலூர் மதில்வேம்பை
யோடமர் சேனலூர் குண்டூர்இந்—நீடிய
நற்பதிக் கோனா ராயணஞ் சிராமலைமேற்
கற்பதித்தான் சொன்ன கவி. 104

குறிப்பு:—இவ்வந்தாதியைத் தருமபுர ஆதீனத்தார் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். சாசனச் செய்யுளில் மறைந்து போன சொற்களுக்கு அவர்கள், தமது யூகம்போலச் சொற்களை அமைத்து அச்சிட்டிருக்கிறார்கள். நாம் இங்கு அச்சிட்டிருப்பது, அரசாங்கத்தார் பதிப்பித்துள்ள வாசகம். மறைந்த எழுத்துக்களும் சொற்களும் விடுபட்டுள்ளன. பிழைகளும் திருத்தப்படவில்லை.

இக் கட்டளைக்கலித்துறைச் செய்யுட்களிற் சில இலக்கண வரம்புக்கு மாறுபட்டுள்ளன. 13-வது செய்யுளின் முதல் அடியில் 20 எழுத்துக்கள் உள்ளன. இவ்வாறே சில செய்யுட்கள் கட்டளைக் கலித்துறை இலக்கணத்துக்கு மாறுபட்டு எழுத்துக்கள் குறைந்தும் அதிகப்பட்டும் உள்ளன. இது சாசனச் செய்யுளைச் செதுக்கிய சிற்பியின் தவறு என்று தோன்றுகிறது.

திருச்சிராப்பள்ளி மலைமேல், மகேந்திரவர்மன் அமைத்த குகைக்கோவிலின் சுவரில் இச் சாசனக் கவிகள் எழுதப்பட்டுள்ளன. இக்காலத்துத் "தொடர்" என்று வழங்கும் சொல் இச் செய்யுள்களில் "துடர்" என்று பயின்றிருக்கின்றது.

# நக்கன் திருவேகம்பன்

இடம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி தாலுகா, உய்யக்கொண்டான் திருமலை. இவ்வூர் உஜ்ஜீவ நாத சுவாமி கோவிலின் முதல் பிராகாரத்து வெளிப்புறச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு : தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு; எண் 545. (No. 545. S. I. I. Vol. IV.)

விளக்கம் : "வீரமே துணையாகவும் தியாகமே அணியாகவும்" என்று தொடங்குகிற சாசனத்தின் இறுதியில் இந்தச் செய்யுள் எழுதப்பட்டுள்ளது. இந்தச் சாசனமும் செய்யுளும், கோவிராஜ கேசரி பன்மரான வீர ராஜேந்திர தேவரின் 5-ஆவது ஆண்டில் எழுதப்பட்டன. கருப்பூர் கம்பன் மகனை நக்கன் என்பவர், இக் கோவிலுக்கு விளக்கு ஏற்றுவதற்காகத் தொண்ணூறு ஆடுகளைத் தானம் செய்ததை இச்செய்யுள் கூறுகிறது. கோவில்களில் ஆட்டு நெய்யினால் விளக்கெரிப்பது அக்காலத்து வழக்கம்.

*சாசனச் செய்யுள்*

**கருப்பூர்மன் கம்பனுக்குக் காதலன்சீர் நக்கன்**
**விருப்பூர் விழுமிய தேவர்க்கு—திருப்பூர்**
**விளக்குவைத்துத் தொண்ணூரு டாங்களித்தான் மெய்யே**
**உளக்கருத்தால் சால உகந்து.**

குறிப்பு :—கருப்பூர் - இது சோழநாட்டு உறையூர்க் கூற்றத்துக் கருப்பூர். கம்பன் - கருப்பூர் உடையான் ஏகம்பன். காதலன் - மகன். நக்கன் - இவன், கருப்பூருடையான் ஏகம்பனின் மகனை நக்கன் திருவேகம்பமுடையான். இவனுக்குக்

கேரளாந்தக விழுப்பரையன் என்னும் பெயரும் உண்டு. விழுமிய தேவர்-திருக்கற்குடி விழுமியதேவர் என்னும் பெயருள்ள சிவபெருமான். கற்குடி விழுமியார் கோவில், இப்போது உஜ்ஜீவநாத சுவாமி கோவில் என்று வழங்குகிறது.

---

## பத்மநாப நாராயணன்

இடம்: திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி தாலுகா, அன்பில் கிராமம், சுந்தரராஜப்பெருமாள் கோவில் மேற்குப்புறத்துச் சுவரில் உள்ள சாசனச் செய்யுள்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள், தொகுதி எட்டு; எண் 186. (No. 186. S. I. I. Vol. VIII.)

விளக்கம்: பற்பநாப நாராயணன் என்பவர் இந்தக் கோவிலுக்கு எண்பது கலம் நெல் விளையக்கூடிய மும்மா நிலத்தைத் தானம் செய்ததையும் அதனைக் கோவிலின் சார்பாக அரும்பாளூரார் ஏற்றுக்கொண்டதையும் இந்தச் செய்யுள் கூறுகிறது.

### சாசனச் செய்யுள்

இற்புகலோடை மும்மாச் செய்க் கெண்பதின்கல
னெல்லுப் பொலிசைக் கொத்துக் கல்நிலைக்க—பற்பநா
ராயணன் வைத்தானுங் கரும்பா ளூரோங்கொண்
டோரா யிறை யிறுப்போ முற்று.

குறிப்பு:—செய் - வயல். பொலிசை - பலிசை, வட்டி.

---

# பட்டினப்பாலை மண்டபம்

இடம் : *திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே 12 மைலில் உள்ள திருவெள்ளறைக் கிராமம்.*

பதிப்பு : *"செந்தமிழ்" நாற்பத்தொன்றாந் தொகுதி.*

விளக்கம் : *பாண்டியன் சோழநாட்டின்மேல் படையெடுத்துச் சென்று, சோழ அரசரின் கட்டடங்களை எல்லாம் தகர்த்து அழித்தான் என்றும், பட்டினப்பாலை என்னும் செய்யுளைப் பண்டைக்காலத்தில் கரிகாற்சோழன்மேல் உருத்திரன் கண்ணனார் பாடி யரங்கேற்றிய நினைவுக்காக அமைக்கப்பட்ட பதினாறுகால் மண்டபத்தைமட்டும் அழிக்காமல் விட்டுவைத்தான் என்றும் இந்தச் சாசனச் செய்யுள் கூறுகிறது.*

*சாசனச் செய்யுள்*

வெறியார் தளவத்தொடைச் செயமாறன் வெகுண்டதொன்
அறியாத செம்பியன் காவிரி நாட்டி லரமியத்துப் [றும்
பறியாத தூணில்லை கண்ணன்செய் பட்டினப் பாலைக்கன்று
நெறியால் விடுந்தூண் பதினாறுமே யங்கு நின்றனவே.

குறிப்பு :—மாறன் - மாறவர்மன் சுந்தரபாண்டியன். அரமியம் - அரண்மனை. கண்ணன்செய் பட்டினப்பாலை - கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் புலவர் கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழன்மீது பாடிய பட்டினப்பாலை என்னும் செய்யுள். அச்செய்யுளைப் பாடிப் பெற்ற பரிசில், பதினாறு நூறாயிரம் பொன் என்று கலிங்கத்துப் பரணி (இராச பாரம்பரியம் 22) கூறுகிறது. பட்டினப்பாலையை அரங்கேற்றியதன் நினைவுக் குறியாகச் சோழநாட்டில் பதினாறுகால் மண்டபம் ஒன்று இருந்ததையும், மற்றக் கட்டடங்களை அழித்த பாண்டியன் இதனைமட்டும் அழிக்காமல் விட்டுவைத்ததையும் இச் செய்யுள் கூறுகிறது.

இவ்வாறு செய்த பாண்டியன், மாறவர்மன் சுந்தர பாண்டியன் (முதலாமவன்). இவனைச் சோணாடு வழங்கியருளிய ஸ்ரீ சுந்தரபாண்டியதேவர் என்றும் கூறுவர். இவன் கி. பி. 1216 முதல் 1238 வரையில் அரசாண்டான். இவனால் தோல்வியடைந்த சோழன் மூன்றாம் இராசராசன் ஆவான். மாறவர்மன் சுந்தரபாண்டியன், சோழநாட்டுக் கட்டடங்களை அழித்த செய்தி அவனுடைய சாசனத்திலும் கூறப்படுகிறது. (*No. 372. S. I. I. Vol. IV.*) திருப்பரங்குன்றத்து உமையாண்டான் கோவில் என்னும் குகைக்கோவிலில் உள்ள சாசனம் இச்செய்தியைக் கூறுகிறது. அப்பகுதி வருமாறு :

" . . . . . தஞ்சையும் உறந்தையும் செந்தழல் கொளுத்திக் காவியும் நீலமும் நின்று கவினிழப்ப வாவியு மாறு மணிநீர் நலனழித்துக் கூடமு மாமதிளுங் கோபுரமு மாடரங்கு மாடமு மாளிகையு மண்டபமும் பலவிடித்துத் தொழுதுவந் தடையார் நிருபர்தந் தோகையர் அழுத கண்ணீ ராறு பரப்பிக் கழுதை கொண் டுழுது கவடி வித்திச் செம்பியனைச் சினமிரியப் பொருது சுரம்புக வோட்டி . . . . . . . . "

இவ்வாறு மாளிகையும் மண்டபமும் பல இடிக்கப்பட்ட போது, பட்டினப்பாலைப் பதினாறுகால் மண்டபத்தை மட்டும் அழிக்காமல் விட்டான், அது புலவரின் நினைவுக்குரி யாகலின்.

---

## சுவரன் மாறன்

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளிக்குக் கிழக்கே இரண்டு மைலில் உள்ள செந்தலை. இவ்வூர் சுந்தரேசுவரர் கோவிலின் முன்புறமுள்ள மண்டபத்தின் நான்கு தூண்களில் உள்ளவை.

பதிப்பு : இந்திய சாசனங்கள், தொகுதி 13; பக்கம் 134—149 ; ''செந்தமிழ்'' ஆறாந் தொகுதி; பக்கம் 6–18. (I. S. I. A. Vol. II. P. 1—21. Epigraphia Indica Vol. XIII. PP. 134—149.)

விளக்கம்: சந்திரலேகை சதுர்வேதி மங்கலம் என்னும் பெயர் சுருங்கிச் செந்தலை என்று வழங்குகிறது. செந்தலைக்கு நான்கு மைல் தூரத்தில் உள்ள நியமம் என்னும் கிராமத்தில் உள்ள பிடாரிகோவில் மண்டபத்தில் இந்தத் தூண்கள் ஆதியில் இருந்தன. பிற்காலத்தில், இந்தப் பிடாரிகோவில் இடிந்துபோன பிறகு, அங்கிருந்த இத் தூண்களைச் செத்தலைக்குக் கொண்டுவந்து இந்த மண்டபங் கட்ட உபயோகித்துக்கொண்டார்கள். மண்டபங் கட்டும் போது இந்தத் தூண்களின் மேல்பகுதிகளைச் சிறிது குறைத்துவிட்டார்கள். குறைத்தபோது அதில் இருந்த எழுத்துக்களில் சில வரிகள் அழிந்துவிட்டன. ஆகவே, செய்யுள்கள் முழுவதும் கிடைக்காமல் முதலிலும் கடையிலும் அழிந்து காணப்படுகின்றன.

நியமம் என்னும் ஊரில், பெரும்பிடுகு முத்தரையனுன சுவரன் மாறன் என்பவன் மாகாளி கோவிலை அமைத்ததையும், அவன் வென்ற போர்களையும், அவனைப் பாடிய புலவர்களின் பெயர்களையும் இந்தத் தூண்களில் உள்ள செய்யுள்களும் வசனங்களும் கூறுகின்றன. இந்தச் சாசனத்தின் எழுத்துக்கள் வெகு அழகாக எழுதப்பட்டுள்ளன.

### சாசனச் செய்யுள்

". . . . டுத்த பெரும்பிடுகு முத்தரையனுயின குவாவன் மாற னவன்மக னிளங்கோ வதியரைய னுயின மாறன் பர மேஸ்வர னவன்மகன் பெரும்பிடுகு முத்தரைய னுயின சுவரன்மாற னவனெடுப்பித்த படாரி கோயிலவனெறிந்த வூர்களுமவன் பேர்களு மவனைப் பாடினுர் பேர்களுமித் தூண்மேலெழுதின இவை."

வெங்கட் பொரும. . சேர் வேல்கொடியான் வாண்மாறன்
செங்கட் கரும்பகடு சென்றுழக்க—வங்குலந்தார்
தேரழுந்தி மாவழுந்தச் செங்குருதி மண்பரந்த
ஊரழுந்தி யூரென்னு மூர். 1

. . . .   . . . .   . . . ப்ப ஓடிக்
கழுகு கொழுங்குடற் கவ்வ—விழிகட்பேய்
புண்ணளைந்து கையூம்பப் போர்மணலூர் வென்றதே
மண்ணளைந்த சீர்மாறன் வாள். 2

பாச்சில்வேள் நம்பன் பாடின.

நிற்கின்ற தண்பணை தோறுந் தஞ்சைத் திறம் பாடிநின்ருர்
விற்கின்ற வீரர்க ளூர்கின்ற விப்பிணக் குன்றுகண்
ணெற்குன்ற யானை . . .   . . . ன்ம   . . .
. . . .   . . . .   . . . 3

பால்கொண்ட செவ்வாய் விளையா மொழிப் பருவத்துமுன்னம்
வேல்கொண்ட   . . . . .   . . . . . . . .
. . . .   . . . .   . . . .   . . . .
. . . .   . . . .   . . . 4

மறப்படை மீனவன் வல்லரண் பல்லவன் சேனைக்கன்று
புறப்படுமாறு பொருகளிற்று   . . . .   . . . . . . . . .
. . . .   . . . .   . . . .   . . . . .
. . . .   . . . .   . . . 5

எங்கை யளவிற்றேய் பாண விகல்விக்கு
மங்கைச் செருவே லமர்வல்ல . . . . .
. . . . .   . . . .   . . . .   . . . .
. . . .   . . .   . . 6

. . . . .   . . . ர்க்கே யல்லையா யக்காலந்தான்
முல்லைக்கேய் முற்படுமோ என்றென்று—வல்லக்கோன்
காரைவாய்ப் போர்வென்ற வேன்மாறன் கைபோலுங்
காரைவாய்க் கேளேனேய் கண்டு. 7

கோட்டாற் றிளம்பெருமானுர் பாடியது.

. . . . . . . . . . . . . வாளமருள் வாகைப்பூக்
குஞ்சிக் கமழ்கண்ணிக் கோமாறன்—றஞ்சைக்கோன்
கோளாளி மொய்ம்பிற் கொடும்பாளூர் காய்ந்தெரித்தான்
றேளா லுலகளிக்குந் தோள். 8

. . . . . . . . . . . . . . லாத் தோய்ந்தனவா லெங்கும்
வருபுனல்சூழ் வல்லக்கோ மாறன்—செருவில்
மறங்கூர்வாய்ப் பட்டா ருடல்குடைந்து மாந்திப்
புறங்கூர்வாய்க் கொண்டெழுந்த புள். 9

பாச்சில்வேள் நம்பன் பாடின.

பேரிலைப் பங்கயங் கூம்பப் பிறையின் குறுமுளைப்போந்
தீரிலைக் கொள்ளும் பதமி. . ணி யரண மூட்ட
கூரிலை . . . . . . . . . கழன்ம . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . வ்வ . . . . . 10

சொற்புகு தொண்டைக் கனிபுகு தூமதிபோன் முகத்தாள்
பொற்புக வெற்புப் புகுதிகண்டாய் புகழிப் பொருதார்
கற்புக விற்புக கண் . ஏன் கள்வர கள்வன் றஞ்சை
நற்புக மூாளன் . . . . . . . . . . . . . . . . . 11

சேட்டினைர் பூந்தண் பொழிற் செம்பொன் மாரிக்கடி அரணம்
மூட்டின சீற்றம் முன் சென்றது பின்பு பகட்டினத்தோர்
கே . . . மாறன் கடிநக . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . 12

பனையைப் பகடுகூடா யன்று பல்லவன் வெல்லத் தென்னன்
முனையைக் கெடச்சென்ற மாறன் முகில்வளர் பீலிஉந்தச்
சுனையைச் சுனைமணிப்பாறை அப்பாறை சொல்லென்வினைந்த
வினையைப் பாரமு விருக்கி . . . . . . . . . . . . . 13

எண்கி னிருங்கிளையு மேறற் கரியவேய்
வண்கைச் செருமாறன் வாள்காய்த்தி—விண்படர்
வான்செய்நாடு தாழூர்ந்த மாநாடக் கண்ணனூர்க்
கோனுடர் புக்கொளித்த குன்று. 14

எரிவிசும்பு மிருநிலமாய்த் தென்பவான் மாறன்
செருவேன் மறங்கனன்று சீறக்
கொடிமாடத் தன்கொடும்பைக் கூடாத மன்னர்
நெடுமா மதிலிடிந்த நீறு. 15

கிழார்க் கூற்றத்துப் பவதாயமங்கலத்து அமருண்ணிலை ஆயின குவாவங் காஞ்சன் பாடினபாட் டித்தூண்கள்மேலன எல்லாம்.

நாகங் கண்டஞ்ச வென்னெஞ்சங்
கல்லென்ன வொல்லென் கடனீர்
மாகங்கொண் டெறிவர் சாத்தன்
மாறனெங்கோன் றுடர்க்கண்
மேகங் கொண்டான் வ . . . ,
. . ப்பக . . . . . . . .
. . . . . கொண் . . . . . . .
. மரு . . . . . . . . 16

. . . . பாண் மகனேய் பண்டெல்லாம்
யாமறிது மேங்கயர்க்கேய் சொல்லுநீய்—மாமறங்கைத்
தென்னுடர் காதலியர் தீய்நாட வாய்சிவந்த
மின்னுடர் வேண்மாறன் மெய். 17

. , . . . . . . . . . . , . , . . . . .
. . . போலரைசு பிறவா பிறநெடு மேருநெற்றிப்
பொன்போல் பசுங்கதி ராயிரம் வீசும்பொற் றேர்ப்பருதிக்
கென்போ தரவிடுமோ இணைச்சோதி இருவிசும்பேய். 18

ஆசார்யர் அநிருத்தர் பாடியது.

. . . . . . . . . . . . . . . . ற்ற
தீதுகண்டான் றஞ்சைச்செம்புல நாட்டுவெண்கோடல்விண்ட
போதுகண்டாயர் மலையப் புதுமணன் மீதுசெந்தீத்
தாதுகண்டா லன்ன கோவங்களூர்கின்ற தாழ்புறவேய். 19

தன்முதலாயமும் பூவையுந்தன் கைக்கிளியு முன்பிட்
டென்முதலன்பு மென்னுகச் செய்தா னியக்கத்தை விண்டார்
வன்முதல் ச . க்கருங்கைப் பகடுய்த்த மாறன் றெவ்வற்
கன்முத . . ங்கடத் தேகினன் பின் . . . . ரி . . கயே. 20

அமருண்ணிலை பாடின.

குறிப்பு :—செய்யுள் 1. மாறன் - பெரும்பிடுகு முத்தரையன சுவரன் மாறன். சுவரன் மாறன் அழுந்தியூரில் போர் வென்றதை இச்செய்யுள் கூறுகிறது. செய்யுள் 2. கையூம்பகையைச் சப்ப. சுவரன் மாறன் மணலூரில் போர்வென்றதை இச்செய்யுள் கூறுகிறது. செய்யுள் 5. புறப்படுமாறு - புறங் கொடுக்கும்படி ; போரில் பின்னடையும்படி. செய்யுள் 7. வல்லக்கோன் - வல்லத்து அரசனுகிய சுவரன் மாறன். செய்யுள் 11. கள்வர கள்வன் - இது சுவரன் மாறனுடைய சிறப்புப் பெயர்.

---

## சிவலோகநாதன்

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், சீகாழி தாலுகா, திருவெண்காடு. இவ்வூர் சிவன்கோயில் முதல் பிராகாரத்தின் வடக்குப்பக்கச் சுவரில் உள்ளது.

பதிப்பு : "செந்தமிழ்" தொகுதி பதினன்கு; பக்கம் 355.

விளக்கம் : வீரராஜேந்திர சோழன் காலத்தில் எழுதப் பட்டது இந்தச் சாசனம். இக்கோயில் சிவபெருமானுக்கு இந்த அரசன் பெயரால், அபிஷேகம் செய்யத் தேன், பால்,

பஞ்சகௌவ்யம் முதலிய பொருள்களைச் சிவலோகநாதன் என்பவர் அமைத்த தருமத்தை இச்செய்யுள் கூறுகிறது.

*சாசனச் செய்யுள்*

பூப்பாவை கோன் வீரராஜேந்திரர்க்காப் புராரிகல
நாப்பால் நவிற்றுஞ் சிவலோக நாதனென நறுதேன்
ஆப்போ லோடைதொடும் வெண்காட்டரற் கமைப்பித்தவறங்
காப்பா னவனென்னை ஆளுடை யானிக் கடலிடத்தே.

---

## கச்சியர்கோன்

இடம் : *தஞ்சாவூர் மாவட்டம், மாயவரம் தாலுகா,* **கடையூர்.** *அமிர்தகடேசுவரர் கோவில் வாயிலின் வலது புறத்துச் சுவரில் எழுதப்பட்டுள்ள சாசனம்.*

பதிப்பு : *தென் இந்திய சாசனங்கள், தொகுதி பன்னிரண்டு; எண் 265.* (No. 265. S. I. I. Vol. XII.)

விளக்கம் : *பல்லவ அரசன் ஒருவன் சோழனை வென்று அரசாண்டதை இச்செய்யுட்கள் கூறுகின்றன.*

*சாசனச் செய்யுள்*

வார்மன்னு வெல்கழல் மானவன் பாலுங்கள் மாமரபிற்
தார்மன்னர் பெற்ற தனுமக் கொடியித் தலம்புரக்கும்
கார்மன்னு செம்பொற் கனகொடை மோகதென் கச்சிநற்
போர்மன்னு வேள்பெற்ற தாரும் பெருத புலிக்கொடியே. 1

சிவனன்று நல்கிய செஞ்சின வேற்றுக் கொடியுயர்த்த
தவனந் தருபரிக் கச்சியர் கோன்பச்சை யேயுயர்வித்
தவனங் குலபதி தன்னுடன் போந்துதண் காவிரிநீர்ப்
புவனங் கொடுத்துக் கொண்டான் வன்பால் வெம்புலிக்கொடியே.

---

## கந்தன் மாதவன்

*இடம் : தஞ்சாவூர் மாவட்டம், மாயவரம் தாலுகா, நீடூர். இவ்வூர் சிவன்கோவிலின் தென்புறச்சுவரில் உள்ள சாசனம்.*

*பதிப்பு : இந்திய சாசனங்கள், தொகுதி பதினெட்டு; பக்கம் 64—69.* (Epigraphia Indica, Vol. XVIII. pp. 64-69.)

*விளக்கம் : மிழலைநாட்டு வேள் கந்தன் மாதவன் என்பவர் நீடூர் சிவாலயத்தில் செய்த திருப்பணிகளைக் கூறுகின்றன இச்செய்யுள்கள். கந்தன் மாதவனுடைய முன்னோர் அமிதசாகர முனிவரைக் கொண்டு யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலம் என்னும் நூல்களை இயற்றுவித்தனர் என்பதையும் இச்செய்யுள்கள் கூறுகின்றன.*

### *சாசனச் செய்யுள்*

சூரிய வுல கணைத்துங் குடைக்கீ
　　ழாக்கிய குலோத்துங்க சோழர்க்
　காண்டொரு நாற்பத்தா றதனிடைத் தில்லை
　　யம்பலத்தே வட கீழ்ப்பால்

போரியல் மதத்துச் சொன்னவா றறிவார்
　　கோயிலும் புராணநூல் விரிக்கும்
　புரிசை மாளிகையும் வரிசையால் விளங்கப்
　　பொருப்பினுல் விருப்புறச் செய்தோன்

நேரியற் காண்டே ழைஞ்சுடன் மூன்றினில்
　　நிகரிலாக் கற்றளி நீடூர்
　நிலவினுற் கமைத்த நிலாவினு னமுத
　　சாகர னெடுத்த . . தொகுத்த

காரிகைக் குளத்தூர் மன்னவன் தொண்டை
　　காவலன் சிறுகுன்ற நாட்டுக்
　கற்பகம் மிழலை நாட்டுவே ளாண்
　　டவன் கந்தன் மாதவனே.

எண்டிசை யுலகை ஒருகுடை நிழற்கீழ்
இருத்திய குலோத்துங்க சோழற்
கியாண்டொரு முப்பத் தெட்டினிற் சோணாட்
டிசைவளர் திருவிந்தளூர் நாட்டுண்

. . . . டை நீடிய நீடூர் உமையோடு
நிலாவின பெருமாற் குவந்து
. . . . லை மலையெனச் சிலையா
லுத்தம விமானமிங் கமைத்தான்

தண்டமி ழமித சாகர முனியை
சயங்கொண்ட சோழ மண்டலத்துத்
தண்சிறு குன்ற நாட்டகத் திருத்தி
. . . . நூற் காரிகை அவனுற்

கண்டவன் மருமான் காரிகைக் குளத்தூர்
காவல் நிலாவினுன் எவர்க்குங்
கருணையுந் தியாகமுங் காட்டிய மிழலை
நாட்டுவேள் கந்தன் மாதவனே. 2

குறிப்பு:—செய்யுள் 1. குலோத்துங்க சோழன் - இவன் முதலாங் குலோத்துங்க சோழன் ஆவன். இவன் கி. பி. 1070 முதல் 1119 வரையில் அரசாண்டான் என்பர். நேரியன் - சோழன்; குலோத்துங்க சோழன். கற்றளி. கல்+தளி. கருங்கல்லால் அமைத்த கோயில் என்பது பொருள். செய்யுள் 2. இச்செய்யுளின் இடையிடையே சில எழுத்துக்கள் மறைந்துவிட்டன. சிலையால் - கருங்கல்லினுல். அமித சாகர முனிவர் - இவர், யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கலம் என்னும் செய்யுளிலக்கண நூல்களை இயற்றியவர். சயங்கொண்ட சோழ மண்டலம் - தொண்டமண்டலம். இதற்கு அருவாநாடு என்பது பழைய பெயர். காரிகைக் குளத்தூர் - தொண்டமண்டலத்தில், செங்கற்பட்டு மாவட்டம், செங்கற்பட்டு தாலுகாவில் இருக்கிறது. அமிதசாகர முனிவர் இவ்வூரில் தங்கியிருந்து யாப்பருங்கலக்காரிகையை இயற்றியபடியால் இவ்வூருக்கு இப்பெயர் வந்தது.

# வேதவனமுடையான்

இடம் : புதுக்கோட்டை, திருமயம் தாலுகா, நாங்குபட்டி வட்டம், மடத்துக் கோவில் முதல் பிராகாரத்து வாசற்படிக்கு வலதுபக்கச் சுவரில் உள்ளது.

பதிப்பு : புதுக்கோட்டை சாசனங்கள், எண் *129.* (No. 129. I. P. S.)

விளக்கம் : *ஜயங்கொண்ட சோழ மண்டலத்து (தொண்டைநாட்டு)க் களத்தூர்க் கோட்டத்து மருதத்தூர், மருதத்தூ ருடையான் குன்றன் திருச்சிற்றம்பல முடையான் என்னும் புலவர், இரட்டைபாடி கொண்ட சோழவளநாட்டு வடகோ நாட்டு உறத்தூர்க் கூற்றத்துப் பையூர், பையூ ருடையான் திருச்சிற்றம்பல முடையான் வேதவன முடையான்மீது கவிபாடி, பாடின கவிக்குப் பரிசாகக் குடிக்காடு இரும்பூதி என்னும் நிலத்தைப் பெற்றார். பரிசு பெற்ற நிலத்தை அவ்வூர்ச் சிவன்கோவிலுக்குத் தானம் செய்தார். கீழ்க்கண்ட செய்யுள் பரிசு கொடுத்தவரின் பையூரைச் சிறப்பித்துப் பாடுகிறது. இதன்கீழுள்ள வசனம் பரிசு பெற்ற நிலத்தின் எல்லையைக் கூறுகிறது.*

*சாசனச் செய்யுள்*

வாளை வயிறு நிறைய மடற்கமுகம்
பாளைபசுந் தேனொழுகும் பையூரே—நாளையென்று
செப்பாத வாய்மையான் வேதன் திருமனுநூ
லொப்பானெங் கோமான்ற னூர்.

ஸ்வஸ்திஸ்ரீ. கோவிராஜகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ௰௫ஆவது இரட்டைபாடி கொண்ட சோழ வளநாட்டு வடகோ நாட்டு உறத்தூர்க் கூற்றத்து உடையார் திருப்பெருமானுண்டார்க்கு, ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து

களத்தூர்க் கோட்டத்து மருதத்தூருடையான் குன்றன் திருச்சிற்றம்பலமுடையானேன் கன்னி நாயற்று ஏழாந் தியதியுந் திங்கட்கிழமையும் பெற்ற உத்திரட்டாதி நாள் இத் திருப்பெருமா ளுண்டார் திருக்கை மலரிலேய் நான் நீர்வார்த்த குடிக்காடு இரட்டைப்பாடி கொண்ட சோழ வளநாட்டு வடகோ நாட்டு உறத்தூர்க் கூற்றத்துப் பையூருடையான் திருச்சிற்றம்பல முடையான் வேதவன முடையானை நான் கவி பாடி பாடின கவிக்கு எனக்கு பரிசில் தந்த தன்காணியான குடிக்காடு இரும்பூதிக்கு வடபாற்கெல்லை நெடுங்கீரைக்குடி எல்லைக்குத் தெற்கும் மேல்பாற்கெல்லை ஷெயூர் எல்லைக்கு கிழக்குந் தென்பாற்கெல்லை பையூர் சுடுகாட்டுக் குள...... ''

குறிப்பு :—இதற்குமேல் இந்தச் சாசனம் மறைந்து கிடக்கிறது. திருச்சிற்றம்பலமுடையான் வேதவனமுடையான் மேல் பாடின கவியின் (பிரபந்தத்தின்) பெயர் தெரியவில்லை.

## உமையாள் நகைப்பு

இடம் : புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகா, குடுமியாமலை. அகிலாண்டேசுவரி அம்மன் கோவில், இரண்டாவது கோபுரவாசலுக்கு இடதுபுறச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு : புதுக்கோட்டை சாசனங்கள், எண் 1092. (No. 1092. I. P. S.)

விளக்கம் : உமையாளை இடதுபுறத்தில் வைத்திருக்கும் சிவபெருமான், அவ்வம்மையார் அறியாதபடி கங்கை என்பவளைத் தமது அடர்த்தியான சடாமுடியில் மறைத்து வைத்திருக்கிறார் என்பது புராணக் கதை. குடுமியாமலையில் உள்ள சிவபெருமானுக்குச் சடாமுடி குறைந்து சிறுகுடுமியாய்விட்டதாம். அதைக் கண்டு உமையம்மையார், ''அடர்த்தியான சடை போய்விட்டபடியால், இனிக் கங்கையாளை இவர்

எங்கே மறைத்து வைக்கப்போகிறுர் !" என்று கூறி நகைப்பதாக இச்செய்யுள் நயம்படக் கூறுகிறது. இந்தச் செய்யுளை இயற்றியவர் ஆதிநாதர் என்பவர்.

*சாசனச் செய்யுள்*

எங்கள் நலக் குன்றைப்பார்த் தேழுலகு மீன்றவுமை
நங்கை பலகாலும் நகைசெயுமே—கங்கையுறை
கொங்கேய் கமழ்செடிலம் போய்க்குடுமி யாய்விட்ட
தெங்கே யினிமறைப்பா ரென்று.

உ ஆதிநாதர் உ

---

## பங்கள ராயர்

இடம் : புதுக்கோட்டை, திருமெய்யம் தாலுகா, காரையூர் கிராமம். மாரியம்மன் கோவிலுக்கு முன்புறமுள்ள ஒரு கல்லில் எழுதப்பட்டுள்ள சாசனம்.

பதிப்பு : புதுக்கோட்டை சாசனங்கள், எண் 998. (No. 998. I. P. S.)

விளக்கம் : பங்களராயர் என்னும் தமிழ்ப் புலவரின் வீட்டுப்பெயரைக் கூறுகிறது இந்தச் செய்யுள்.

*சாசனச் செய்யுள்*

பாரார் தமிட்புலவன் பங்களராயன் பைம்பொற்
சீரா ரகத்தின்பேர் செப்புங்கால்—ஏராருங்
காராளர் காஞர் வருங்கற்பக வீரரெனும்
பேராளர் தம்முடைய பேர்.

குறிப்பு:—தமிட் புலவன் என்பது தமிழ்ப் புலவன் என் றிருத்தல் வேண்டும்.

---

# மாதை வீரன்

இடம்: புதுக்கோட்டை, திருமெய்யம் தாலுகா, தூர் வாசபுரம். இவ்வூர் சுப்பிரமணியசுவாமி கோவிலில் உள்ளது.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண் 795. (No. 795. I. P. S.)

விளக்கம்: தனபாலன் மாதை வீரன் என்பவர் இந்தக் கோவிலைக் கட்டி முருகன், வள்ளி, தெய்வயானை திருவுருவங்களை அதில் அமைத்ததை இந்தச் செய்யுள் கூறுகிறது.

### சாசனச் செய்யுள்

இனமேவு சகன்கலி யாயிரத்து முந்நூற்
றெழுபதுட னேழின்மே லிசைந்த தாது
மனமேவு வைகாசி யிருபத்தேழில்
மன்னுதுறு மாவீசற் கிடப மற்றுஞ்
சினமேவு வேல்முருகன் ஞச்சி மாருந்
திருக்கோயிலுங் கண்டு மெய்யன் செல்வத்
தனபாலன் பேரிந்தை மாதை வீரன்
தன்னுடனே கிளைவாழத் தாபித் தானே.

குறிப்பு:—இத்திருப்பணிகள் செய்தது சக ஆண்டு 1377 என்று கூறுகிறது இச்செய்யுள். எனவே கி. பி. 1455-இல் இவை நிகழ்ந்தன.

# ஆதி வானவதரையன்

இடம்: புதுக்கோட்டை, திருமெய்யம் தாலுகா, இடையாத்தூர். சுயம்பிரகாசமூர்த்தி கோவில் வடபுறத்துச்சுவரில் உள்ளது.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண் 994. (No. 994. I. P. S.)

விளக்கம்: சுயம்பிரகாசமூர்த்தி கோவிலின் பழைய பெயர், தான்தோன்றி ஈசர் கோவில் என்பது. இந்தக் கோவிலின் நந்தவனத்தைத் திருத்தி நெல்விளையும் கழனியாக்கிக் கொடுத்த ஆதிவானவதரையன் என்பவரைப் புகழ்கிறது இந்தச் செய்யுள்.

சாசனச் செய்யுள்

திருத்திகழும் பொழிலாறைத் தான்தோன்றி
யீச்சுரற்குத் தன்மையான
அருத்தியொடுந் தருவத்த சாமமதனில்
அமுதுசெய்ய அழகார்பூவை
மருத்திகழும் புயத்தனகன் ஆதிவா
னவதரையன் காதலொடுந்
திருத்தியநந் தாவனத்தைச் செழுங்கழனி
யாய்விளையச் செய்திட்டானே.

## சொக்கநாத இலக்கயன்

இடம் : புதுக்கோட்டை, திருமெய்யம் தாலுகா, அம்மன் குறிச்சி, சுந்தரேசுவரர் கோவில் முன் மண்டபத்தில் உள்ள செய்யுள்

பதிப்பு : புதுக்கோட்டை சாசனங்கள், எண் 992. (No 992. I. P. S.)

விளக்கம் : இந்தக் கோவிலின் முன்மண்டபத்தை, மாவை பாலகிருட்டினன் சொக்கநாத இலக்கயன் என்பவர் கட்டியதை இச்செய்யுள் கூறுகிறது.

*சாசனச் செய்யுள்*

திசைவாச ரம்மன் குறிச்சியில்வாழ் சொக்கர் செம்பொன்முடி
அசைவாக மெச்சிட விசுவ கன்மாவு மதிசயிப்ப
விசைவாடை வீச மணிமண்டபங் கட்டி வீறுபெற்ருன்
இசைமாவை வால கிட்டணன் சொக்கநாத இலக்கயனே.

---

## இளங்கோமான் வாணன்

இடம் : புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகா, குடுமியாமலே. இம்மலேயில் தம்பிக்கிணற்றுக்குப் போகும் வழியில் ஒரு பாறையில் எழுதப்பட்டுள்ள செய்யுள்.

பதிப்பு : புதுக்கோட்டை சாசனங்கள், எண் 676. (No. 676. I. P. S.)

விளக்கம் : வாணன் தம்பி, வடுகரைப் போரில் வென்றதைக் கூறுகிறது இச்செய்யுள். இதற்கு மேலே பதினறு வரிகளில் வேறு செய்யுள் எழுதப்பட்டிருக்கிறது. அதில் எழுத்துக்கள் பெரிதும் அழிந்துவிட்டபடியால் அச்செய்யுளே இங்குத் தரவில்லே.

*சாசனச் செய்யுள்*

மன்னுடு பூங்கழலான் வாணற் கிளங்கோமா
னன்னுள் வடுகெறிந்த ஆர்வத்தால்—இன்ன
மறங்கால் வேலண்ணல் வரும்வரு மென்றேங்கி
உறங்கா வடவேந்த ரூர்.

---

## சோளிவீரராயன்

இடம்: *புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகா, குடுமியா மலை. சிகாமணிநாத சுவாமி கோவில் இரண்டாங்கோபுர வாயிலின் இடதுபுறம் உள்ள சாசனம்.*

பதிப்பு: *புதுக்கோட்டை சாசனங்கள், எண் 679.* (No. 679. I. P. S.)

விளக்கம்: *சோளி வீரராயன் என்பவரைப் புகழ்கிறது இச்செய்யுள்.*

*சாசனச் செய்யுள்*

வன்படையார் தேவியர்தம் மங்கலநாண் தட்டாணிக்
கன்புரிய வோடாணி யாகுமே—இன்பப்
பரராசர் கோபாலன் பல்லவர்கோன் சோளி
வீரராயன் சிங்கார வாள்.

---

## மாவலிவாணன்

இடம் : புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகா, குடுமியா மலை. ஐயனர் கோவிலுக்குப் பின்புறத்தில் உள்ள பாறையில் எழுதப்பட்டுள்ளவை.

பதிப்பு : புதுக்கோட்டை சாசனங்கள், எண் 678. (No. 678. I. P. S.)

விளக்கம் : பாண்டியனை வென்ற வாணனைப் புகழ்கிறது இச்செய்யுள்.

*சாசனச் செய்யுள்*

இழைத்த படியிதுவோ வெங்கணு வென்
றழைத்த குரலே யான்தழைத்த—குடை
மன்னவர்கோன் வாணன் வடிவேலால் தோற்றுடைந்த
தென்னவர்கோன் போன திசை.

---

## மாவலிவாணன்

இடம் : புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகா, குடுமியா மலை. இவ்வூர் மேலைக் கோவில் என்கிற குடபோகக் கோவிலுக்குத் தென்புறம் உள்ள பாறையில் இந்தச் சாசனம் உள்ளது.

பதிப்பு : புதுக்கோட்டை சாசனங்கள், எண் 673. (No. 673. I. P. S.)

விளக்கம் : வாணன் என்னும் அரசனுடைய வீரத்தைப் புகழ்கிறது.

சாசனச் செய்யுள்

பாரோங்கு கொற்றக் குடைவாணன் பல்புவித்
தேரோன் திருவுத்திராட நாள்—பேருவமைக்
குன்றுடர் மாவியானைக் கோவேந்தர் வீற்றிருப்ப
ரின்றெடான் இன்றெடான் என்று.

குறிப்பு :—முதல் அடி ஈற்றில் பல்புவி என்றிருப்பது, பல்புரவி என்றிருக்க வேண்டும்.

---

## மாவலிவாணன்

இடம் : புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகா, குடுமியாமலை. சிகாமணிநாத சுவாமி கோவில் இரண்டாம் கோபுர வாயிலின் வலதுபுறச் சுவரில் உள்ளது.

பதிப்பு : புதுக்கோட்டை சாசனங்கள், எண் 674. (No. 674. I. P. S.)

விளக்கம் : மாவலிவாணனின் வெற்றிச் சிறப்பைக் கூறுகிறது இச்செய்யுள்.

சாசனச் செய்யுள்

சென்னி புலிக்கொடியும் தென்னன் கயல்கொடியும்
மின்னும் கழல்பிறையோன் விற்கொடியும்—மன்னும்
வருசைக் கொடைத்திருமால் மாவாலி வாணன்தன்
கருடக் கொடிக்கொடியாம் காண்.

குறிப்பு :—மூன்றுமடியில், வருசை என்பது வரிசை என்றும், மாவாலி என்பது மாவலி என்றும் இருத்தல் வேண்டும். இங்குள்ள இன்னொரு செய்யுள் சிதைந்து காணப்படுகிறபடியால் இங்கு அதை எழுதவில்லை.

---

# பாண்டியன் புகழ்

இடம் : புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகா, குடுமியா மலை. இம்மலைமேலுள்ள சிகாமணிநாத சுவாமி கோவில் இரண்டாங்கோபுர வாயிலின் வலதுபுறச் சுவரில் உள்ளது இந்தச் சாசனம்.

பதிப்பு : புதுக்கோட்டை சாசனங்கள், எண் 651, 652. (No. 651, 652. I. P. S.)

விளக்கம் : பாண்டியன், சோழனை வென்று அரசாண்டதைக் கூறுகின்றன இச்செய்யுள்கள்.

### சாசனச் செய்யுள்

தென்னவன் செய்ய பெருமான் திருமதுரை
மன்னவன்றன் மால்களிற்று வல்லிக்கும்—பொன்னிநாட்
டாலிக்குந் தானை அபையன் குலமகளிர்
தாலிக்கு மொன்றே தனை.

பொன்னி வளநாடு பாணன் பெறப்புரந்தான்
சென்னி திருமார்பிற் செயல்தீட்டினுன்—முன்னே
புரமெறிவார் மண்சுமக்கப் பூபாரங் காத்தான்
தரமறியான் மீனவர்கோன் தான்.

குறிப்பு :—இரண்டாவது செய்யுளில் இரண்டாம் வரியில் செயல் தீட்டினுன் என்பது சேல் தீட்டினுன் என்றிருக்க வேண்டும். பாண்டியன், சோழ அரசனை வென்று அவனுடைய மார்பில் தன்னுடைய முத்திரையாகிய சேல்மீன் உருவத்தைப் பச்சை குத்தினுன். வென்ற அரசர், தமது அடையாள முத்திரையைத் தோல்வியுற்ற அரசரின் மார்பிலும் தோளிலும் பொறித்துவைப்பது அக்காலத்து வழக்கம்.

# பாண்டியன் வெற்றி

இடம் : *புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகா, குடுமியா மலை. சிகாமணிநாத சுவாமி கோவில் கோபுரவாயிலின் இடதுபுறச் சுவரில் உள்ளவை.*

பதிப்பு : *புதுக்கோட்டை சாசனங்கள், எண்கள் 653, 654, 655.* (No. 653, 654, 655. I. P. S.)

விளக்கம்: *பாண்டியனுடைய வீரத்தையும் வெற்றியையும் கூறுகின்றன.*

*சாசனச் செய்யுள்*

மால்விட்ட படைதுரந்து வடுகெறிந்து
மகதேசன் வடிவேல் வாங்க
கால்விட்ட கதிர்முடிமே லிந்திரனைப்
புடைத்ததுமுன் கடல்போய் வற்ற
வேல்விட்ட தொருதிறலு முகிலிட்ட
தனிவிலங்கும் வெற்பி லேறச்
சேல்விட்ட பெருவலியு மாங்கேவிட்டு
நடந்தான் தென்னர் கோவே.

வெற்றுறமுன் வேற்செய்ய கொற்கையர்கோ மாறன்
பரிக்குத்தோற்ற கழல்வளவன் சோணாட்டி—லெற்றும்
புகையாற் குவளையாம் பூங்குமுதம் புண்ணீர்
கயாற்றிற் சேர்கழு நீராம்.

கன்னி வளநாடன் காவேரி நாடாளச்
சென்னி விழுந்தோடுஞ் சேவடிகள்—பொன்இரை
யெரிகாலுங் கான நடந்திச் சென்னியையுங்
கரிகால னுக்கிடவோ காண்.

## கோனூர் குறிச்சி

இடம்: புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகா, பரம்பூர். இவ்வூர் சிவன் கோவில் தென்புறச் சுவரில் உள்ள செய்யுள்.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண் 1115. (No. 1115. I. P. S.)

விளக்கம்: பரம்பூர் வேளாளர் இவ்வூர் சிவன் கோவிலுக்குக் கோனூர் குறிச்சி என்னும் ஊரைத் தானமாக வழங்கியதைக் கூறுகிறது இச்செய்யுள்.

### சாசனச் செய்யுள்

தேனூர் பொழில்சூழுந் தென்பரம்பை வேளாளர்
கோனூர் குறிச்சியைக் கொண்டளித்தார்—மானேய்
மழுவின் படையானும் மாதுமையும் போதும்
விழவின் படியாக விட்டு.

---

## மாகதன் பொன்பரப்பினன்

இடம்: புதுக்கோட்டை, திருமெய்யம் தாலுகா, பொன்னமராவதி. இவ்வூர் சோமேசுவரர் கோவில் கிழக்குச் சுவரில், வாயிலுக்கு வலதுபுறத்தில் உள்ளது.

பதிப்பு: புதுக்கோட்டை சாசனங்கள், எண் 677. (No. 677. I. P. S.)

விளக்கம்: மகதேசன் பொன்பரப்பினன் என்னும் அரசனுடைய ஆட்சியின் சிறப்பைக் கூறுகிறது.

*சாசனச் செய்யுள்*

ஸ்வஸ்திஸ்ரீ வீரமாகதன் பொன்பரப்பினுன்.

மடலளவு நிறைந்தொழுகு மதுமலர்த்தார்
மகதேசன் வையங்காக்கும்
அடலளவு மணிநெடுந்தோ ளாயுத
ராமனை வணங்காதவரியாவர்
கடலளவு கடந்ததவன் கனைகுரகதம்
கதிர்வேல் மன்ன
ருடலளவு நடந்தது மாற்ரு ருலகளவு
நடந்ததவன் ஒருசெங்கோலே.

---

## சேதுபதி தானம்

இடம் : புதுக்கோட்டை, திருமெய்யம் தாலுகா, ராங்கியம் மறவணியேந்தல் கரையிலிருக்கும் பிள்ளையார் கோவிலுக்கு முன்பு நட்டிருக்கும் ஒரு கல்லில் எழுதப்பட்டுள்ள செய்யுள்.

பதிப்பு : புதுக்கோட்டை சாசனங்கள், எண் 1010. (No. 1010. I. P. S.)

விளக்கம் : விசய ரகுநாத சேதுபதி அரசர், மறவணியேந்தல் என்னும் நிலத்தைச் சிவன் கோவிலுக்குத் தானஞ் செய்ததை இந்தச் சாசனம் கூறுகிறது. இச்செய்யுள்களின் கீழே வேறு ஒரு செய்யுளும் எழுதப்பட்டிருக்கிறது. அச்செய்யுள் சிதைந்து அழிந்துவிட்டபடியால் அதை இங்கு எழுதவில்லை.

*சாசனச் செய்யுள்*

தென்னன் விசைய ரெகுநாத சேதுபதி
மன்னன் கனகசபை வாணருக்கு—நன்னிலமேல்
இந்திரவி யுள்ளளவுமே நடக்கக் கற்போட்டு
தந்தான் மறவணியேந் தல்.

பூதானமாக மறவணியேந்தல் எப்போதும் மடை
மீதான வம்பல வாணர்தம் பூசை விளங்கச் செய்தோர்
ஏதாகிலுந் தடை வந்தாலு . . திறல் வாழுங்குரு
மாதா பிதாப் பசுவை .... .... .....

குறிப்பு :—இரண்டாம் செய்யுளில் சில எழுத்துக்கள் மறைந்துவிட்டன.

---

## இராமநாத முனிவர்

இடம் : *இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம். இக்கோவிலின் திருவுண்ணாழிகை வாயிலுக்குத் தென்புறச் சுவரில் உள்ளது.*

பதிப்பு : *தமிழ் - வடமொழிச் சாசனங்கள், பக்கம் 58.* (Tamil and Sanskrit Inscriptions. P. 58.)

விளக்கம் : *இராமேசுவரக் கோவிலின் ஆடல் மண்டபத்தைச் சக ஆண்டு 1520-இல் (கி. பி. 1598-இல்) இராமநாத முனிவர் கட்டிமுடித்ததைக் கூறுகிறது.*

*சாசனச் செய்யுள்*

சேல்கண்ட வாரி யிலங்கேசன் வெம்பழிதீர முன்னுள்
மால்கண்ட கோயி லிராமீச ராடல்செய் மண்டபத்தை
நூல்கண்ட நற்சக னுயிரத்தோ டைந்து நூற்றிருபான்
மேல்கொண்ட நாளின் முனி ராமநாதன் விதித்தனனே.

குறிப்பு :—*சகன்-சாலிவாகன சகாப்தம். முனிராமநாதன்-இராமநாதபண்டாரம் அவர்கள்.* இந்தத் திருப்பணி, கூத்தன் சேதுபதி காத்ததேவர் என்னும் இராமநாதபுரத்து அரசர் காலத்தில் நிகழ்ந்தது.

---

# இராமநாத முனிவர்

இடம்: இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம் கோவில், இரண்டாம் பிராகாரம், கோடிதீர்த்தத்தின் மேற்குப்புறத்துச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு: தமிழ் - வடமொழி சாசனங்கள், பக்கம் 59. (Tamil and Sanskrit Inscriptions. P. 59.)

விளக்கம்: சக ஆண்டு 1530-இல் (கி. பி. 1608-இல்) இராமநாத முனிவர் இந்தக் கோவிலைக் கற்றளியாகக் கட்டியதைக் கூறுகிறது.

### சாசனச் செய்யுள்

திருமா லரனுக் கபிடேகஞ் செய்யச் சிலையதனுல்
வருமாறு கண்ட வண்கோடிப் புனற்கு மகாலயத்தைத்
தருமாயிரத் தைஞ்ஞூற்று முப்பான் செல்சகன் வருடத்
தருமா தவஞ்செய் முனிராம நாத னமைத்தனனே.

குறிப்பு:—இரண்டாம் அடியில், "கோடிப் புனற்கு மகாலயத்தை" என்றிருப்பதை "கோடிப் புனற்கண் மகாலயத்தை" என்றும் படிக்கலாம்.

# இராமநாத முனிவர்

இடம் : இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரம், முதல் பிராகாரம், பிள்ளையார் கோவிலுக்குத் தெற்கில், மேற்குச் சுவரில் உள்ளது.

பதிப்பு : தமிழ் - வடமொழிச் சாசனங்கள், பக்கம் 59. (Tamil and Sanskrit Inscriptions. P. 59)

விளக்கம் : சக ஆண்டு 1530-இல் (கி. பி. 1608-இல்) இராமேசுவரக் கோவில் திருப்பணியை இராமநாத முனிவர் செய்து முடித்ததைக் கூறுகிறது.

### சாசனச் செய்யுள்

பற்றுஞ் சகனிற் பதினைந்து நூற்று முப்பான் மருவ
நற்றும் புவியினையாள் வீசுபூபதி நாளிற் றெண்டர்
குற்றங் கடிந்த வரராம நாயகர் கோயிலன்பான்
முற்றுந் தவங்கள் புரி ராமநாதன் முடித்தனனே.

குறிப்பு :—பதினைந்து நூற்று முப்பால் - ஆயிரத்து ஐந் நூற்று முப்பது. ராமநாதன் - இராமநாத பண்டாரம் என்னும் இராமநாத முனிவர்.

# அதிவீரராமனின் தருமம்

இடம் : திருநெல்வேலி மாவட்டம், தென்காசி, விசுவ நாத சுவாமி கோவில், பெரிய கோபுரத்தின் வடக்குச் சுவரில் உள்ள சர்சனச் செய்யுள்.

பதிப்பு : ''செந்தமிழ்'', தொகுதி நான்கு, பக்கம் 120.

விளக்கம் : அதிவீரராம பாண்டியன் இக்கோவிலுக்கு வழங்கிய தானங்களைக் கூறுகிறது இச் செய்யுள்.

சாசனச் செய்யுள்

அத்தர் தென்காசி கண்டோன் கண்ட வாலையமு
மடியாரும் வாழ்வுபெற வந்
தழக னதிவீர ராமன் சறுவமானிய
மதாகக் கொடுத்த படிதான்
சித்திரைப் பரணியூர்த் தெண்ட கோஷப் பொன்
திரும்பக் கொடுத்தவ் வூரிற்
செங்கோட்டையார் கொண்ட பகுதியு நிறுத்தித்
திருக்கோயிற் பகுதியாய்
வைத்ததை யறக்கழித் தாயங் கணக்குடன்
மகாநவமி திருநாளிடை
வந்த காணிக்கை பாட்டப் பகுதி காணம்பல்
வரியிவை யெலாங் கழித்துப்
பத்திரமாய்க் குண ராமநாதற்கு மேற்படி
பணங்கழித் தடியர் வீட்டுப்
பணமுங் கழி . . . த்திப்படிச் சருவமானியப்
பட்டையமு மருளி னனே.

# குலசேகர பாண்டியன்

இடம்: திருநெல்வேலி மாவட்டம், தென்காசி, விசுவநாத சுவாமி கோவில் தென்புறச் சுவரில் உள்ள செய்யுள்கள்.

பதிப்பு: திருவாங்கூர் சாசனங்கள், முதல் தொகுதி, பக்கம் 105. (T. A. S. Vol. I. Page 105.)

விளக்கம்: நெல்வேலி மாறன் என்னும் வீரவேற் குலசேகர பாண்டியன் முடிசூடியதையும், அவன்மேல் வீர வெண்பா மாலை பாடப்பட்டதையும் இச்செய்யுள்கள் கூறுகின்றன. சக ஆண்டு 1474-இல் (கி. பி. 1552-இல்) இவன் முடிசூடினன்.

*சாசனச் செய்யுள்*

ஏறிய சகாத்த மாயிரத்து நானூற்றெழுபதின்
　　ளலில் வரிழ்சம் பரிதாபிதனில் மாதம்
தேறிய சித்திரை யிருபத் தொன்பதாகுந் தேதி
　　யிரண்டாம் பகந் திங்க ளுரோகணிநாள்
வீறுயர்ந்த மிதுனத்து நெல்வேலி மாறன்
　　வீரவேள் குலசேகரச் செழியனென்று சுர
ராறுபுனை யகிலேசர் காசியிலே விளங்கவணி
　　மவுலி தரித்தனன் பரராசர் பணிந்தனரே. 1

ஏடியல் மாலையணிந் தாலும் வாடு மெனப்புலவோர்
பாடியவீரவெண்பா மாலையைப் பொன்னின் பாண்டியன்போர்
தேடிய வேற்செழியன் குல சேகரத் தென்னனைப்போற்
சூடிய வேந்தருண்டோ வொரு வேந்தரைச் சொல்லுகிலே. 2

நன்றாக.

குறிப்பு:—செய்யுள் 1. வரிழ்சம் என்பது வருஷம் என்றிருக்கவேண்டும். வீர வெண்பாமாலையைப் பாடிய புலவர் பெயர் தெரியவில்லை. அந்நூல் இப்போது இருக்கிறதா என்பதும் தெரியவில்லை.

## குலசேகர பாண்டியன்

இடம் : திருநெல்வேலி மாவட்டம், தென்காசி, விசுவ நாதசுவாமி கோவிலின் முன்மண்டபத்தின் வடபுறச் சுவரில் உள்ளது.

பதிப்பு : திருவாங்கூர் சாசனங்கள், முதல் தொகுதி, பக்கம் 103. (T. A. S. Vol. I. Page 103.)

விளக்கம் : தென்காசி விசுவநாதர் கோவில் கோபுரத்தைக் கட்டத் தொடங்கி அது முடிவுபெறுவதற்கு முன்னர் இறந்துபோன அரிகேசரி பராக்கிரமபாண்டியனுடைய தம்பி குலசேகர பாண்டியன், அக் கோபுர வேலையைத் தொடர்ந்து செய்துமுடித்ததை இச்செய்யுள் கூறுகிறது.

*சாசனச் செய்யுள்*

விண்ணுடர் போற்றுந் தென்காசி பொற்கோபுர மீதிலெங்க
ளண்ணுழ்வி செய்தபணி யிப்படி குறையாய்க் கிடக்க
வொண்ணு தெனக்கண் டுயர்ந்ததட் டோடெங்கு மூன்றுவித்
மண்ணுளு மாலழகன் குலசேகர மன்னவனே. [தான்

குறிப்பு :—அண்ணுழ்வி - தமையன்.

---

## ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம்

இடம்: பாண்டிநாட்டு ஸ்ரீவில்லிபுத்தூர், வடபெருங்கோவிலுடையான் ஆலயத்தின் கிழக்குப்புறம் உள்ள உயரமான கோபுரத்தின் நிலைக்கால் ஒன்றில் உள்ள சாசனச் செய்யுள்.

பதிப்பு : "செந்தமிழ்", தொகுதி ஐந்து. பக்கம் 438.

விளக்கம் : இந்தக் கோபுரத்தை மேருமலைக்கு ஒப்பிடுகிறது இச்செய்யுள்.

*சாசனச் செய்யுள்*

இருக்கோது மந்தணர்சூழ் புதுவாபுரி யெங்கள்பிரான்
மருக்கோதை வாழும் வடபெருங்கோயில் மணிவண்ணனுர்
திருக்கோபுரத் துக்கிணை யம்பொன் மேருச் சிகரமென்றே
பருக்கோதலா மன்றிவே றுபமானப் பணிப்பில்லையே.

---

## பராக்கிரம பாண்டியன்

இடம் : *திருநெல்வேலி மாவட்டம், தென்காசி, விசுவ நாத சுவாமி கோவிலின் முன்புறம் இடிந்துள்ள கோபுரச் சுவரில் எழுதியுள்ள சாசனச் செய்யுள்கள்.*

பதிப்பு : *திருவாங்கூர் சாசனங்கள், முதல் தொகுதி, பக்கம் 96, 97.* (T. A. S. Vol. I. Page 96, 97.)

விளக்கம் : *அரிகேசரி பராக்கிரம பாண்டியன் இக் கோவிலைக் கட்டியதையும், பிறகு இக்கோவிலின் கோபுரத் தைக் கட்டத்தொடங்கியதையும், அவனுடைய சிறப்புக்களை யும் இச்செய்யுட்கள் கூறுகின்றன.*

*சாசனச் செய்யுள்*

அன்பினுடன் சகாத்த மாயிரத்து முந்நூற்
றறுபத் தெட்டின்மேல் வைய்காசித் திங்கள்
மன்தியதி யீரைந்திற் பூருவ பக்க
மருவு தெசமியில் வெள்ளி வாரந்தன்னில்
மின்திக ழுத்தரநாள் மீனத்தில் வாகைவே
லரிகேசரி பராக்கிரம மகிபன்
தென்திசையிற் காசிநகர் கோயில் காணச்
சென்றுநின்று தரிழ்சணைதான் செய்வித்தானே. 1

பன்னு கலியுக நாலாயிரத் தைஞ்ஞூற் றைம்பத்
தெட்டின் மேலெவரும் பணிந்து போற்றச்
சென்னெல்வயற் றென்காசி நகரில் நற்கார்த்திகைத்
திங்கள் தியதியைந்திற் செம்பொன் வார
மன்னிய மார்கழிநாளில் மதுரை வேந்தன்
வடிவெழு தொணுத பராக்கிரம மகிபன்
சொன்ன வரைபோற் றிருக்கோபுரமுங் காணத்
துடியிடையா யுபானமுதல் துடங்கி ஞனே. 2

சேலேறிய வயற் றென்காசி யாலயந் தெய்வச்செய
லாலே சமைத்த திங்கென் செயலல்ல வதனையின்ன
மேலே விரிவு செய்தே புரப்பாரடி வீழ்ந்தவர் தம்
பாலேவல் செய்து பணிவன் பாராக்கிரம பாண்டியனே. 3

மனத்தால் வகுக்கவு மெட்டாத கோயில் வருக்கமுன்னின்
றெனத்தான் பணிகொண்ட நாதன் தென்காசி யென்றுமண்
நினைத்தா தரஞ்செய்து தங்காவல் பூண்ட நிருபர்பதந் [மேல்
தனைத்தாழ்ந் திறைஞ்சித் தலைமீ தியானுந் தரித்தனனே. 4

பூந்தண் பொழில்புடை சூழுந்தென் காசியைப் பூதலத்தில்
தாங்கினை யுடனே புரப்பார்கள் செந்தா மரையாள்
காந்தன் பராக்கிரமக் கைதவன் மான கவசன்கொற்கை
வேந்தன் பணிபவ ராகி யெந்நாளும் விளங்குவரே. 5

காண்டகு சீர்புனை தென்காசிக் கோபுரக் கற்பணியா
ருண்டில் முடித்துக் கயிலை சென்ரு னகிலேசர் பதம்
பூண்டுறை சிந்தை யரிகேசரி விந்தைப் போர்கடந்த
பாண்டியன் பொன்னின் பெருமாள் பராக்கிரம பாண்டியனே.

ஆரா யினுமிந்தத் தென்காசி மேவுபொன் ஞலையத்து
வாராதோர் குற்றம் வந்தாலப் போதங்கு தந்ததனை
நேராக வேயொழித் துப்புரப் பார்களை நீதியுடன்
பாரா ரறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே. 7

அரிகே சரிமன் பராக்கிரம மாற னரனருளால்
வரிசேர் பொழிலணி தென்காசிக் கோயில் வகுத்துவலம்
புரிசேர் கடற்புவி போற்றவைத் தேனன்பு பூண்டிதனைத்
திரிசேர் விளக்கெனக் காப்பார்பொற் பாதமென் சென்னியதே.

சாத்திரம் பார்த்திங் கியான்கண்ட பூசைகள் தாம்நடாத்தி
யேத்தியவன்பால் விசுவநாதன் பொற்கோயி லென்றும்புரக்கப்
பாத்திபன் கொற்கைப் பராக்கிரம மாறன் பரிவுடனல்
கோத்திரந் தன்னி லுள்ளார்க்கு மடைக்கலங் கூறினனே. 9

மென்காசை மாமல ரன்ன மெய்யோற்கும் விரிஞ்சனுக்கும்
வன்காசு தீர்த்திடும் விச்சுவ நாதன் மகிழ்ந்திருக்கப்
பொன்காசை மெய்யென்று தொட்ட கைக்குமிப் பூதலத்துத்
தென்காசி கண்ட பெருமாள் பராக்கிரமத் தென்னவனே. 10

ஏரார் சகாத்த முந்நூற்றுட னாயிரத் தெண்பத்தஞ்சிற்
சீராரு மார்கழி சித்திரை நாளிற் சிறந்துகுற்றம்
வாராத பூரணையினிற் பராக்கிரம மாற . . . . . .
. . . . கயிலாயந்தான் . . . . . . . . கண்டனனே. 11

கோதற்ற பத்தி யறுபத்து மூவர்தங் கூட்டத்திலோ
தீதற்ற வெள்ளிச் சிலம்பகத்தோ செம்பொன் னம்பலத்தோ
வேதத்திலோ சிவ லோகத்திலோ விசுவ நாதனிரு
பாதத்திலோ சென்று புக்கான் பராக்கிரம பாண்டியனே. 12

ஓங்குநிலை யொன்ப துற்றதிருக் கோபுரமும்
பாங்கு பதினொன்று பயில்தூணுந்—தேங்குபுகழ்
மன்னர் பெருமான் வழுதிகண்ட தென்காசி
தன்னிலன்றி யுண்டோ தலத்து. 13

அணிகொண்ட விந்த வணங்குமொன் றேயடி யேற்குனக்கு
மணிகொண்ட வாசல் மணியும்ஒன் றேபகை மன்னரையும்
பிணிகொண்ட காரையு முந்நீரை யும்பெரும் பூதத்தையும்
பணிகொண்ட செண்பகத் தென்னு பராக்கிரம பாண்டியனே.

குறிப்பு :—செய்யுள் 1. சகாத்தம் - சாலிவாகன சகாப்தம். சகாத்தம் 1368 என்பது கி. பி. 1446-ஆம் ஆண்டு. செய்யுள் 2. கலியுகம் 4558 என்பது சக ஆண்டு 1379 ஆகும்; கி. பி. 1457-ஆம் ஆண்டு. உபானம் என்பது கோவில் கட்டடத்தின் அடிப்பகுதிக்குப் பெயர். செய்யுள் 12. சகாத்தம் முந்நூற்றுடன் ஆயிரத்தெண்பத்தைந்து என்பது 1385. இது கி. பி. 1463-ஆம் ஆண்டு. முதலாவது செய்யுளுக்குக் கீழே "அடைவு திகழ் சகாத்த மாயிரத்து முந்நூற்றறுபத் தொன்பதின் மேற்செல்" என்று தொடங்கும் செய்யுள் சிதைந்து அழிந்துவிட்டது. ஆதலின் அச்செய்யுள் இங்கு எழுதப்படவில்லை.

---

## அய்யனம்பி

இடம்: கன்னியாகுமரி மாவட்டம். கன்னியாகுமரி கிராமத்துக்கு அருகில் உள்ள குகாநாத சுவாமி கோவிலில் உள்ள கல்வெட்டெழுத்து.

பதிப்பு : திருவாங்கூர் சாசனங்கள், பக்கம் 169. (T. A. S. Page 169.)

விளக்கம் : குகாநாத சுவாமி கோவில் என்னும் பெயருடன் இப்போது இடிந்து கிடக்கிற இந்தக் கோவிலின் பழைய பெயர் இராஜ இராஜேசுவரம் என்பது. இது, சோழ மன்னன் இராஜராஜன் காலத்தில் கட்டப்பட்டது. சோழ மன்னனுடைய அமைச்சன் மங்கலக்கால கிழான் ஆன அய்யனம்பி என்பவர், கன்னியாகுமரியில் தண்ணீர்ப் பந்தல் அமைத்ததை இச்செய்யுள் கூறுகிறது.

### சாசனச் செய்யுள்

தெண்டிரைநீர்த் தென்குமரி மாநகர்த்தண் ணீர்ப்பந்தல்
எண்டிசையும் ஏத்த வினிதமைத்தான்—விண்டிவரும்
ஐந்தெரியலான் அய்யனம்பி அடல்வளவன் மந்திரி
தென்மங் கலக்கால மன்.

---

## ஐயனம்பி

இடம் : கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி கிராமம், குகாநாத சுவாமி கோவிலில் உள்ள சாசனம்.

பதிப்பு : திருவாங்கூர் சாசனங்கள், பக்கம் 170. (T. A. S. Page 170.)

விளக்கம் : கன்னியாகுமரியில் தண்ணீர்ப்பந்தல் அமைத்த மங்கலக்கால கிழான் அய்யனம்பி, ஷ தண்ணீர்ப் பந்தல் நடைபெறுவதற்காக மணற்குடி என்னும் ஊரில் நிலம் தானங் கொடுத்ததைக் கூறுகிறது இச் செய்யுள்.

*சாசனச் செய்யுள்*

மானமிக்க வேல்ஐயன் மங்கலக்கா லமன்குமரித்
தானமைத்த பந்தலிற்றண் ணீரட்ட—தேனரைத்த
மயத்தங்கு சோலை மணற்குடியிலே வைத்தா
னித்தம் பதிறுழி நெல்.

---

## திருவிக்கிரமன்

இடம் : திருவாங்கூரைச் சேர்ந்த வாழ்விச்ச கோட்டம். இவ்வூர்ப் பகவதி கோவிலின் முகமண்டபத்தில் உள்ள வட்டெழுத்துச் சாசனம்.

பதிப்பு : திருவாங்கூர் சாசனங்கள் ; ஆறாந் தொகுதி, எண் 125. (No. 125. T. A. S. Vol. VI. Part II.)

விளக்கம் : இந்தக் கிராமத்தின் பெயராகிய வாழ்விச்ச கோட்டம் என்பது வாள்வைத்த கோட்டம் என்பதன் திரிபு. கோட்டம் - கோவில். இவ்வூர்ப் பகவதி கோவிலில் உள்ள உருவம் கொற்றவையின் (மகிடாசுரமர்த்தனியின்) உருவம். கொற்றவை, போர்வீரர்களின் வெற்றித் தெய்வம். ஆகையி

ளுலே, போரை வென்ற அரசன் தனது வெற்றிவாளைக் கொண்டுவந்து, கொற்றவையின் முன்பாக இரத்தத்தைக் கழுவிக் கறைபோக்கி வைப்பது வழக்கம். அந்த வழக்கப்படி முன் ஒருகாலத்தில் திருவாங்கூரை அரசாண்ட அரசன் ஒருவன் தன் வெற்றிவாளின் இரத்தக் கறையைக் கழுவி வைத்த கோவில் ஆகையால், இக்கோவிலுக்கு வாள்வைத்த கோட்டம் என்று பெயர் உண்டாயிற்று. பிறகு, இந்தக் கோவிலின் பெயரே இந்த ஊருக்கும் பெயராக அமைந்தது.

கொல்லம் ஆண்டு 795-இல் (கி. பி. 1620-இல்) இரவிவர்மன் காலத்தில் இந்தக் கோவிலின் முன்மண்டபத்தைத் திருவிக்கிரமன் என்பவர் ஒரே கல்லினுல் கட்டியமைத்ததை இந்தச் செய்யுள் கூறுகிறது.

## சாசனச் செய்யுள்

ஆதியெழு நூற்றுடன்தொண் ணூற்றையா மாண்டி
 லற்பசியேழ் முற்றசமி யவிட்டம் வெள்ளி
மாதிசைசே ரின்னுளி லிரவி வேந்தன்
 மனமகிழப் பகவதிவாள் வைத்த கோட்டத்
தோதிலுறு மிறைவியிருப் பதற்கு மேன்மை
 யுறும் முகமண்டப மாமதற்கு நாப்பண்
மூதறிவா லொருகலின் மண்டபஞ் செய்வித்தான்
 முல்லை மங்கலவன் திருவிக்கிரமன் தானே.

குறிப்பு:—பழந் தமிழரின் போர் முறையிலே, உழிஞைத் திணையில் வாண்மண்ணுநிலை என்னும் ஒரு துறை உண்டு. அது, புறப்பொருள் வெண்பாமாலையில் (உழிஞைப் படலம், வாண்மண்ணு நிலையில்) இவ்வாறு கூறப்படுகிறது:

"புண்ணிய நீரிற் புரையோ ரேத்த
மண்ணிய வாளின் மறங்கிளர்ந் தன்று."

'உயர்ந்தோர் துதிப்பத் தீர்த்த நீராலே மஞ்சனமாட்டிய வாளினது வீரத்தைச் சொல்லியது.' (பழைய உரை)

" தீர்த்தநீர் பூவொடு பெய்துதிசை விளங்கக்
கூர்த்தவாள் மண்ணிக் கொடித்தேரான்—பேர்த்து
மிடியார் பணைதுவைப்ப இம்மதிலுள் வேட்டான்
புடையா ரறையப் புகழ்."

'தீர்த்த நீரும் மலருஞ் சொரிந்து திக்கு விளங்கக் கூரிய வாளினை மஞ்சனமாட்டிப் பதாகையாற் சிறந்த தேரினையுடையான் இரண்டாவதும் உருமேற்றையொக்கும் வீரமுரசு ஆர்ப்ப இந்த அரணிடத்தே களவேள்வி வேட்டான், பக்கத்துள்ள மன்னரெல்லாம் தன் கீர்த்தியைச் சொல்ல.' (பழைய உரை)

தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், 68-ஆம் சூத்திரத்தில் கூறப்படுகிற வாள்மண்ணுதல், வாண்மங்கலம் என்பதையும் காண்க. கீழ்க்கண்ட ஆங்கில வெளியீடுகளில் உள்ள ஆங்கிலக் கட்டுரைகளையும் காண்க. *Balgalchchu, Epigraphia Indica Vol. VI. Page 55; A note on the word Balgalchchu, The Indian Antiquary Vol. XL (1911) P. 98.*

---

## தாமோதரன்

இடம் : திருவாங்கூரைச் சேர்ந்த வாழ்விச்ச கோட்டம் என்னும் ஊரில் உள்ள பகவதிகோவில் வட்டெழுத்துச் சாசனம்.

பதிப்பு : திருவாங்கூர் சாசனங்கள், தொகுதி ஆறு, எண் 126. (No. 126. T. A. S. Vol. VI. Part II.)

விளக்கம் : இவ்வூர்ப் பகவதி கோவிலில், முல்லை மங்கலத்துத் தரணிதரன் என்னும் தாமோதரன் திருப்பணிகள் செய்து கொல்லம் ஆண்டு 798-இல் (கி.பி. 1623-இல்) காலஞ்சென்றதை இச்செய்யுள் கூறுகிறது.

*சாசனச் செய்யுள்*

எத்திசையும் புகழ்பெறவே மருவு கொல்லம்
　　எழுநூற்றுத் தொண்ணூற்ரே டெட்டா மாண்டில்
ஒத்துவளர் பங்குனி நாலாரே டொன்றில்
　　லொத்துநிற்குங் கார்த்திகைமுன் மூன்ரும் பக்கம்
சத்திய வாசகன் முல்ல மங்கலத்து
　　தரணிதர னெனும் தாமோதர னன்பாக
பக்தியினுல் திருப்பணிகள் பலவும் செய்தே
　　பரலோகமடைந்து அரன்பொற் பாதம்பெற்ருனே.

---

## இராசகண்ட கோபாலன்

இடம் : *சித்தூர் மாவட்டம், திருமலை திருப்பதியில் உள்ள மேளம் மண்டபத்தின் தெற்குப்புறச் சுவரில் உள்ள சாசனம்.*

பதிப்பு : *திருப்பதி தேவஸ்தானத்துச் சாசனங்கள் ; எண் 80.* (No. 80. T. D. I. Vol. I.)

விளக்கம் : *இராசகண்ட கோபாலன் என்னும் சிற்றரசனின் கைவண்மையைப் புகழ்கிறது இச் சாசனச் செய்யுள். இராசகண்ட கோபாலன் கி. பி. 13-ஆம் நூற்ருண்டின் இடைப் பகுதியில் தொண்டைநாட்டின் வடபகுதியை அரசாண்டான்.*

*சாசனச் செய்யுள்*

எத்தலமும் ஏத்து மிராசகண்ட கோபாலன்
கைத்தலத்தின் கீழோர்க் கையில்லை—இத்தலத்தி
லுண்ணுதா ரில்லைஇவன் சோறுணு மிவன்புகழை
எண்ணுதா ரில்லை யினி.

---

# ஔபளநாதன்

இடம் : *சித்தூர் மாவட்டம், சந்திரகிரி தாலுகா, திருப்பதி திருமலையில் உள்ள ஸ்ரீநிவாசப்பெருமாள் கோவில் முதல் பிராகாரம் தென்புறச் சுவரில் உள்ளது இச்செய்யுள்.*

பதிப்பு : *தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு; எண் 297.* (No. 297. S. I. I. Vol. IV.)

*திருப்பதி தேவஸ்தானத்துச் சாசனங்கள்; முதல் தொகுதி, எண் 117.* (No. 117. T. D. I. Vol. I.)

விளக்கம் : *ஔபளநாதன் என்பவர், திருவேங்கடப் பெருமாளுக்குத் திருக்கைமலர் (கைக்கவசம்) தானம் செய்ததை இச்செய்யுள் கூறுகிறது.*

### *சாசனச் செய்யுள்*

ஓதவளர் வண்மை யொபளநாதன் தஞ்சை
யாதவர்கோன் வாழ வினிதூழி—போத
மருக்குலவுஞ் சோலை வடவேங்கட வாணர்க்குத்
திருக்கைமலர் தந்தான் சிறந்து.

குறிப்பு :—இரண்டாம் அடியில், வாழவினிதூழி என்றிருப்பது வாழ்க வினிதூழி என்றிருத்தல் வேண்டும். மரு - மணம். இதில் கூறப்படுகிற ஔபளநாதன் ஹொபள யாதவன் ஆவான். இவன் யாதவராயர் என்னும் அரச பரம்பரையைச் சேர்ந்தவன் போலும்.

---

# புடோலி அரசன்

இடம் : சித்தூர் மாவட்டம், சித்தூர் தாலுகா, மேல்பாடி கிராமத்துச் சோமநாதேசுவரர் கோவில் மகாமண்டபத்தின் தெற்குச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள்; தொகுதி நான்கு, எண் 317. (No. 317. S. I. I. Vol. IV.)

விளக்கம் : இந்தச் சோமநாதர் கோவில், முற்காலத்தில் சோளேந்திரசிங்கர் கோவில் என்று பெயர்பெற்றிருந்தது என்பது இந்தச் செய்யுளினால் தெரிகிறது. இந்தச் செய்யுளுக்கு மேலே இவ்வாக்கியம் எழுதப்பட்டிருக்கிறது :

"இராஜராஜ தேவற்கு யாண்டு எட்டாவது. சிறை மீட்ட பெருமாளான சீயகங்க தேவர் மாமன் மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன் புடொலி அரசன் இத் திருமண்டபம் செய்வித்தேன்."

*சாசனச் செய்யுள்*

பொத்தப்பிச் சோழன் புடொலி அரசன் புவிமே<br>
லெத்திசையுஞ் செல்லும்எழில் மேற்பாடி–மெய்த்தவத்தாற்<br>
சோளேந்திர சிங்க நாயகற்குத் துகவமணி<br>
வாளேந்து மண்டபஞ் செய்தான்.

குறிப்பு :—மூன்றும் அடியில் 'துகவமணி' என்றிருப்பது 'துங்கமணி' என்றிருக்க வேண்டும்.

---

# நம்பி அப்பி

இடம் : சித்தூர் மாவட்டம், திருத்தணி டிவிஷன், திருத்தணி. இவ்வூரில் உள்ள வீரட்டானேசுவரர் கோவிலின் தென்புறச் சுவரில் உள்ளது இச் சாசனச் செய்யுள்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள், தொகுதி பன்னிரண்டு, எண் 94. (No. 94. S. I. I. Vol. XII.)

விளக்கம் : திருத்தணிகை வீரட்டானேசுவரர் கோவில், யானைக்கோவில் (கஜபிருஷ்ட விமானம்) ஆக அமைந்திருக்கிறது. இக் கற்றளி, அடிமுதல் முடிவரையில் கருங்கல்லினால் கட்டப்பட்டது. இதனைக் கட்டியவர் நம்பி அப்பி என்பவர். இது, பல்லவ மன்னன் அபராஜித வர்மன் காலத்தில் கட்டப்பட்ட கோவில். இந்தச் சாசன வெண்பாவைப் பாடியவன் அபராஜித வர்மனே.

அபராஜிதவர்மன் பல்லவ அரசர்களில் கடைசி அரசன். பல நூற்றாண்டுகளாகப் பல்லவ அரசர்களுக்குக் கீழடங்கியிருந்த சோழ அரசர், அபராஜித வர்மனை வென்று சோழப் பேரரசை நிறுவினார்கள்.

### சாசனச் செய்யுள்

" திருந்து திருத்தணியில் செஞ்சடை யீசர்க்குக்
கருங்கல்லால் கற்றளியா நிற்க—விரும்பியே
நற்கலைக ளெல்லாம் நவின்றசீர் நம்பிஅப்பி
பொற்பமைய செய்தான் புரிந்து.

இ வெண்பா பெருமானடிகள்தாம் பாடி அருளுத்து."

குறிப்பு:—வெண்பாவின் கீழுள்ள வாக்கியத்தில், பெருமானடிகள் என்பது அபராஜித வர்மன் என்னும் பல்லவ அரசனைக் குறிக்கிறது. 'பாடி அருளுத்து' என்றிருப்பது 'பாடி அருளியது' என்றிருக்க வேண்டும்.

இந்தச் சாசனம் உள்ள வீரட்டானேசுவரர் கோவில், பல்லவ அரசர்கள் கட்டிய கடைசி கோவில் என்பதையும், இக் கட்டடத்தின் சிறப்பியல்புகளையும் வெளிப்படுத்தியவர், பிரெஞ்சுக்காரராகிய ழூவோ தூப்ராய் ஆவார். இவர் எழுதிய *Pallava Antiquities Vol. II* என்னும் நூலில் இக்கோவிலைப் பற்றிக் காணலாம்.

---

## காமவில்லி

இடம் : *சித்தூர் மாவட்டம், கீழ்த் திருப்பதியில் அலிபிரி என்னும் இடத்தில் உள்ள பெரியாழ்வார் கோவிலின் மேற்குப்புறச் சுவரின் உட்பக்கத்தில் உள்ள சாசனம்.*

பதிப்பு : *திருப்பதி தேவஸ்தானத்துச் சாசனங்கள் ; முதல் தொகுதி, எண் 177.* (No. 177. T. D. I. Vol. I.)

விளக்கம் : *பூவை நகரத்துக் காமவில்லி என்பவர், அம்மை ஏரி என்னும் ஏரியைத் திருவேங்கடப்பெருமாளுக்குத் தானமாகக் கொடுத்ததைக் கூறுகிறது இச்செய்யுள்.*

### *சாசனச் செய்யுள்*

கைப்பயலாம் பூவைநகர்க் காமவில்லி சர்ப்பகிரி
யப்பனுக்கு நற்பொலியூட் டாக்கினன்—ஒப்பாவா
லென் னம்மை முப்பத் திரண்டறமுங் கற்பித்த
தன்னம்மை ஏரி தனை.

குறிப்பு :—'கைப்பயலாம்' என்றிருப்பது 'கைப்புயலாம்' என்றிருக்கவேண்டும். சர்ப்பகிரியப்பன் - சேஷாத்திரிநாதன், வேங்கடேசப்பெருமாள். வேங்கடமலைக்குச் சேஷாத்திரி என்னும் பெயரும் உண்டு.

---

# நின்ருடுவான்

இடம்: ஆந்திர தேசத்துக் கோதாவரி மாவட்டம், இராமச்சந்திரபுரம் தாலுகா, திராட்சாராமம் என்னும் ஊரில் உள்ள பீமேசுவரர் கோவில்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள்; தொகுதி நான்கு, எண் 1026. (No. 1026. S. I. I. Vol. IV.)

விளக்கம்: திராட்சாராமத்தின் பெயர் தமிழில் இடர்க்கரம்பை என்று கூறப்படுகிறது. வீமேச்சரர் கோவிலில் நந்தாவிளக்கு எரிப்பதற்காக நின்ருடுவான் என்பவர் தானம் செய்ததை இச்செய்யுள் கூறுகிறது. இந்தச் செய்யுளின் கீழே, தெலுங்கு எழுத்தில், "லிகித: வீரராஜேந்த்ர ஆசரியன்" என்று எழுதப்பட்டுள்ளது. இதனுல், இந்தக் கல்வெட்டெழுத்தைச் செதுக்கியவன் பெயர் வீரராஜேந்திர ஆசாரியன் என்பது தெரிகிறது.

### சாசனச் செய்யுள்

இம்பர் நிகழ விளக்கிட்டான் இடர்க்கரம்பைச்
செம்பொனணி வீமேச்சரந் தன்னில்—உம்பர்தொழ
விண்ணுய்ய நின்ருடு வானுக்கு வேலைசூழ்
மண்ணுய்ய நின்ருடு வான்.

குறிப்பு:—இதே இடத்தில் உள்ள 1027 எண்ணுள்ள சாசனமும் தமிழ்ச் செய்யுளே. இதில், இடையிடையே எழுத்துக்கள் மறைந்துவிட்டபடியால் அச்செய்யுளை இங்குத் தரவில்லை.

---

# பஞ்சநதி முடிகொண்டான்

இடம் : ஆந்திர தேசத்துக் கோதாவரி மாவட்டம், இராமச்சந்திரபுரம் தாலுகா. திராட்சாராமம், பீமேசுவரர் கோவிலில் உள்ள சாசனம்.

பதிப்பு : தென் இந்திய சாசனங்கள் ; தொகுதி நான்கு, எண் 1338. (No. 1338. S. I. I. Vol. IV.)

விளக்கம் : திராட்சாராமம் என்னும் ஊர் தமிழில் இடர்க்கரம்பை என்று கூறப்படுகிறது. பீமேசுவரர் கோவிலில் நந்தாவிளக்கு எரிப்பதற்குத் தானம் செய்ததை இச் செய்யுள் கூறுகிறது.

*சாசனச் செய்யுள்*

புயல்மேவு பொழிற்றஞ்சை முதல்பஞ்ச
நதிவாணன் புதல்வன் பூண்ட
வயல்மேவு களியானை முடிகொண்டான்
மாநெடுவேல் வத்தர் வேந்தன்
இயல்மேவு தோளபயற் கிருபத்தை
யாண்டில் இடர்க் கரம்பைச்
செயல்மேவு மீசர்க்குத் திருநந்தா
விளக்கொன்று திருத்தி னானே.

குறிப்பு :—முடிகொண்டான் - பஞ்சநதி முடிகொண்டான். வத்தர்வேந்தன் - வத்தராசன். இவனுடைய முழுப் பெயர், ''திருவிந்தளூர் நாட்டுக் கஞ்சாதன் பஞ்சநதி முடிகொண்டானை வத்தராயன்'' என்று சாசனத்தில் காணப்படுகிறது. இவன் சோழ அரசனின் உத்தியோகஸ்தன். இடர்க்கரம்பை ஈசர் - இடர்க்கரம்பையில் கோயில்கொண்டுள்ள பீமேசுவரர்.

## கங்கப்பெருமாள்

இடம்: மைசூர், கோலார் தாலுகா, விபூதிபுரம். இவ்வூரில் இடிந்துகிடக்கும் ஜலகண்டேசுவரர் கோவிலில் உள்ள சாசனம்.

பதிப்பு: கர்ணடக சாசனங்கள், பத்தாந் தொகுதி; கிரந்த - தமிழ் சாசனங்கள். கோலார் தாலுகா, எண் 132. (Epigraphia Carnatica Vol. X. Inscriptions in Grantha and Tamil, Kolar Taluk. No. 132.)

விளக்கம்: சகர ஆண்டு 1101-இல் (கி.பி. 1179-இல்) கங்கப்பெருமாள் என்னும் சிற்றரசன் இங்குக் கோவில் அமைத்து அதற்குத் தானங்களை வழங்கினதைக் கூறுகிறது இந்தச் செய்யுள்.

### சாசனச் செய்யுள்

திருமகள் துணைவன் ஜயமகள் நாயகன்
இருநிலங் காவல னிளங்கோன் தழைசைமன்
வடதிசை மேருவில் வாரணம் பொறித்தோன்
குடதிசை யிந்துவின் குலமுதற் சிறந்தோன்
தென்திசைக் காவிரிச் செழுநீர் கடந்தோன்
வந்திசைப் புரிந்தான் வானவன் கோன்றன்
சென்னியிற் கையவன் கத்தவன் திருக்கிர
பொன்னி ஞரமு மீரமும் புனைந்தோன்
எண்டிசை யமரரு மியமனு நடுங்கிப்
பண்டுவெங் காளி பரிகலம் பறித்தோன்
நீணெடுங் குன்றகந் துணித்து நாகர்
கீணிலை யாலக மேபச யாண்மையி
லரசுப் பெடியத் தாக்கி யாங்கவர்
முரைசம் கவர்ந்து மாடகலத்தம ராயன்

முத்தி . ட பருணிதன் முசுகுந்த கிரிநாதன்
வண்டர் பாவன் விக்கண்டனடன வாத்தன்
புரவா தீசன் செல்வன் பெயரால்
மற்றவன் திருமகள் பலவழங்கு கற்பின்
மாதேவி யென்பாள் பஞ்சவர் தூதன்
பாணுரி புத்திரன் வெஞ்சிலைத் தடக்கை
வீர கங்கன் நடுற்ற சிற்றநதனர்
சாரமன் தொடுகடற் ருனைத் தோன்றற்
கிளையவள் வெங்கணுன் விக்கிரமா திற்தற்குத்
தங்கை கூத்தற்குத் தான்முன் சிறந்தவள்
ஓடக் கொற்றத் தோங்கிய முக்கடக
வாதங் கோன் கச்சி காவலன் நறு
தென்னனை யடுகளத் தட்டு வென்ற
மாகடந்த பன விரியுர வேந்தன்
பொன்பன பொன்புண் கெடுவெபங் காக்கு
மெழிற்கங்கப் பெருமாள் அத்தை வாழி
யகலிடத் தெல்லாச் செல்வமும் தோற்றமும்
யாவையு நில்லா வென்னும் நிலமை யோதி
அருந்தவம் புரிந்த சிந்தைய ளாகி
யிருந்தறஞ் செயிவர தியால்பென்ன யெண்ணி
சுற்றும் புரிசையுந் தோரணவா யதலுங்
கற்றளி யதுவுங் கவின்பெற வமைத்து
நந்தன வனமுந் திருமடைப் பள்ளியு
மமைந்தனிக் குளமும் மடைவிளாகமும் பாகுத்து
ஒற்றைச் சங்கும் இரட்டை தாரையும்
மற்றும் பலபல வாச்சியங்களும் பட்டமு
மணிபூம் பாரிகல் பகருமடெ புற்றகட்டும்
பலபடி நிமந்த பரிசிநு கருளியன்
றெழிற்சகரிற் ருயிரத் தொருநூற் றுன்றென
அறிஞரும் உரைத்த நாளில் அணியுஞ்
சந்தமு மகிலு மாரமு மணியும்

பொன்னும் வருபுனற் சாரற் கொங்கலர்
கூவளை கூநறிடை யுமையொடு
சங்கரன் றன்னை தாபித் தனனே.

குறிப்பு :—இந்த அகவற்பாவைக் கல்லில் வெட்டின சிற்பியின் தவறுதலால் இடையிடையே எழுத்துக்கள் பிறழ்ந்துள்ளன. இதனைப் பாடிய புலவர் இச்செய்யுளை நன்கு இயற்றியிருக்கிறார். ஆனால், தமிழறியாத கற்றச்சனால் இச்செய்யுளில் பிழைகள் காணப்படுகின்றன.

---

## பிரமராயன்

இடம் : மைசூர், சிட்லகட்ட தாலுகா, ஜங்கம கோட்டை, கொல்ல ஹள்ளி கிராமத்தின் வடக்கில் உள்ள பைரண்ணன் நிலத்தில் உள்ள தமிழ்ச் சாசனம்.

பதிப்பு : கர்னடக சாசனங்கள், பத்தாந் தொகுதி; கிரந்த - தமிழ் எழுத்துச் சாசனங்கள், சிட்லகட்ட தாலுகா, எண் 9. (Epigraphia Carnatica, Vol. X. [Inscriptions in Grantha and Tamil] Sidlaghatta Taluk. No. 9.)

விளக்கம் : உதயமார்த்தாண்ட பிரமராயன் என்பவர், சோமீச்சுரக் கோவிலைக் கட்டி அதற்கு வேண்டிய நிலபுலங்களைத் தானம் செய்ததை இந்தச் செய்யுள் கூறுகிறது.

### சாசனச் செய்யுள்

ஸ்வஸ்திஸ்ரீ சக வருஷம் ஆயிரத்து நாற்பத்திரண்டு.

பூமகள் புணரப் புகழது வளரப்
புவியோர் போற்ற வெங்கலி கடிந்து
செங்கோ லோச்சிப் பூழி வேந்தன்
கோழியர் குலபதி ஸ்ரீராஜ ராஜன்
ஸ்ரீவிக்கிரம சோழ தேவர்க்

கியாண்டிரண் டதனில் நாரா நிகரிலி
சோழமண் டலத்துக் காரார் வயல்சூழ்
கைய்வர நாட்டுள் மாட மாளிகை
மண்டப மோங்கிய கூட . . . கொற்ற
வாயதல் பாகட்டூர் . . . . . . . . . ம்
பாவையர் நடம்பயில் சூகுட் டூரில்
தொன்னில நிகழத் தருமொரு நல்குந்
தன்ம . . னருமொழிச் சதுப்பேதி மங்கலத்துப்
பல்லோர் புகழும் நல்லோர் முதல்வன்
மாத்திரை யதனில் மாநெதி நல்கும்
மாத்திரை யர்கோன் ஞதுலர் சாலை
பாண மாத்தும் பார்ப்பனப் பெருமாள்
சாமுண் டையன் றன்பெருந் தேவி
பூச்செறி குழலாள் விச்சமை பயந்த
தண்டமி ழாலையன் தாரணி ஏத்து
மெண்டிசை நிகழு மிருபிறப் பாளன்
கொண்ட லன்ன குவலய தந்திரஞன
வோங்கு புகழான் உதையமார்த் தாண்ட
பிரம்ம ராயன் தேன்கமழ் தாரோன்
செழுமறை வாணன் தன்றிருத் தமையன்
றன்பெய ராலே பொன்புரி சடையணிப்
புண்ணியன் விண்ணவர் நாமீச்சர . . . .
. . னி தேத்திய சோமீச்சரந் திருக்கோயி
லெடுப்பித் . . . . . . . . . சிறந்து
. . . லாண மிசைப்ப திருப்பிர திஷ்டை
நிகழப் பண்ணி திருவடி நிலையுஞ்
செம்பொனு லமைத் துருவது வளர
உமாசகிதன் திருமேனி யிருநிலம் போற்ற
வெழுந்தரு ளுவித்துக் கேதகை மல்லிகை
கிஞ்சுக மஞ்சரி பாதரி புன்னை
பராரை யாரமகிழ் சிதலை மௌவல்

செருந்தி செண்பக மாதவி என்றிவை
வளம்பெற வமைத்துச் செங்கண் விடையோன்
சென்னி மன்னுங் கங்கை நீரு
மண்ணுங் குணர்ந்து குருக்கள் குளிரக்
கோயில் மேல்பாற் றிருக்குள மாகத்
தீர்த்தங் கண்டு செழுநில மேத்தக்
கொட்டுந் தட்டுங் குலவி நிலவ
விருப்புறு மடியார் மேவிமுன் சிறக்கத்
திருப்படி மாற்றுக்குத் தேவர் தானமாகப்
பெரிஏரியில் நிலமோ ராயிரமுஞ்
சிற்றேரியில் நிலமோ ராயிரமுஞ்
சீரார் செந்தமி ழோர்களிப் பார
வீரா யிரங்குழி . . னிற் றிகழக்
குணபதி யாயெங் குற்றங் கடியுங்
கணவதியார் குமரர்க் கிருநூறு குழியு
மாராய ஞன பிரா . . . . . . ன
சூரிய தேவர்க் கிருநூறு குழியு
மஞ்சொல்லா . . . . ததவ . . . . செய்வான்
றிருக்களத்து மேல்பாற் பாலை நன்நில
மொருவே லியுநற் பண்ணையும் . ழிந .
பெண்ணை மேல்பாற் பசுவூர் நாற்பா
லெல்லை யுட்பட நன்செய் புஞ்சை
நன்னில நிகழு நான்மறை யவர்பாற்
பொன்னற விட்டு மண்ணறக் கொண்டு
தாரணி நிகழத் தன்கிளை வளரச்
சந்திரா தித்தர் தாமுள் ளளவும்
ஊழி ஊழி யுரவுபெற வமைத்தனன்
வாழி வாழி வையத் தினிதே.

குறிப்பு :—இச்செய்யுளின் இடையிடையே எழுத்துக்கள் மறைந்துவிட்டபடியால், சில சொற்களின் உருவங்கள் தெரிய

வில்லை. சாசனத்தைக் கல்லில் வெட்டியவரின் கைப்பிழையால் சில சொற்கள் பொருள் விளங்காமலிருக்கின்றன.

வரி 15. மாநெதி - மாநிதி. வரி 33. உமாசகிதன் திருமேனி - உமாமகேசுவர மூர்த்தம். உமையும் மகேசுவரனும் ஒரே ஆசனத்தில் சுகாசன மூர்த்தமாக எழுந்தருளிய உருவம். வரி 40. குணர்ந்து - கொணர்ந்து, கொண்டுவந்து. வரி 60. "பொன்னறவிட்டு மண்ணறக் கொண்டு" இத்தொடர்மொழி வேறு பழைய சாசனங்களிலும் காணப்படுகிறது. 'பொன்னறக் கொண்டு மண்ணறக் கொடுத்தோம்', 'பொன்னற இட்டு மண்ணறக் கொண்டேன்', 'பொருளற இட்டு விலையறக் கொண்டு' என்று சாசனங்களில் காணப்படுகின்றன. வரி 20, 61. தாரணி என்பது தரணி என்றிருத்தல் வேண்டும். தரணி - நிலம், பூமி.

---

## பெரியான்

இடம் : மைசூர், கோலார் தாலுகா, விபூதிபுரத்திலுள்ள ஜலகண்டேசுவரர் கோவிலில் உள்ள சாசனக் கவி.

பதிப்பு : கர்னடக சாசனங்கள், பத்தாந் தொகுதி. கிரந்த - தமிழ் சாசனங்கள். கோலார் தாலுகா, எண் 131. (Epigraphia Carnatica Vol. X. Part II. Kolar Taluk No. 131.)

விளக்கம் : குவளாலபுரத்து (கோலார்) ஏரியின் கீழ் உள்ள நிலங்களைத் தானம் செய்த பெரியான் என்பவரைப் புகழ்கிறது இச்செய்யுள். இந்தத் தானம், சகரை யாண்டு 1120-இல் (கி. பி. 1198-இல்), விக்கிரம கங்கன் என்னும் அரசன் காலத்தில் செய்யப்பட்டது.

### சாசனச் செய்யுள்

அலைகடல் உடுத்த மலர்தலை யுலகத்
தெண்ணருங் கீர்த்தி இசையா ரதிபன்
அண்ணலெங் குளந்தை யமரன் காதலன்
கோதில் புகட்குவ ளாலமா நகரங்

குடியேற்றிய ஆதிவணி கேசன்
அளகைப் பதியுந் தானுடை யோன் . . .
திரைலோக்ய பட்டண ஸ்வாமி ஐய்யனருட்
சீராசைத் தேவ னுடனவ தரித்த
ஆயிழை யாளுய்ய . . ண்டை
அருந்ததியே யனையாள் தந்தாய்
திருவயிற் றுதித்த துளங்குமணித் திருமார்பன்
செங்கமலப் புனல் புடைசூழ் செழுந்
தொண்டை வளநாடன் எங்கள் பெரியாற்
கிளைய பெரியான் மற்றீண் டுலகில்
ஒப்பரிய சகரையாண் டோரா யிரத்துமேற்
செப்பரிய நூறு கடந் திருபதுதான்
சென்றதற்பின் வென்றிபுனை கடாக் களிற்று
விக்கிரம கங்கன் குன்றெறிந்த கூரிலைவேற்
கொற்றவனை யிடுவித்துக் கொத்தலரும் பூம்புனல்சூழ்
குவளாலத் தேரிதனில் உத்தமத்தே
நீர்நில மற்றெருரு வெலயு மாளு
சோலை யதனுக்கு வடமேற்கே விடுவித்துத்
திருச்செல்வம் பல பெருக்கிச்
சி . . லியு முப்பொழுதுங் கருத்தமைய
வெழுந் தருளும்படி நிமந்தங் கட்டுவித்துச்
சந்திரா தித்தவரை திருப்புகழ் நிறுத்தி
நிந்த ளுரிலத் தினிதுவாழ் கெனவே.

ஸ்ரீ மாஹேஸ்வரரும் ஐந்நூற்றுவரும் ரக்ஷை.

குறிப்பு:—வரி 4. குவளால மாநகரம், இப்போது கோலார் என்று வழங்கப்படுகிறது. வரி 21. வெலயுமாளுசோலை என்னும் சொல்லின் சரியான உருவம் தெரியவில்லை. கடைசி வரியில், நிந்தளுரிலத்தினிது என்றிருப்பது, 'இந்த நானிலத் தினிது' என்றிருக்கவேண்டும்.

# செட்டிதேவன்

இடம் : மைசூர், சிந்தாமணி தாலுகா, உபாரபேட்டைக் கிராமத்தில் உள்ள சாசனச் செய்யுள்.

பதிப்பு : கர்னடக சாசனங்கள், பத்தாந் தொகுதி. கிரந்த - தமிழ் சாசனங்கள். சிந்தாமணி தாலுகா, எண் 83. (Epigraphia Carnatica Vol. X. Inscriptions in Grantha and Tamil. No. 83.)

விளக்கம் : சக ஆண்டு 1101-இல் (கி. பி. 1179-இல்) செட்டி தேவன் என்பவர் தம் பெயரால் செட்டீச்சரம் என்னும் கோவில் அமைத்து அதில் சிவபெருமானை எழுந்தருளுவித்து அக் கோவிலுக்கு நிலபுலங்களைத் தானம் செய்ததைக் கூறுகிறது இந்தச் சாசனம்.

*சாசனச் செய்யுள்*

தேனுருஞ் செங்கமல மாதுபுணருந் தோளான்
கானுரும் விந்தைமகன் காதலாம் பூநாடும்
வண்டறியாத் தாமரையோன் தன்மரபில் வந்துதித்த
கண்டன் கவுண்டல்லிய கோத்திரத்தான் எண்டிசையும்
சாலிவயல் புகுந்து சண்பகப்பூஞ் சோலைதொறும்
பாலிமணி சிந்திப் பரந்தோங்கி யால . . . . துச்
செய்யார் கு . . புழக்கிச் செங்கமலப் பொய்கைபுகுங்
கைய்வார நாடன் மிகுங்கார்மே பொய்யாத
கங்கையிலுந் தூயபிரான் கண்டார் வல்லவனும்
அங்கைமுகில் அமுதன் தன்புதல்வ . . . ங்களுக்கு
மாதர் மறையோன் மநுநெறிஇம் மாநிலத்தின்
தாதாதயர் வளர்க்குந் தண்ண . . . ஞ்சி . . . ராக்கிரம
. . . . ன . . ருடி . . . கு . . . . தாமரைப்பூ . . . . . . ழ
துட்டராதித்தன் துர்க்குல நகுலன் செட்டிதேவன்

. . . . ன்மாதாரு மட்டுலவு நாகஞ் சுமந்திட
ஞாலமெலாந் தானிகழு . . ன் பிரமாதிராயன்
மிகவோகை யோடு மாதவியேமுல்லை வருக்கைகமழ்
சந்தனமே சூதவனமேதா புன்னை போதலரும்
சோலைவயல் தோறுஞ் சுரும்பினங்கள் பண்பாட
வேலையது போலும் விதிர்ச்செட்டில் ஆலிலைமேற்
பள்ளிகொண்ட மாலும் பதுமத்தோனுங் காணு
வெள்ளிமலை நாதன் மிகவிரும்ப வொள்ளுதிருக்
கற்றளியு முகமண்டபமு முருப்பெறச்செய் தூழிபல
வாழப்பெருக்கும் சகவருஷம் ஆயிரத் தொருநூற்
றென்று மிகநல்ல வருவிகாரி புகலுமிடப ஞாயிற்றுப்
பிற்பக்கம் பொன் . . . . திடமான திதிகை திரு . . ழ . . .
பன்னு க . . . . ங்கை பாசத் திருமகளு [மூர்த்தம்
முன்னு கமல மெனவுகப்பப் பன்மறையோர்
பாதத்திற் . . . தி . . வெ . . .ளும் வீற்றிருப்ப மாதவர்கள்
செட்டீச்சர மென்று சி . . . . ட்டுத் திசைக்கு
மெழில் விளக்காய்ச் சிட்டர் தொழ
மண்ணும் வளஞ்சுரப்ப மாமறைகள் தாந்தழைப்ப
விண்ணு மழைபொழிய வெங்கலிபோய் எண்ணிய
சீராருங் கௌசி . . . ன் ராஜராஜபட்டன் வல்லைப்பூமன்
சீரார் சிவ . . றையோன் தனக்கு நீராறப்
பாணியிலே வார்த்துப் பசுபதியைப் பூசித்துங்
காணியதுவுங் கொடுத்து கல்வெட்டி நீணிலத்துக்
கொங்காளுஞ் சோலைசூழ சோழன் . . பொரான
கொங்கர் கோடி மங்கலமுடை . . . . . . ந்தாங்கு
கழதில்லைப் பிரான் அரிவாட்டத்தா யாண்டாரற்கு
கோயில் மல்லைனெதிமாடா பத்தியங்கொடுத்து சொல்ல
பாரசிவன் பம்மனுக்குப் பல்லியங்கள் வாசிக்கப் [ரிய
பேராப் பெருங்காணி தான்குடுத்து சீரார்
திருவாபரணம் பொன் ஐங்கழஞ்சாற் பட்டம்
பொருமால் விடையோற்கு . . . . . . . ரும்

வேற்றுப் படாத பரிகல பரிச்சின்னம்
நூற்றுப்பல வெண்கலம் அளித்துத் தோற்றிய
நற்சந்தி மூன்றினுக்கு நல்விளக்கோர் பத்தாக்கிக்
கற்செக் கிரண்டில் . . . யாண்ணை தாங் கொடுத்துக்
கோங்கி . . . . ங்கோலப் பொழில் புடைசூழ்கொத்த
நூருங் கிறையுந் தாலவ . . துச் சாலநல்
சொக்க சமுத்திரத்திற் சோமபாதியுங் கொடுத்து
..க்கும்விதற செட்டில் ஆமுதகட்டும் மாதகட்டும் நீக்கிய
கொல்லை யிருகண்டகமுந் தானங் கொடுத்து [பின்
எல்லையலாத் தன்ம மியற்றியபின் பல்லவையோர்
சொல்லார் புகட்தன்ம . . லையிது சோரா பேய்கள்
மேலெழுதுங் கணக . . . . . சொல்லார்ந்த முத்தமிழோர்
தாம்புகழு மூன்றுநாட்டு மண்டலிகன் அத்தநெறி
....க்கோ ராகரமாம் நித்தந்தருவார் கொடைத்தடக்கைத்
தூயிந் துட்டர்கண்டன் திருவாய் மொழிந்தருளக்கேட்டு
இருமா . . ஞ் சொற்புலவோர் தாம் பு . . . தலூர்
மன்மறையோன வித்தகநற் பூந்துழாய் மார்பனுக்குச்
சித்தந் தளராதவன் பி . . . . செம்பொனருள் நம்பெரு
அளவிலி அறிஞன்ற னெழுத்து பின்னும் [மாள்
பிழையாத வாய்மைப் பிரமதராயன் செட்டி
மழையார் முகில்அங்கை மாதானி பழைய
மறையாலுங் காணவொண்ணுப் பாதன் அரன்
திருமேனி கோயில் குறையா திலக்கணங்களாற்
சமைத்த அறிஞன் அருள்கூர்ந்த நெஞ்சினேன்
. . கிம . . . த்தனமா பொன்பெருகு புகட்சங்கர
செட்டிப்பெயர் இராயாசாரி யென்னு பெயர்
சிட்டர் பலர் செப்பச் சிறப்பித்து மட்டுலவு
சீரார் பொழிற் . . . ஈன்ற கிறைக்குத் தெற்கிற்
கிலேரி சிட்டங் கிறையுங் கொடுத்தான்
இத்தன்மங்கள் சந்த்ரா தித்தியவ . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . .

குறிப்பு :—இச்செய்யுளின் இடையிடையே எழுத்துக்கள் மறைந்துவிட்டபடியால் சில இடங்களில் செய்யுளடியைச் சரியாக அமைக்க இயலவில்லை. இறுதியிலும் எழுத்துக்கள் மறைந்துவிட்டன.

---

## ஆரியச் சக்கரவர்த்தி

இடம் : இலங்கை, கொழும்பு நகரத்துப் பொருட்காட்சி சாலையில் உள்ள ஒரு கல்லெழுத்துச் சாசனம்.

பதிப்பு : தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு; எண் 1413. (No. 1413. S. I. I. Vol. IV.)

விளக்கம் : இலங்கையை அரசாண்ட சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகளில் ஒருவனை இந்தச் செய்யுள் புகழ்கிறது. சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகள் தமிழர் ஆவர். 'சேது' என்பது இவர்களுடைய ஆணைப்பெயர். இவர்களுடைய காசுகளில், படுத்திருப்பது போன்ற எருது உருவமும், 'சேது' என்னும் எழுத்தும் பொறிக்கப்பட்டிருந்தன. இந்த அரசர்கள் இடைக்காலத்திலே, இலங்கையின் சில பகுதிகளை அரசாண்டார்கள்.

*சாசனச் செய்யுள்*

சேது.

கங்கணம்வேற் கண்ணிணையாற் காட்டினார் காமர்வளைப்
பங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார்—பொங்கொலிநீர்
சிங்கைநக ராரியனைச் சேரா வனுரேசர்
தங்கள் மடமாதர் தாம்.

குறிப்பு :—மூன்றும் அடியில், சிங்கை நகர் ஆரியன் என்பது சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியை. அனுரேசர் - அனுரை நகரின் அரசர். அனுரை என்பது அநுராதபுரம். இது இலங்கைத் தீவின் பழைய தலைநகரம். இந்நகரில் இலங்கை அரசர்கள் அரசாண்டார்கள்.

---

# தன்மபாலன்

இடம்: இலங்கைத் தீவின் பழையகாலத்துத் தலைநகர மான அநுராதபுரத்தில், ஆர்க்கியாலஜி சர்வே அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பழைய கல்லெழுத்துச் சாசனம்.

பதிப்பு: தென் இந்திய சாசனங்கள், தொகுதி நான்கு; எண் 1405. (No. 1405. S. I. I. Vol. IV.)

விளக்கம்: இந்தச் சாசனச் செய்யுளின்மேலே ஒரு வடமொழிச் செய்யுளும், அதற்குமேலே, இடையிடையே எழுத்துக்கள் மறைந்துபோன ஒரு தமிழ்ச் செய்யுளும், அதற்குமேலே சாசன வாசகமும் எழுதப்பட்டுள்ளன. எழுத்துக்கள் மறைந்து சிதைந்துள்ள செய்யுளை இங்கு எழுதவில்லை.

## சாசனச் செய்யுள்

போதி நிழலமர்ந்த புண்ணியன்போ லெவ்வுயிர்க்குந்
தீதி லருள்சுரக்குஞ் சிந்தையா—னுதி
வருதன்மங் குன்றுத மாதவன் மாக்கோதை
ஒருதன்ம பால னுளன்.

குறிப்பு:—இந்தச் செய்யுள், மாக்கோதை தன்மபாலர் என்னும் பௌத்த பிக்குவைப் புகழ்ந்து கூறுகிறது. போதி நிழல் அமர்ந்த புண்ணியன் - அரசமரத்தின் கீழே எழுந்தருளியுள்ள புத்தர்பெருமான்.

---

**இணைப்பு :**

## பராந்தகன் வீரநாராயணன்

இடம் : திருநெல்வேலி மாவட்டத்தில் கிடைத்த செப்பேட்டுச் சாசனம்.

பதிப்பு : இந்தச் செப்பேட்டுச் சாசனம் இதற்கு முன்பு வெளியிடப்படவில்லை. முதல்தடவையாக இப்போது வெளியிடப்படுகிறது. இந்தச் சாசனத்தை அன்புகூர்ந்து கொடுத்தருளியவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆராய்ச்சித்துறை விரிவுரையாளரும், சாசன ஆராய்ச்சிப் பேரறிஞருமாகிய **உயர்திரு.** *T. V.* **சதாசிவ பண்டாரத்தார்** அவர்கள்.

விளக்கம் : இந்தச் செப்பேட்டுச் சாசனம் வடமொழியிலும் தமிழ்மொழியிலும் எழுதப்பட்டுள்ளது. முழுவதும் செய்யுளால் ஆனது. வட்டெழுத்தினால் எழுதப்பட்டது. சடையவர்மன் பாண்டியன் பராந்தகன் வீரநாராயணன் என்னும் பாண்டியனின் ஆட்சியில் ஆறுவது ஆண்டில் எழுதப்பட்டது.

களபரரை வென்று பாண்டியர் ஆட்சியை மீண்டும் நிறுவிய பாண்டியன் கடுங்கோன், காடக சோமயாஜி என்பவருக்குச் சோமாசிகுறிச்சி என்னும் ஊரை யாகபோகமாகக் கொடுத்தான். அவன் வழங்கிய செப்பேடு காடக சோமயாஜியின் பரம்பரையார் வசம் இருந்தது. அது பிற்காலத்தில் காணமற்போக, அப் பரம்பரையில் வந்த நாராயணன் கேசவன் என்பவர் ஷை சோமாசிகுறிச்சிக்கு எல்லை குறிப்பிட்டுப் புதிய செப்பேடு எழுதித்தரவேண்டுமென்று

ஸ்ரீ பராந்தக மகாராசனைக் கேட்டுக்கொள்ள, அவ்வரசன், சோமாசிகுறிச்சிக்கு மதுரகரநல்லூரெனப் பெயர்சூட்டி இச் செப்பேட்டுச் சாசனத்தை அளித்தான்.

இந்தச் சாசனம், பிற்காலத்துப் பாண்டியர் பரம்பரையைக் கூறுகிறது. கோச்சடையன் என்னும் ஸ்ரீ வரகுண மகாராசன் (முதலாம் வரகுணன்), அவன் மகன் ஸ்ரீவல்லபன், அவன் மகன் வரகுண பாண்டியன் (இரண்டாம் வரகுணன்) ஆகியவர்களைக் கூறுகிறது. இரண்டாம் வரகுண பாண்டியனின் மகன் இச் சாசனம் வழங்கிய பாண்டியன் பராந்தகன் வீரநாராயணன் ஆவன். இவன் கி. பி. 880 முதல் 900 வரையில் அரசாண்டான். இவனைப் பராந்தக மகாராசன், மகரகேதனன், கோச்சடையன், ஸ்ரீநிகேதனன் என்று இச் சாசனம் கூறுகிறது.

## சாசனச் செய்யுள்

ஓங்குதிரை வியன்பரப்பில் உததிஆலயமாகத்
தேங்கமழு மலர்நெடுங்கட் டிசைமகளிர் மெய்காப்ப
விண்ணென்பெய ரேயணிய மேகதாலி விதானத்தின்
றண்ணிழற்கீழ் ஸஹஸ்ரபண மணிகிரணம்விளக்கிமைப்ப
புஜங்கம புரஸ்ஸர போகி என்னும்பொங் கணை மீய்மிசைப்
பயந்தருதும் புருநாரதர் பனுவனரப் பிசை செவிஉறப்
பூதலமக ளொடுபூமகள் பாதஸ்பர் ஸனைசெய்யக்
கண்படுத்த கார்வண்ணன் றிண்படைமால் ஸ்ரீபூபதி
ஆதிபுருஷன் அமரநாயகன் அழகமைநா பிமண்டலத்துச்
சோதிமர கததுளைத்தாட் சுடர்பொற்று மரைமலர்மிசை
விளைவுறுகளங் கமணியின்மேன் மிளிர்ந்திலங்கு
[சடைமுடிஓ
டளவியன்ற கமண்டலுவோ டக்ஷமாலை ஒடுதோன்றின
சதுர்ப்புஜன்சதுர் வ்வக்த்ரந் சதுர்வ்வேதிசதுர்த்வயாக்ஷந்
மதுக்கமழ் மலர்க் கமல யோனி மனந்தந்த மாமுனிஅத்ரி

அருமரவிற் பலகாலந் தவஞ்செய்வுழி அவன்கண்ணி
லிருள்பருகும் பெருஞ்சோதி இந்துகிரணந் வெளிப்பட்ட
மற்றவற்கு மகனுகிய மணிநீள்முடிப் புதனுக்கு [னன்
கற்றைச்செங் கதிர்க்கடவுள் வழிவந்த கழல்வேந்தன்
ஏந்தெழிற்ரேள் இளனெருநா ளீசனது சாபமெய்தி
பூந்தளவ மணிமுறுவற் பொன்னுகிய பொன்வயிற்றுள்
போர்வேந்தர் தலைபனிப்ப வந்துதோன்றிய புரூரவர்ப்பின்
பார்வேந்த ரெனைப்பலரும் பார்காவல் பூண்டுய்த்தபின்
திசையானையின் கும்பகூடத் துலவியசெழு மகரக்குலம்
விசைஒடுவிண் மீன்னெடுபோர் மிக்கெழுந்த கடற்றிரைக
சென்றுதன்சே வடிப்பணிய அன்றுநின்ற ஒருவன்பின் [ள்
விஞ்சத்தின் விக்ஞாபணை யும்பெறலரு நகுஷந்மத விலா
வஞ்சத்தொழில் வாதாபி சீராவியு மஹோததிகளின்[சமும்
சுருங்காத பெருந்தன்மையும் சுநேதுசுதை சுந்தரதையு
மொருங்குமுன்ன மடிநண்ண சியோமேனி உயுதலத்தோ
மடலவிழ்ஆ மலுய்த்து மாமுனிபுரோ கிதனுகக் [ன்
கடல்கடைந் தமிர்துண்ணவுங் கயலிணைவட
[வரைப்பொறித்தும்
ஹரிஹயந தாரம்பூண்டு மவன்முடிஒடு வளைஉடைத்தும்
விரிகடலைவே லின்மீட்டும் தேவாசுரச் செருவென்றும்
அகத்தியனெடு தமிழாய்ந்தும் மிகத்திறனுடை
[வேந்தழித்துந்
திசவதனன்......நினுக்குச் சந்துசெய்துந் தார்த்தராஷ்டிரர்
படைமுழுதுங் களத்தவிய பாரதத்துப் பகடோட்டியும்
மடைமிகுவேல் வாணர்அநுஜன் வசுசாப மகல்வித்தும்
....தொன் னகரழித்தும் பரிச்சந்தம் பலகவர்ந்தும்
நாற்கடலொரு பகலாடியும் கோடிபொன் னியதிநல்கிக்
கலைக்கடலைக் கரைகண்டுபொன் பகடாயிரம் பரனுக்கீயும்
உரம்போந்ததிண் டோளரைசுக சுரம்போகித்
[துறக்கமெய்தியும்

பொன்னிமயப் பொருப்பதனில் தன்னிலையிற் கயலெழுதி
வாயல்மீ மிசைநிமிர்ந்து பலவேண்டி விருப்புற்றுங் [யும்
காயல்வாய் கடல்போலக் குளம்பலவின் கரையுயரியும்
மண்ணதிரா வகைவென்று தென்மதுரா புரஞ்செய்தும்
அங்கதனில் லருந்தமிழ்நற் சங்கம்இரீ இத்தமிழ்வளர்த்தும்
ஆலங்கானத் தமர்வென்று ஞாலங்காவல் நன்கெய்தியும்
கடிநாறு கவினலங்கற் களப்பாழர் குலங்களைந்தும்
முடிசூடி முரண்மன்னர் எனைப்பலரு முனிகந்தபின்
இடையாரையும் எழில்பேணவைக் கூட்டியினிய
[வெல்கொடிஎடுத்த
குடைவேந்தர் திருக்குலத்துக் கோமன்னர் பலரொழிந்த
காடவனைக் கருவூரில் கால்கலங்கக் களிறுகைத்த [பின்
கூடலர்கோன் **ஸ்ரீவரகுணன் குரைகழற்கோச் சடையற்**
சேயாகி வெளிப்பட்ட செங்கண்மால் **ஸ்ரீவல்லபன்** [குச்
மெய்போயந் தோளியர்கள் வித்யாதர ஹிரண்ய (கர்ப்ப)
குண்ணவல மாவென்றுங் கரைகடலீ ழங்கொண்டும்
விண்ணுள வில்லவற்கு விழிஞத்து விடைகொடுத்தும்
காடவருக் கடலாணூர்ப் பீடழியப் பின்னின்றுங்
குடகுட்டுவர் குணசோழர் தென்கொங்கர் வடபுலவர்
அடலழிந்து களஞ்சேர அமர்வல்லான் மகன்படத்தன்
களிறென்று வண்குடையதைக் கதி....காட்டி யமபுரசீலன்
ஒளிறிலைவே லதுபாய பகு...லன் உம்பர்வான்
[உலகணைந்தபின்
மற்றவற்கு மகனாகிய கொற்றவனங் கோவரகுணன்
பிள்ளைபிறை சடைக்கணிந்த விடையேறி எம்பெருமானை
உள்ளத்தி லினிதிருவி உலகங்காக் கின்றநாளில்
அரவரைசன் பல்லூழி ஆயிரமா யிருந்தலையால்
பெரிதரிதின்பொறுக்கின்ற பெரும்போஹமண்மகளைத்தன்
தொடித்தோளில் லெளிதுதாங்கிய தொண்டியர்கோன்
[றுளக்கில்லி
யடிப்படைமா றுபரணன் திருமருகன் மயிலையர்கோன்

பொத்தப்பிக் குலச்சோழன் புகழ்தருசிரீ கண்டராசன்
மத்தமா மலைவலவன் மதிமகளக் களநிம்மடி
திருவயிறு கருவுயிர்த்த ஸ்ரீபராந்தக மஹாராஜன்
விரைநாமத் தேர்வீரகர்ணன் முன்பிறந்தவேல்வேந்தனைச்
செந்தாமரைமலர்ப்பழனச் செழுநிலத்தைச்செருவென்றுங்
கொந்தகழும் பொழிற்குன்றையுங் குடகொங்கினும்
[பொக்கரணியும்
தென்மாயனுஞ் செழுவெண்கையு பராந்தகன்னுஞ்
[சிலைக்கணீர்ந்த
மன்மாய மாமிகுத்தவர் வஸ்துவா ஹனங்கொண்டும்
ஆறுபல தான்கண்டும் அமராலயம் பலசெய்துஞ்
சேறுபடு வியன்கழனித் தென்விழிஞ நகர்கொண்டுங்
கொங்கினின்று தேனூரளவும் குடகொங்க ருடல்மடிய
வெங்கதிர்வேல் வலங்கொண்டும் வீரதுங்கனைக்
[குசைகொண்டும்
எண்ணிறந்த பிரமதேயமும் எண்ணிறத்த தேவதானமும்
எண்ணிறந்த தடாகங்களும் இருநிலத்தி லியற்றுவித்தும்
நிலமோங்கும் புகழாலுந் நிதிவழங்கு கொடையாலும்
வென்றிப்போர்த் திருவாலும் வேல்வேந்தரில் மேம்பட்ட
கதிரார்கடுஞ் சுடரிலைவேல் கலிப்பகைகண்
[டகோன்(கண்டன்)
மதுராபுர பரமேஸ்வரன் மாநிநீமகர கேதநன்மன்
செங்கோல்யாண்டு ஆருவதின் மேல்நின்ற தொடர்யாண்
பொன்சிறுகா மணிமாடப் புரந்தரனது நகர்போன்ற [டில்
களக்குடிநா டதனிற்படுங் களக்குடிவீற் றிருந்தருள
ஆசிநா டதனிற்படும் பிரமதேய மகன்கிடக்கைத்
தேசமலிதிரு மங்கலமிது பண்டுபெரு நலனுட்
படுவதனைப் பாங்கமைந்த குடிகளது காராண்மை
யொடெழுந்த முதுகொம்பர்க் கொடைமுந்து கிடந்ததனைக்
கற்றிந்தோர் திறல்பரவக் களப்பாழரைக் களைகட்ட
மற்றிரடோண் மாக்கடுங்கோன் மான்பேர்த் தளியகோன்

ஒன்றுமொழிந் திரண்டோம்பி ஒருமுத்தீ யுள்பட்டு
நன்றுநான் மறைபேணி ஐய்வேள்வி நலம்படுத்து
அறுதொழிற்கள் மேம்பட்டு மறைஓர்பந் நிருவர்க்குக்
காராண்மை மீயாட்சி உள்ளடங்கக் கண்டமைத்துச்
செப்பேடுசெய்து குடுத்தருளினன் தேர்வேந்தநின்
[குலமுதல்வன்
மைப்படுகண் மடமகளிர் மணவேள்மனு ஸமானன்
வழுவாத செங்கோனடவி மண்மகட்கொரு கோவாகிக்
கழுதூரில் சித்திசெய்த கடிக்கூட னகர்காவலன்
சோமாசி குறிச்சியிது தொல்லைமேற்படி கிடந்ததனை
ஸோமபான மநோசுத்தராகிய காடகசோம யாஜியார்க்கு
யாகபோக மநுவாக எழிற்செப்பேட் டொடுகுடுத்தனன்
ஆகியஇவ் வூரிரண்டின் செப்பேடு மறக்கேட்டில்
இழந்துபோ யினவென்றும் ஏதமில்சோ மாசிகுறிச்சிச்
செழுந்தரைய நிலத்துப்படும் நிலத்தைக் கடன்றிருக்கைய
கீழ்வன மணிதருபெரு நான்கெல்லை இட்டுக்கொண்டு
மற்றதனை மதுரகர நல்லூரென்று பேரிட்டுக்
குடிநிலஞ கக்கொண்ட நிலமதுவும் அவகூடி
நிலஞகேய்ந் தவிரயிது தொண்டுசோ மாசிகுறிச்சி
மேலைபுரவேற்ப பெ(று)வதென்றும் சொல்லியவூ
[ரிரண்டுந்தம்மி
லெல்லைகலந்து கிடக்குமாதலில் ஒன்ருக வுதவுமென்றும்
வாசநாள் மலர்கமழ்பொழில் லாசிநாட்டுள் ....மாகிய
கருவமைந்த கனகமாளிகைத் திருமங்கல நகர்த்தோன்றல்
சோமாசி குறிச்சிஎன்னுங் காமர்வண் பதிகாவலன்
வடிவமைவான கோத்திரத்து பௌதாயன சூத்திரத்துக்
குடியினுகை வெளிப்பட்டு குணகணங்கட் கிடமாகி
மறைநான்கின் துறைபோகிய மாயானமவி பட்டற்குச்
சிறுவனுகிய பெருந்தகைஓன் றிசைமுகன்வெளிப்
[பட்டனையன்
தர்ம்ம வத்சலன்,

மாயநாரா யணபட்டர் மஹாபந்நி வயிறுயிர்த்த
சேயான திருத்தகைஓன் ஸ்ரீநாராயணங் கேசவன்
கல்விக்கடல் கரைகண்டு மக்ஷத்தியான மதமுணர்ந்து
சொல்வித்தகந் தனதாக்கி சத்சீலா சாரனுகி
மீனவன்வீர நாரணற்கு விஸ்வாச குணங்கட்
கான தன்மைய னுதலில்லரு ளறிந்துவிண் ணப்பஞ்செய
மதுரதர தரநாணுஎனும் வளம்பதிசோ மாசிகுறிச்சி
அதன்மேலே புரவேற்றி ஆங்கதுந்திரு மங்கலமும்
உடன்கூடப் பிடிசூழ்வித் துலகறியக் குடுத்தருளினன்
வடங்கூடு முலைமகளிர் மன்மதவேள் மனுசரிதன்.
மற்றிதனுக் காணத்தி வண்டமிழ்க் கோன்திக்கி
பொற்றடம்பூண்மணிமார்பன் பொழிற்புல்லூரெழிற்பூசுரன்
செய்யுந்து புனற்செறுவிற் செங்கழுநீர் மலர்படுகர்
வைகுந்த வளநாடன் வத்ஸகோத்ர சூடாமணி
ஹரிசரண கமலசேகரன் ஆயிரத்தஞ் னூற்றுவன்
திருமகிழி ஊயனக்கன் திசைநிறைபெரும் புகழாளன்
அவனிதலம் புழழுநிதி அவனுசூர் குலதிலகன்
தத்தலர்பூம் பொழிறழுவிச் சாலிவிளை வயல்வளத்தால்
மேதகுபுகழ் பேணவுணுட்டு பெருநலூர்வெள்ளி
[எனப்பெயரிய
திருந்துபதிக் குடித்தலைவன் தென்னவன்திரு வருள்சூடிய
பெருநலூர்வெள்ளி கிழவனுகிய பெருந்தகைசேந் தனுகிழ
நலமலிசீர் நடுவுநிலை நன்குநா யகனுகவும் [வன்
அலர்கமழும் பொனலளித்து நாட்டுக்கக் கிரமாகிய
முகி(ல்)தோய்பொழில் முசுக்குறிச்சி முற்கூடிப்
[பினேர்கார்முளைய
அகனிலத்தோர் புகழளத்து நாட்டுக்கோன் னருந்தமிழின்
பாத்தொகுதெருள் பயன்தருவோன் கொடைபயில்கற் பக
சாத்தம்படர் தெனப்பெயரிய தக்கோன் மிக்கோங்கு[சீலன்
கார்வயல்சூழ் களாத்திருக்கைப் பேரரண்சூழ்
[பெருங்காக்கூர்த்

தலைவனுகிய குலக்குரிசில் தருதேய மாணிக்கம்
கலைபயில் கிழவகோனும் கணக்கு (நருமேறயில்)
[கணக்கராகவும்
மாசில்வான் குடித்தோன்றிய ஆசிநாட்டு நாட்டாரும்
மச்சுறுபர மன்னுவந்த நெச்சுறநாட்டு நாட்டாரும்
உடனுகிநின் றெல்லைகாட்டப் பிடிசூழ்ந்த
[பெருநான்கெல்லை
கீழெல்லை புனல்புவனி புத்தேள்மா ருதம்கனல்
இருசுடர் எஜமானன் ஆகியதிற லஷ்டமூர்த்தி
அமரர்க்கு மறிவரிஓன் வேகவெள் விடைபாரதி
பீஷ்மலோ சனன்மகிழ்ந்து(ங் கோல்)பெய்வான்
[றிருவிருப்பூர்
முழிநின்று தென்கிழக்கு நோக்கிப்போயின
[வெள்ளாற்றுக்கும்
ஆயினபெரு நல்லூர்ச்சிறைக்கும் பன்கள்ளி முரம்புக்கும்
வண்ணத்தார் வளாகத்தின் நன்குயர்பரம் பீட்டுக்கும்
நலமிகுகள் ளிக்குறிச்சி மேலைக்கள்ளி முரம்புக்கும்
மேற்குநடை யாட்டிகுளத்தில் சாலநீர் கோளுக்கும்
இக்குளத் தின்தென் கொம்பின் மறுவாக்கும்
பாங்கமைவடு பாறைக்கும் பயந்தருகுடி நடைஏரி [கும்
ஓங்கியவன குளத்தகம் பாலலையொழுகிய வனபெருப்புக்
இப்பெருப்பை,
ஊடறுத்துச் செவ்வடு செழுங்கிழக்கு நோக்கி
வாரிக்கொள்ளிக் கேய்போயின வழியதற்கும் வயல்மலிந்த
வாரிக்கொள்ளிக் குளத்திநீர் கோளுக்கும் அடிகுழிக்கும்
தென்னெல்லை [மேக்கும்
திருமரு நிலப்பாறைக்கும் செஞ்சாலி விளைகழனி
ஏரியணை
வடகடைக் கொம்பிற்கும் ஒழுகுகள்ளி முரம்புக்கும்
நீருடை அரைய்ச்சுனைக்கும் ஊருடையான்
[குழித்தென்கடைக் கொம்புக்கும்

நெடுமதிற்கற் ருழ்வுக்கும் நீர்மாற்றுந் திடலுக்கும்
கடிகமழ்பூந் தார்க்கணத்தார் குழிக்கும் வடமேலெல்லை
கூற்றன்குழி மீழ்குழியேய் போயினபடு காலுக்கும்
போற்றரு மாருதமாணிக் குளத்துக்கரைப் பெருப்புக்கும்
நாடறிநங் கையார் குழியின்மீய் குழியேய்
காடதேரிக்கேய் போயின வழிக்கு மேதமில்
லெறிச்சில் வழிக்கும் எழிலமை நெச்சுறநாட்'
டோலைகுளத் தெல்லைக்கும் கிழக்குமன் வடவெல்லை
வளமிக்க மருதலி இளநெச்சுறத் தெல்லைக்கும்
வெள்ளாற்றுக்கும் தெற்கும் இவ்விசைத்த
பெருநான்கெல்லை உண்ணிலமொன் ருெழியாமல்
காராண்மை மீயாட்சி உள்ளடங்கக் கண்டமைத்துச்
சீர்சான்ற திசையனைத்தின் னெல்லைவாய்க் கன்ருட்டித்
தருமங்களி ரொன்றுபயில் திருமங்கலத்துச்சபையார்க்கும்
தொல்லைவண் சோமாசி குறிச்சிமல்லன்
[மாமறையோர்க்கும்
பிரமதேய ஸ்திதிவழாவகைய்ப் ப்ருதுவியின்கண்
[ணிலைபெறுத்து
தர்ம்மப ராயணனுகிய தராபதிகொடுத் தருளிப்பின்
ஈண்டியபெரும் புகழேயுங் சாண்டில்ய கோத்திரத்து
எண்ணுர்புகழ் ஏகசந்தி காத்யாயன கோத்திரத்து
வரிவண்டு மதுநுகர்பொழிற் சிரீவல்லப மங்கலத்து
செப்பரிய செழுஞ்செல்வத்துப் பமவிரால் மேதக்க
கலைபயில் கணஸ்வாமி பட்டற்கு தற்பெருமா மதலை
உலவுகீர்த்தி யோகேஸ்வர பட்டற்கு விசிஷ்டனுகிய
திருவடிச் சோமாசி யென்னுஞ் சீர்மறையோன்
[மகள்பயந்த
திருமருசீர்ச் சிரீமாதவன் ஸ்ரீமாதவ சரணேஸ்வரன்
வேதவே தாந்தங்களும் விவிதாசாரமும் தன்னேடுபிற
ரோதிக்கேட்டு தரம்பெய்த நீரைக்காமா சால்யனுகி

பெருந்தகைப் பிரமதேய மிதற்கு பிரஸஸ்தி செய்தோற்கு
திருந்தியநன் பெருவயக்கலும் செழும்புனற்
[பருத்திவயக்கலும்
இவ்வயல்களிக் கிணறிரண்டும் அக்கிணற்றுல் விளைநில
மற்றவ்வூர் மாசபைஓர் பெற்றபரிசேய் கொடுத்தபின் [னும்
சீரியசெழும் பணிஇதற்குச் செப்பேடு வாசகத்தை
ஆரியம்விராயத் தமிழ்தொடுத்த மதிஓற்கும் அதுஎழுதிய
கற்பமைந்த கரதலத்துச் சிற்பமார்த் தாண்டற்கும்
மண்ணெங்கும் நிறைந்தவான் புகழ்கண்ணங் கீரன்வயக்
திருவுலகு நற்சிங்க குளவளால் மருவியசோ [கல்
மாசிவயக்கல் லென்னும் வயல்களிற் கிணறுகள்ளொரு
மூன்றும் எக்காலமும் மன்னுக்கிணற்றில் வயலணைத்தும்
இறையிலி யாகவும் சொல்லிய இக்கிணறு
மூன்றின் னிடைக் கிடந்ததொன் னிலமுழுவதும்
இல்லவளா லதுவாகவும் எழின்மிக்க தோட்டமாகவும்
பால்லெருமை பெருவராலுகள் புனற்பதி இதனிற்
கோல்லுரிமையிற்,
செம்பாகமும் மஹாசபை குறிப்பொடு கொடுத்துப்
பகல்செய்யும் பருதிஞாயிறும் இரவுச்செய்யும் பனிமதிஉம்
அகல்ஞாலமும் உளவளவும் செப்பேடுசெய்து
[கொடுத்தருளினன்
மணிநீழ்முடி மன்பணிகழல் வசுழாதிப வாசுதேவன்
அணிநீள வுய்த்தஹிதாகனி அசலாசலன் நவர்ஜ்யன்
கொந்தலர்தார் கோச்சடையன் கூடற்கோன் குருசரிதன்
செந்தமிழ்க்கோன் ஸ்ரீநிகேதனன் ஸ்ரீபராந்தக மகராஜன்
தேர்மிகுமாக் கடற்றுனைத் தென்னவர்கோன் திருவருளாற்
சீர்மிகுசெப் பேட்டுக்குச் செந்தமிழ்ப்பாத்
[தொடைசெய்தோன்
கிர்தஉகமெனும் ஊழிக்கண் அவிர்சடைமுடி
[அரன்வேண்ட
நற்பரசு நிர்ம்மித்தவ னளிர்சடைமே லலங்கல்பெற்ற

மாமுனிவன் வழிவந்தோன் பாமருபண் டிதராசன்
பொன்வரன்றி மணிவரன்றி அகில்வரன்றிக்
[கரைபொருபுனற்
றென்வைய்கை வளநாடன் செழுங்குண்டூர்
[நகர்த்தோன்றல்
பாண்டித்தமி ழாபரண னென்னும்பல
[சிறப்புப்பெயரெய்திய
பாண்டிமா ராயப்பெருங் கொல்லனுகிய சிரீவல்லவன்.
தென்னவர்தந் திறலாணைச் சிலையொடுபுலி கயலிணைமன்
பொன்னிமையச் சிமையத்து விறற்கருவி இற்றைக்குந்
தொழில்செய்து வந்தவர்பின் னேன்செயல்பல
[பயின்றோர்முன்னேன்
திருமலிசாசன மிதற்குச் செழுந்தமிழ்பா டினேனற்றை
நிருபசேகரப் பெருங்கொல்லன் நீள்புகழ் நக்கனெழுத்து.

குறிப்பு :—அடி 48. களப்பாழர் என்பது களப்பாளர் என்பதன் திரிபுபோலும். களப்பாழர் அல்லது களப்பாளர் என்பவர் களப்பரர் (களபரர்) என்னும் அரசரைக் குறிக்கிறது. கடைச் சங்க காலத்துக்குப் பின்னர், களபரர் என்னும் அரசர் வடக்கிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து சேர, சோழ, பாண்டியர்களை வென்று அரசாட்சியைக் கைக்கொண்டனர். சிலகாலத்துக்குப் பிறகு, கடுங்கோன் என்னும் பாண்டிய அரசன் வெளிப்பட்டுக் களபர அரசனை வென்று மீண்டும் பாண்டியர் ஆட்சியை நிறுவினன். இதைத்தான், "கடிநாறு கவினலங்கற் களப்பாழர் குலங் களைந்தும்" என்று இச் சாசன அடி கூறுகிறது. இச் செய்தியையே 95, 96-ஆம் வரிகளில், "களப்பாழரைக் களைகட்ட மல்திரள்தோள் மாக்கடுங்கோன்" என்று மீண்டும் இச் சாசனம் கூறுகிறது.

அடி 51. இதில் கூறப்படுகிற காடவன் என்பவன் பல்லவ அரசன் ஆவன்; இவன் இரண்டாம் நந்திவர்மனை பல்லவ மல்லன். இவனை வென்ற பாண்டியன் வரகுண மகாராசன் (முதலாம் வரகுணன்).

இச் சாசனச் செய்யுளைப் பாடியவன் பண்டிதராசன், பாண்டித் தமிழாபரணன், பாண்டிமாராயப் பெருங்கொல்லன் என்னும் சிறப்புப் பெயர்களையுடைய சிரீவல்லபன் என்றும், அவன் வைகையாற்றங்கரையில் இருந்த குண்டூர் நகரத்தில் இருந்தவன் என்றும் 229—233-ஆம் அடிகள் தெரிவிக்கின்றன.

இச் செப்பேட்டைச் செதுக்கியவன், நக்கன் என்னும் இயற்பெயரையுடைய நிருபசேகரப் பெருங்கொல்லன் என்னும் சிறப்புப் பெயரையுடையவன் என்று 238-ஆம் வரியினால் அறிகிறோம்.

124, 126, 161, 205, 234-ஆம் வரிகளில் பெருந்தகைஓன், திருத்தகைஓன், அறிவறிஓன், மாசபைஓர், சிலைஒடு என்று எழுதப்பட்டிருத்தல் காண்க. இது சாசனம் எழுதியவரின் பிழைபோலும்.

# BIBLIOGRAPHY


Epigraphia Carnatica Vol. X

Epigraphia Indica Vols. V, XI, XII, XVIII, XXIII

Inscriptions (Texts) of Pudukkottai State (I. P. S.)

Journal of South Indian Association Vol. II

South Indian Inscriptions (S.I.I.) Vols. I, IV, VI, VII, VIII

Tamil and Sanskrit Inscriptions.

Tiruppathi Devasthanam Inscriptions (T. D. I.) Vol. I

Travancore Archaeological Series (T. A. S.) Vols. I, V[illegible]

செந்தமிழ், தொகுதி : 4, 5, 6, 14, 41